வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu
வார மலர்

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 19.02.2023 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 72 | பக்கங்கள் : 20






**07** தத்தளிக்கும் புளகாங்கிதம் தத்தளிக்கும் நிறைவு?



**08** நெடுமாறனின் அறிவிப்பினால் யாருக்கு பயன்?



**09** பிரபாகரன் மரணம்: எத்தனை சந்தர்ப்பங்களில் மறுக்கப்பட்டுள்ளது?



**10** நெடுஞ்சாலையில் பயணிக்கும் கட்டாக்காலிகள் அரசாட்சி!

# அமெரிக்காவிலிருந்து வந்தது சி.ஐ.ஏயின் உயர்மட்ட குழுவா?

## கடவுச்சீட்டுகள்கூட சோதிக்கப்படவில்லை சிங்கள ஊடகங்கள் கடும் சந்தேகம்



கொழும்பு, பெப். 19

அமெரிக்க விமானப்படையின் இரண்டு விமானங்களில் அண்மையில் கொழும்புக்கு விஜயம் மேற்கொண்ட அமெரிக்க உயர்மட்டக் பாதுகாப்புக் குழு தொடர்பில் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் பலத்த சந்தேகத்தைக் கிளப்பியிருகின்றன. 19



மகா சிவராத்திரி தினமான நேற்று நாவற்குழி திருவாசக அரண்மனையில் சிறுமி ஒருவர் சிவலிங்கத்துக்கு தண்ணீரால் அபிஷேகம் செய்கிறார்...

## மின்கட்டணத்துக்கு எதிராக நேற்றும் போராட்டங்கள்

கொழும்பு, பெப். 19

மின்கட்டண உயர்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று முன்தினம் இரவும் நேற்றும் பல பிரதேசங்களில் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

உயர்த்தப்பட்ட மின் கட்டணத்தை படிப்படியாக குறைக்க வேண்டும் என பொது மக்களும், வணிகர்களும் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதற்கிடையில், மின் கட்டண உயர்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று முன்தினம் இரவு பல பகுதிகளில் தீபம் ஏற்றி போராட்டம் நடத்தப்பட்டது.

மின் கட்டண அதிகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து காலி - பலபிட்டிய பிரதேசத்தில் பிரார்த்தனையொன்று 19



## திலீபன் நினைவிடத்தில் விக்கி!

யாழ்ப்பாணம், பெப். 19

தமிழ் மக்கள் கூட்டணியினர் தியாக தீபம் திலீபன் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தி சர்வ மதத் தலைவர்களைச் சந்தித்து கலந்துரையாடி ஆசிகளைப் பெற்றுள்ளனர்.

கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான க.விக்னேஸ்வரன் தலைமையில் சட்டத்தரணி மணிவண்ணன் உட்பட கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் மற்றும் வேட்பாளர்கள் ஆகியோர் இந்த சந்திப்புகளில் கலந்து கொண்டு மதத் 19

## திட்டமிட்டபடி மார்ச் 9 ஆம் திகதி தேர்தல் நடைபெறுவது சந்தேகம்!

### விசேட கடமைகளை இடைநிறுத்த பணிப்பு

கொழும்பு, பெப். 19

திட்டமிட்டபடி மார்ச் 9ஆம் திகதி உள்ளூராட் சித் தேர்தல் நடைபெறுவது சந்தேகம் என கொழும்பு அரசியல் வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன.

தேர்தலுக்காக தேர்தல் அலுவலகங்களால் மேற்கொள்ளப்பட்டு வந்த விசேட பணிகளை உடனடியாக இடைநிறுத்துமாறு தேர்தல் திணைக்களம் மாவட்டக் 19

## சீனாவின் கடன் சலுகை அனுமதியின்றி இலங்கைக்கு நாணய நிதியத்தின் கடன்!

கொழும்பு, பெப். 19

சர்வதேச நாணய நிதியம், இலங்கையின் மிகப்பெரிய இரு தரப்புக் கடனாளியான சீனாவின் கடன் மறுசீரமைப்பு ஆதரவுக்கான முறையான உத்தரவாதம் இல்லாமல்கூட, இலங்கையின் பிணையெடுப்பை அங்கீகரிப்பது குறித்து பரிசீலித்து வருகிறது என்று விவாதங்களை நன்கு அறிந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

உத்தியோகபூர்வ நிலுவைகளுக்கு கடன் வழங்குவதில் அரிதாகவே பயன்படுத்தப்படும் 19

*2024 இல் தேர்தல்!*

## வாக்குகளை பயன்படுத்தி மாற்றத்தை ஏற்படுத்தும் சூழல் அடுத்த வருடம் ஏற்படும்!

### தேர்தல் குறித்து கோடி காட்டினார் ஜனாதிபதி

கொழும்பு, பெப். 19

பொருளாதாரத்தை மீட்டெடுப்பதன் மூலம் அடுத்த வருடம் மக்கள் தமது வாக்குகளைப் பயன்படுத்தி நாட்டில் தேவையான மாற்றங்களை ஏற்படுத்தி தமக்கான எதிர்காலத்தை உருவாக்குவதற்கான சூழல் ஏற்படுத்தப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு 19



## ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை இலங்கை இழக்கும் ஆபத்து!

கொழும்பு, பெப். 19

பயங்கரவாத தடைச் சட்டம் காரணமாக இலங்கை ஐரோப்பிய ஒன்றியத்தின் வரிச் சலுகையை இழக்கும் ஆபத்து இருப்பதாக இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் ஹொல்கர் சூபேர்ட் தெரிவித்தார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை சர்வதேச தரத்துக்கு ஏற்ப மாற்றுவோம் என இலங்கை பல தடவை ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் ஜேர்மனிக்கும் வாக்குறுதியளித்துள்ளது.

இந்த தருணத்தில் இலங்கையால் அதனை இழக்க முடியாது எனவும் இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் குறிப்பிட்டார். (அ)




**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது…!

உள்ளூராட்சி தேர்தலுக்கான பரப்புரை வேகம் பெற்று வருவதைக் காணமுடிகின்றது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற மூன்று கட்சிக் கூட்டணியிலிருந்து வெளியேறித் தமிழ் அரசு கட்சி தனித்து போட்டியிடுவதால், அது இப்போது தனி ஒரு கட்சி.

கூட்டமைப்பிலிருந்து தமிழ் அரசு கட்சி வெளியேறிய பின்னர், மீதமிருந்த புளொட், ரெலோ ஆகிய இரண்டு கட்சிகளும் மேலும் மூன்று கட்சிகளையும் இணைத்துக்கொண்டதனால், தமிழ் தேசிய கூட்டமைப்பு இப்போது ஐந்து கட்சிக் கூட்டணியாகப் பரிணமித்திருக்கின்றது. இது தொடர்பான முழுமையான விளக்கத்தைத் தமிழ் மக்களுக்கு வழங்கும் முகமாக நீண்ட அறிக்கை ஒன்றைப் பிரசுரமாகவும் வெளியிட்டுள்ளது தமிழ் தேசிய கூட்டமைப்பு. ஒருவேளை, தேர்தல் முடிவடைந்த பின்னர், தாமும் கூட்டமைப்பில் இணைவது என்று இலங்கைத் தமிழ் அரசு கட்சி முடிவெடுத்தால் - அதனையும் உட்சேர்க்கக் கூட்டமைப்பின் தலைமைத்துவச் சபை இணங்கினால் - அதன் பின்பு, ‘குத்துவிளக்கு’ சின்னத்தின் கீழ் தமிழ் கூட்டமைப்பு ஆறு கட்சிக் கூட்டணியாகும். ஆனால், இப்பொழுது, தமிழ் அரசு கட்சி தமிழ் கூட்டமைப்பில் ஓர் அங்கம் அல்ல. அது ஓர் தனிக் கட்சி. தனித்தே போட்டியிடுகின்றது.

தமிழ் அரசு கட்சியினரோ, தங்கள் ‘வீடு’ சின்னத்திற்கு மட்டும்தான் மக்கள் வாக்குப் போடுகின்றார்கள் என்றும், தமது சின்னத்திற்கு முன்னால் ‘தமிழ் தேசிய கூட்டமைப்பு’ என்ற பெயரே ஒரு பொருட்டல்ல என்றும் தலைக்கனம் கொண்டே பிரிந்துபோக முடிவெடுத்தனர். ஆனால், பிரிந்து போன பின்னரே, மக்கள் மனங்களின் உண்மை நிலை அவர்களுக்கு உறைத்தது போல உள்ளது. அதனால் - திடீரென, மேடைகளில் ஏறிய தமிழ் அரசு கட்சியினர் குத்துக்கரணம் அடித்து பேசத் தொடங்கினர். தாங்கள் பிரிந்து நிற்பது தேர்தலுக்கான ஒரு “தொழில்நுட்ப உத்தி” என்றும், தேர்தல் முடிந்ததும் மீண்டும் கூட்டமைப்பாக இணைந்தே இயங்குவோம் என்றும் பிரச்சாரம் செய்யத் தொடங்கினர். பிரிந்து சென்று தனித்து நிற்பதற்கு முடிவு எடுத்த போது காட்டிய ‘தினாவெட்டு’, ‘கெத்து’ என்பன இப்போது காணாமல் போய்விட்டன. அவற்றுக்குப் பதிலாக, தமிழ் அரசு கட்சி தலைவர்களின் முகங்களில் இப்போது ஒருவித பயமும் பதற்றமுமே தென்படுகின்றன.

இவ்வாறாக அவர்கள் குத்துக்கரணம் அடித்து ‘தேர்தலுக்குப் பின்பு சேருவோம்’ என்று மாற்றுக் கதை சொல்லத் தொடங்கிய போதும், அவர்களின் இந்தக் கதை அளப்பை நம்பும் நிலையில் தமிழ் மக்கள் இல்லை என்பதையும் அவர்கள் உணர்ந்து கொள்ள அதிக நாட்கள் செல்லவில்லை. பிரிந்து நின்ற தமிழ் தேசிய அரசியல் கட்சிகளை ஓரணியாக நிற்க வைப்பதற்காகத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற கூட்டணியை உருவாக்கினர் விடுதலைப் புலிகள். ஆனால், 2010இற்குப் பின்னர், புலிகள் இல்லாத தமிழ் அரசியலில், தமிழ் அரசு கட்சியிலுள்ள சிலரின் தன்னிச்சையான நடவடிக்கைகள் காரணமாக, ஒவ்வொரு கட்சியாகக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறி, இன்று அவை பத்துக்கட்சிகளாக இயங்கிவருகின்றன. இத்தகைய ஒரு பின்னணியில் - ‘இந்த கட்சிகள் அனைத்துமே மீண்டும் ஒன்றுபடமாட்டார்களா? அதனைச் செய்விக்க யாராவது வரமாட்டார்களா?’ என்று தமிழ் மக்கள் ஏங்கிக்கொண்டிருந்த வேளையில், தமிழ் அரசு கட்சியோ, மக்களின் அந்த ஏக்கத்திற்கு மதிப்பளிக்காமல், இருந்த கூட்டமைப்பை மேலும் பிரித்து, தாங்களும் தனித்துப் போவது என்று முடிவெடுத்தது.

தமது இந்த முடிவு, தமிழ் மக்களுக்குத் தமது கட்சி மீது சினத்தையும் கோபத்தையும் வரவழைத்திருக்கின்றது என்பதை அறிந்துகொண்டதாலோ என்னவோ, இப்போது, தமிழ் அரசு கட்சியினர், மற்றுமொரு புதிய கதையைப் பரவலாக அவழ்த்துவிட்டு வருகின்றனர். இப்போது, தாங்களும் தமிழ் தேசியக் கூட்டமைப்பில்தான் இருப்பதாக காட்டிக் கொள்வதோடு, தமிழ் கூட்டமைப்பின் சின்னம் இப்போதும் ‘வீடு’தான் என்றவிதமான ஒரு பிரச்சாரத்தையும் அவர்கள் தொடங்கியிருக்கின்றார்கள். கிளிநொச்சியில் இருந்து தமிழ் அரசு கட்சி ஒட்டத் தொடங்கியுள்ள சுவரொட்டிகளில் தமிழ் அரசு கட்சி தன்னை தமிழ் தேசிக் கூட்டமைப்பு என்றும் கூட்டமைப்பின் சின்னம் ‘வீடு’தான் என்றும் பொய்யாகப் பிரகடனப்படுத்தியிருக்கின்றது. அதே போல, வடக்கு - கிழக்கு எங்கும், தமிழ் அரசு கட்சியின் பல உள்ளூர் குறுந்தலைவர்கள், தாம் தயாரித்து வெளியிட்டுள்ள தேர்தல் பரப்புரை அட்டைகளிலும் பிரசுரங்களிலும் ‘வீடு’ சின்னத்தைப் போட்டு தமிழ் தேசிய கூட்டமைப்பு என்று பிரசுரித்துள்ளார்கள். இவ்வாறான ஒரு ‘வெட்கம்கெட்ட’ பிரச்சாரத்தைக் கிளிநொச்சியில் தொடங்கி, மக்களை ஏமாற்றும் அரசியலைத் தனது கட்சியின் புதிய வேட்பாளர்களுக்கும் கற்பிக்க முன்வந்துள்ள வாத்தியாருக்கு, ‘கூட்டமைப்பு’ என்பதற்கு விளக்கம் தெரியாமலும் இருக்காது. ஒன்றுக்கும் மேற்பட்ட கட்சிகள் சேர்ந்தால்தான் அது கூட்டமைப்பு. தனிமரம் ஒருபோதும் தோப்பு ஆகாது.

**- ஊர்க்குருவி**

# விபத்தில் உயிரிழந்த மகனின் சிறுநீரகத்தை தானமாக வழங்கிய பெற்றோர் கௌரவிப்பு



யாழ்ப்பாணம், பெப். 19

விபத்தில் உயிரிழந்த தமது மகனின் சிறுநீரகத்தை தானமாக வழங்கிய பெற்றோர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அதிதிகளாக வரவேற்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

சடுதியான இறப்பின் பின்னர் சிறுநீரகம் போன்ற உறுப்புகளை தானம் செய்வதனால், சிறுநீரக தேவையை எதிர்பார்த்து, அவதியுறும் இன்னொருவருக்கு உயிர் வாழ சந்தர்ப்பம் ஏற்படுகிறது.

அந்த வகையில் இச் சிறுநீரக தானத்தை உயிரிழந்தவரது பெற்றோரின் ஒப்புதலுடன், அவர்களது விருப்பத்தின் பெயரில் இன்னொருவருக்கு தானமாக வழங்கப்பட்ட நிலையில், சிறுநீரக செயலிழப்பினால் அவதியுற்ற நபரொருவருக்கு சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சையின் மூலம் அந்த சிறுநீரகம் வெற்றிகரமாக பொருத்தப்பட்டது.

இந்நிலையில் அறுவைச் சிகிச்சையளிக்கப்பட்ட நபர் தற்போது உடல் நலம் பெற்றுள்ளார்.

இதன் காரணமாக சிறுநீரக தானம் செய்த பெற்றோர் அண்மையில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அழைக்கப்பட்டு, அவர்களால் மருத்துவ மனையின் சிறுநீரகக் குருதி சுத்திகரிப்பு பிரிவில் விரிவாக்கம் செய்யப்பட்ட மேலும் மூன்று சிறுநீரக சுத்திகரிப்பு இயந்திரங்கள் அடங்கிய பகுதி திறந்து வைக்கப்பட்டது.

இந்த மூன்று சிறுநீரக சுத்திகரிப்பு இயந்திரங்களை வழங்கியவர்களுக்கு வைத்தியசாலை சார்பில் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி நன்றி தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதியர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள் மற்றும் மருத்துவ பீடாதிபதி ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

# கோட்டாபய 10 நாட்கள் மியன்மாரில் தங்குவார்



கொழும்பு, பெப். 19

மலேசியாவின் கோலாலம்பூருக்குச் சென்ற முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, 10 நாட்கள் மியன்மாரில் தங்கியிருப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னதாக, அவர் சீனாவுக்கான விஜயத்தை மேற்கொண்டு மலேசியா சென்றுள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

எவ்வாறாயினும், முன்னாள் ஜனாதிபதி மியன்மார் சென்றுள்ளதாகவும், அங்கு அவர் மத ஸ்தலங்களில் வழிபாடுகளில் ஈடுபடவுள்ளதாகவும் அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அண்மையில், கோட்டாபய ராஜபக்ஷவும் அவரது மனைவி அயோமா ராஜபக்ஷவும் கட்டுநாயக்க விமான நிலையத்தின் விசேட விருந்தினர் முனையத்தின் ஊடாகவோ, சாதாரண பயணிகள் முனையத்தின் ஊடாகவோ செல்வதற்கான வாய்ப்பு இருந்தபோதும், அவர்கள் சரக்கு முனையத்தினூடாக மலேசியாவிற்கு புறப்பட்டுச் சென்றனர். (அ)

# நடந்தது என்ன? தெளிவுபடுத்துகின்றது கிழக்கு பல்கலைக்கழகம்

கடந்த ஏழாம் திகதி வெளிவந்த ‘இப்படியும் நடக்கின்றது’ பத்தியில் அண்மைக் காலமாக சீனத் தூதரகம் வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களுடன் நெருக்கமாகி வருவது குறித்து எழுதியிருந்தேன். அதில், கிழக்கு பல்கலைக்கழகத்தி லிருந்து புலமைப்பரிசிலுக்காக மாண வர்களின் பெயர்களைத் தெரிவு செய்து தருமாறு தூதரகத்தால் கேட்கப்பட்ட போது, பல்கலைக்கழகம் ஒரு பட்டிய லைத் தயார் செய்து அனுப்பியது என் றும், ஆனால், அதில் இருந்த தமிழ் சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களை மாத்திரம் தெரிவுசெய்து அவர்களுக்குப் புலமைப் பரிசிலை வழங்கியது தூதரகம் என்றும் எழுதப்பட்டிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

கிழக்கு பல்கலைக்கழகத்தின் பதிவாளர் அதுதொடர்பாகத் தெளிவூட்டும் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார் -

“2022 புலமைப்பரிசிலுக்கான நிதியானது சீன தூதரகத்தினால் கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு நேரடியாக வழங்கப்பட்டது. இந்த புலமைப் பரிசிலுக்காக மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு, விண்ணப்பித்தவர்களின் குடும்ப பொருளாதார நிலைமைகள் மற்றும் வேறு நிதி உதவிகளைப் பெறாத மாணவர்கள் என்பவற்றின் அடிப்படையில் பயனாளர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். அனைத்து பீடங்களையும் சேர்ந்த மூவின சமூகங்களையும் சார்ந்த 143 மாணவர்கள் பல்கலைக்கழகத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்டு மாதாந்தம் ஒரு குறிப்பிட்ட தொகையானது ஏழு மாதங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது” என்று பதிவாளர் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

**- ஊர்க்குருவி**

# ‘13’ ஐ அமுல்படுத்த இடமளிக்கமாட்டோம்!

## பௌத்த பிக்குகள் விடாப்பிடி




கொழும்பு, பெப். 19
அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும் என பாராளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் கூட அதனை அமுல்படுத்துவதற்கு ஒருபோதும் இடமளிக்கபோவதில்லை என பௌத்த பிக்குகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன், இதனை செய்வதற்கு முற்படும் ஜனாதிபதி மற்றும் அரசியல்வாதிகளின் அரசியல் முகவரியும் இல்லாது செய்யப்படும் எனவும் அவர்கள் பகிரங்கமாக மிரட்டல் விடுத்துள்ளனர்.

ஊடகவியலாளர் சமுதித்தவுடன் நடைபெற்ற நேர்காணலொன்றின் போதே உலப்பனே சுமங்கல தேரர் மற்றும் அக்மீமன தயாரத்ன தேரர் ஆகியோர் இவ்வாறு அறிவித்துள்ளனர்.

அக்மீமன தயாரத்ன தேரர் ஹெல உறுமயவின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினராக செயற்பட்டவர். தற்போது சிங்கள ராவய அமைப்பை வழிநடத்துகின்றார். உலப்பனே சுமங்கல தேரர், அதிபர் - ஆசிரியர்களின் சம்பள போராட்டத்தின்போது முன்னின்று செயற்பட்டவர்.

13 இற்கு எதிராக மகாசங்கத்தினர் கொழும்பில் நடத்திய போராட்டத்தை ஏற்பாடு செய்வதற்கு முன்னின்று செயற்பட்டவர்கள்.

“விக்னேஸ்வரன் ஒரு கள்ளத் தோணி. அவருக்கு என ஒரு இனம் இல்லை. வடக்கு மக்களுக்காக கதைக்கின்றார். ஆனால் கொழும்பு 7 இல் வாழ்கின்றார். அவரின் பிள்ளைகள் சிங்களவர்களையே மணம் முடித்துள்ளனர். படித்தது றோயல் கல்லூரி. கதைப்பது ஆங்கிலம். இப்படியானவர்கள் தான் கள்ளத் தோணி.

விக்னேஸ்வரன் சில்லறைத்தனமான மனிதன். ஒற்றையாட்சி அரசமைப்பில் சத்தியப் பிரமாணம் செய்து விட்டு, சமஷ்டி பற்றி கதைக்கின்றார். அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்” எனவும் குறித்த தேரர்கள் குறிப்பிட்டனர்.

13 ஆவது திருத்தச்சட்டத்தை நாம் எதிர்க்கின்றோம். பொலிஸ், காணி அதிகாரங்கள் வழங்கப்பட்டால் நாட்டில் இரத்த ஆறு ஓடக்கூடும். அதனால்தான் 13 ஐ கொண்டு வந்த ஜே.ஆர்.கூட இந்த அதிகாரங்களை பகிரவில்லை.

13 ஐ அமுல்படுத்த வேண்டும் என பாராளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றினால்கூட அது அமுலாவதற்கு மகாசங்கத்தினர் இடமளிக்கமாட்டார்கள். 13 ஐ வழங்க முற்படும் அரசியல்வாதிகளும் முகவரியற்றுபோவார்கள். ” - எனவும் தேரர்கள் எச்சரிக்கை விடுத்தனர்.

(அ)

# செப்ரெம்பர் மாதம் வரை தடையில்லா மின்சாரம்!

கொழும்பு, பெப். 19
இந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் வரை தடையில்லா மின்சாரம் வழங்குவதற்கு தேவையான நிலக்கரியை கொள்வனவு செய்துள்ளதாக நிலக்கரி கம்பனி (பிரைவேட்) லிமிடெட் தெரிவித்துள்ளது.

நிலக்கரி நிறுவனத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் 13 ஏற்றுமதிகளுக்கான கொடுப்பனவுகள் நிறைவடைந்துள்ளதாக உறுதிப்படுத்தினார்.

இலங்கை வந்த 13ஆவது கப்பல் இன்று இறக்கப்படவுள்ள நிலையில் 12ஆவது கப்பலில் இருந்து நிலக்கரி தற்போது இறக்கப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டுக்கான 36 நிலக்கரி ஏற்றுமதியை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிலக்கரி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் மின்சாரக் கட்டண உயர்வுக்கு பின்னர், மின் உற்பத்திக்குத் தேவையான நிலக்கரியை கொள்வனவு செய்வதற்கு உள்ளூர் வங்கிகள் மூலம் நிதியுதவி செய்ய முடியும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

புதிய வருவாய்க் கணக்கீட்டின் அடிப்படையில் அவர்கள் வங்கிகளில் கடன் பெற முடியும் என்று அமைச்சர் கூறினார்.(அ)

# சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு!

கொழும்பு, பெப். 19
ஜனவரி முதல் இதுவரையிலான காலப்பகுதியில் 157,230 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இது மேலும் அதிகரித்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

பெப்ரவரி மாதத்தில் இதுவரை 54,000க்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர்.

ரஷ்யாவிலிருந்து அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் வந்ததாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதன்படி, சராசரியாக ஒரு நாளைக்கு 3,906 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாகவும் ரஷ்யா, இந்தியா, இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் இருந்து அதிக எண்ணிக்கையிலான சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# தேசிய மக்கள் சக்தி ஐ.நாவிடம் முறையீடு

கொழும்பு, பெப். 19
உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கம் மேற்கொண்டு வரும் பல்வேறு செயற்பாடுகள் குறித்து தேசிய மக்கள் சக்தி ஐக்கிய நாடுகள் சபைக்கு அறிவித்தது.

மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகத்துக்குச் சென்று கடிதம் ஒன்றை கையளித்தார்.

தேர்தல் தொடர்பான அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தொடர்பில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார



திஸாநாயக்கவினால் வழங்கப்பட்ட கடிதம், ஐக்கிய நாடுகள் சபையின் காரியாலயத்தில் கையளிக்கப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

(அ)

# திறைசேரிச் செயலாளர் மீது விரைவில் சட்ட நடவடிக்கை

## மரிக்கார் எம்.பி. எச்சரிக்கை

கொழும்பு, பெப். 19
தேர்தலுக்கு இடையூறு விளைவிக்க முயற்சித்தமைக்காக திறைசேரி செயலாளர் மற்றும் அரச அச்சக அதிகாரி ஆகியோர் சட்ட நடவடிக்கையை எதிர்கொள்வார்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், அமைச்சினால் வெளியிடப்படும் எந்தவொரு சுற்றிக்கைக்கும் மேலான நாட்டின் அதியுயர் சட்டம், அரசியலமைப்பு என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆகவே பாராளுமன்றம், அமைச்சரவை, அமைச்சுக்களின் செயலாளர்கள் அல்லது அரச நிறுவனங்களின் தலைவர்கள் அரசியலமைப்பை மீற முடியாது என்றும் மரிக்கார் குறிப்பிட்டார்.

வரவு - செலவுத் திட்டத்தில் ஏற்கனவே உள்ளூராட்சித் தேர்தலுக்கு நிதி ஒதுக்கி பாராளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ள நிலையில் நிதியை நிறுத்தி வைக்க திறைசேரிக்கு சட்டபூர்வ உரிமை இல்லை



என்றும் அவர் குறிப்பிட்டார்.

நிதி இல்லை என்றால், சுதந்திர தின நிகழ்வுக்கு எதிர்வரும் பெரஹெரவுக்கும் திறைசேரி எவ்வாறு நிதி வழங்கியது என்றும் எஸ்.எம். மரிக்கார் கேள்வியெழுப்பினார்.

(அ)

# விபத்தில் சிறுவன் உயிரிழப்பு

கொழும்பு, பெப். 19
கந்தானை வெலிகம்பிட்டிய - கணேமுல்ல வீதியில் தும்பலிய பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் 17 வயதுடைய சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த சிறுவன் எதிர்த்திசையில் பயணித்த காரை தவிர்க்க முற்பட்டதில் சறுக்கி விழுந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் ஜா-எல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

கப்புவத்தை பகுதியைச் சேர்ந்த 17 வயதுடைய சிறுவனே உயிரிழந்துள்ளார்.

சாரதியின் கவனக்குறைவே விபத்துக்கு காரணம் என பொலிஸார் தெரிவித்துள்ளதோடு, சாரதி தற்போது கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கந்தானை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

# ரயிலில் மோதுண்டு இளம் தாய் மரணம்!

கொழும்பு, பெப். 19
ரயில் மோதி இரு பிள்ளைகளின் தாயொருவர் நேற்றுக் காலை பலியாகியுள்ளார் என வாத்துவ பொலிஸார் தெரிவித்தனர்.

தனியார் நிறுவனமொன்றில் வேலைக்குச் செல்வதற்காக ரயில் ஏற வந்த வஸ்கடுவ, சிரில் மாவத்தையைச் சேர்ந்த சி.டி.சமரவீர முதலிகே சிந்தா பிரியதர்ஷனி என்ற 36 வயதுடைய தாயே இவ்வாறு பலியாகியுள்ளார்.

மருதானை நோக்கிச் செல்லும் ரயிலில் பயணிக்க வந்த அவர், கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த 940 இலக்க ரயில் மோதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# இரத்தினபுரியில் காடழிப்பு

கொழும்பு, பெப். 19
இரத்தினபுரி சன்னஸ்கம உள்ளிட்ட காட்டுப் பகுதியில் நீண்டகாலமாக சட்டவிரோதமாக காடழிப்பு முயற்சிகள் இடம் பெற்று வருவதாக பிரதேச மக்கள் முறையிடுகின்றனர்.

இச்செயற்பாடுகள் காரணமாக இப்பிரதேசத்தின் வன வளங்கள் பரவலாக பாதிக்கப்படுவதுடன் காட்டு மிருகங்கள், பிராணிகள் வேறு இடங்களுக்குத் தப்பிச் செல்வதாகவும் பிரதேச நீர் வளங்கள் வற்றி வருவதாகவும் இவர்கள் முறைபிடுகின்றனர்.

இவ்விடயத்தில் பாதுகாப்பு தரப்பினரின் கவனம் திரும்பியுள்ள போதிலும் அரசியல் அதிகாரத்தரப்புக்களின் ஒத்துழைப்புக்கள் காரணமாக பரவலாக இச்செயற்பாடுகள் தொடர்ந்து வருவதாக கிராம வாசிகளும் சுற்றாடலியலாளர்களும் குற்றஞ்சாட்டுகின்றனர்.

(அ)

ஈழநாடு



# நாட்டில் படுகொலை செய்யப்பட்ட ஊடகர்களுக்கு நீதி கிட்டவேண்டும்

## மட்டக்களப்பில் ஊடக அமைப்புக்கள் கோரிக்கை

மட்டக்களப்பு, பெப். 19

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வழங்குங்குமாறு கோரி மட்டக்களப்பு மாட்டத்தில் அமைந்துள்ள கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அமைதியான முறையில் சனிக்கிழமை மட்டக்களப்பு காந்தி சதுக்கத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியம், யாழ். ஊடக அமையம், தொழில்சார் இணைய ஊடகவியலாளர் ஒன்றியம், வடக்கு கிழக்கு, தெற்கு ஊடக அமைப்புக்களின் ஒத்தழைப்புடன் நடைபெற்ற இந்நிகழ்வில், பாராளுமன்ற உப்பினர் கோ.கருணாகரம், மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வர் தி.சரவணவான், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான இரா. துரெரெத்தினம், இ.பிரசன்னா, மற்றும் மதத் தலைவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசியல் பிரதிநிதிகள், உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்து கொண்டனர்.

இதன்போது ஜனாதிபதிக்கு வழங்கி வைப்பதற்காக பராளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரத்திடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

வடக்கு-கிழக்கில் ஊடக சுதந்திரத்தை பேண தொடர்ந்து குரல் கொடுக்கின்ற அதே வேளை, கொல்லப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட எமது ஊடக நண்பர்களுக்கான சர்வதேச தலையீட்டின் கீழ் நீதி வழங்கப்பட வேண்டுமென்பதில் நாம் சமரசம் செய்துகொள்ள தயாராக இல்லையென தெரிவித்துக் கொள்கின்றோம்.



அதேவேளை, படுகொலை செய்யப்பட்ட மற்றும் காணாமலாக்கப்பட்ட வடக்கு, கிழக்கு ஊடகவியலாளரின் குடும்பங்களுக்கு இடைக்கால நிவாரணமாக நட்டஈடு வழங்குவதற்கான நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

2000ஆம் ஆண்டில் பிபிசி செய்தியாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலையுடன் அரங்கேறிய ஊடகப்படுகொலைகள் நீண்டே சென்றிருந்தன. தமிழர் தாயகப் பகுதிகளில் பல ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். பலர் தாக்கப்பட்டிருக்கிறார்கள். ஊடக நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது. ஆனாலும் அந்த தாக்குதல்களுடன் தொடர்புடைய சூத்திரதாரிகள் கைது செய்யப்படவோ சட்டத்தின் முன் நிறுத்தப்படவோ இல்லை என்பது அனைவரும் அறிந்ததொரு உண்மையாகும்.

நல்லாட்சி காலத்தில் தாங்கள் பிரதமராக இருந்த காலப் பகுதியில் கொல்லப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட எமது ஊடக நண்பர்களது குடும்பங்களுக்கு இடைக்கால நிவாரணமாக இழப்பீடு ஒன்றை வழங்க முன்வந்து விசாரணை குழுவொன்றையும் அமைத்திருந்தீர்கள்.

குழுவும் விசாரணைகளை முன்னெடுத்தபோதும் ஆட்சி மாற்றத்தின் பின்னராக அது கிடப்பில் போடப்பட்டுவிட்டது. பின்னராக கோட்டாபய ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அவ்வாறு விசாரணைக் குழுவே நியமிக்கப்பட்டிருக்கவில்லை யென வாதிடப்பட்டிருந்தது.

எனினும் தற்போது தாங்கள் ஜனாதிபதியாக பொறுப்பேற்றுள்ள நிலையில் தங்களால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைக்குழு பரிந்துரைகளின் பிரகாரம் கொல்லப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட எமது ஊடகவியலாளர்களது குடும்பங்களுக்கான இடைக்கால நிவாரணத்தை வழங்குவதில் கவனத்தை செலுத்த கேட்டுக்கொள்கின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# வாகன சத்தம் காரணமாக வீடு மாறினார் கோட்டாபய

கொழும்பு, பெப். 19

வாகனங்களின் சத்தமும் அவற்றின் ஹோர்ண் ஒலிகளால் நிம்மதியாக வாழ முடியாது என்று கூறி முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வீடு மாறிவிட்டதாகவும் மிரிஹானையில் அமைதியான சூழலில் அமைந்துள்ள தனது தனிப்பட்ட வீட்டில் வசித்து வருகின்றார் என்றும் கொழும்பு செய்தி ஒன்று தெரிவித்தது.

இது தொடர்பாக நேற்று சனிக்கிழமை வெளியிட்ட செய்தியில்-

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் உருவான மக்கள் எழுச்சிப் போராட்டத்தின் காரணமாக நாட்டை விட்டு வெளியேறி-இலங்கைக்கு திரும்பியிருந்த நிலையில், அவர் தங்குவதற்காக கொழும்பு பௌத்தலோக மாவத்தை பிரதான வீதி அருகில் அதிகாரபூர்வ இல்லம் வழங்கப்பட்டது.

கோட்டாவின் மிரிஹானையில் உள்ள அவரது தனியார் இல்லத்தின் பாதுகாப்பு நிலைமை போதுமானதாக இல்லை என்று பாதுகாப்பு தரப்பினர் அப்போது வழங்கிய அறிக்கையின் அடிப்படையில் அவரை வீடு மாறி இருக்குமாறு கேட்டுக் கொண்டனர்.

அதன்படி இலங்கைக்கு வந்த நாள் தொடக்கம் கோட்டா பௌத்தலோக மாவத்தையில் அமைந்துள்ள வீட்டில் வசித்து வந்தார்.

ஆனால், சில நாட்களுக்குப் பிறகு, தொடர்ந்து வாகனங்களின் சத்தமும், அவற்றின் ஹோர்ண்களும் ஒலித்ததால், கோட்டாவுக்கு இந்த வீட்டில் வசிப்பது பெரும் பிரச்னையாக மாறியது. அமைதியான வாழ்க்கை வாழ விரும்பிய கோட்டா, சில நாட்களுக்குப் பிறகு அவருக்கு வாகன ஒலிகள் ஒரு பெரிய நெருக்கடியாக மாறியது. இதன் காரணமாக இந்த அதிகாரபூர்வ இல்லத்திற்கு பதிலாக வேறு ஒரு அதிகாரபூர்வ இல்லத்தை வழங்குமாறு கோட்டா அதிகாரிகளுக்கு பல தடவைகள் கோரிக்கை விடுத்திருந்தார்.

இது தவிர, முன்னாள் ஜனாதிபதி மகிந்த தங்கியிருந்த விஜேராம மாவத்தையில் உள்ள அதிகாரபூர்வ இல்லத்தின் புனரமைப்புப் பணிகள் நிறைவடைந்துள்ளதால், மகிந்த அங்கு சென்ற பின்னர், அதுவரை தங்கியிருந்த புல்லர்ஸ் வீதியில் உள்ள அதிகாரபூர்வ இல்லத்துக்குச் செல்வார் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், பல்வேறு காரணங்களால் அந்த அதிகாரபூர்வ இல்லத்தை கோட்டா சென்று பார்வையிடவில்லை.

இந்நிலையில் கடந்த வாரம் கோட்டா முக்கிய முடிவு ஒன்றை எடுத்துள்ளார். அதாவது, அவர் வாழ்ந்து பழகிய வீடான மிரிஹானை இல்லத்திற்குச் செல்வது என்று. அதன்படி, கோட்டா தற்போது மிரிஹானையில் அமைதியான சூழலில் அமைந்துள்ள தனது தனிப்பட்ட வீட்டில் வசித்து வருகின்றார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# நவம்பருக்கு முதல் ஜனாதிபதி தேர்தல் நடத்துவதற்கு முயற்சிக்கின்றார் ரணில்

## சிறிதரன் எம்.பி. கூறுகிறார்

கிளிநொச்சி, பெப். 19

ரணில் விக்ரமசிங்க நவம்பருக்கு முதல் ஜனாதிபதி தேர்தலை நடத்த முயற்சிப்பதாக தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி - கணேசபுரம் பகுதியில் இடம்பெற்ற தேர்தல் விளக்க கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தல் நடக்குமா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் உள்ளது. தேர்தல் எப்போதும் நடக்கலாம். நிச்சயம் நடக்கும்.

தற்போது தபால் மூல வாக்களிப்பு பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. ஆனாலும் காலம் குறிப்பிடவில்லை. இது ரணில் அரசாங்கத்தின் நிகழ்ச்சியாகும். இவ்வாறு குழப்பங்களை ஏற்படுத்தி மக்களை திசை திருப்ப முனைவதன் ஊடாக தமது அரசியல் நகர்வினை செய்கின்றனர். தேர்தலுக்கு காசு இல்லை என்கின்றனர்.

தேர்தல் செலவுக்காக திரும்ப செலுத்தாத தொகையை வழங்கும் நடைமுறை உள்ளது. அதனை திருப்பிச் செலுத்த வேண்டியதில்லை.

இவ்வாறான நிலையில் 500 மில்லியனை நாணய நிதியம் கொடுக்கும். இது வழமை.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் 341 வட்டாரத்துக்கும் 341 விதமான வாக்குச்சீட்டுக்கள் தயாரிக்கவேண்டும். அது ஒன்றுதான் பெரிய வேலையாகும். இதேவேளை, 2 தேர்தலுக்கு அச்சடிக்கக் கூடிய பேப்பர் இருப்பதாகவும் அரச அச்சகம் கூறுகின்றது. அதற்கான கடன் விண்ணப்பத்தை எழுத்து மூலமாக கேட்கிறது. எனவே இதில் பாரிய அரசியல் நிலவுகிறது. எதிர்வரும் நவம்பர் மாதத்தின் பின்பு ஜனாதிபதித் தேர்தலை நடத்தக்கூடிய நிலை உள்ள நிலையில், ரணில் விக்கிரமசிங்க நவம்பருக்கு முதல் ஜனாதிபதி தேர்தலை நடத்த முயற்சிக்கிறார்.

இந்த சூழலில் தான் மக்கள் ஆணை பெற்ற ஜனாதிபதியாக வர வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு உள்ளது.

இதேவேளை மகிந்த குடும்பத்துக்கு ரணில் போன்ற ஒருவர் தேவை. அதே போன்று ரணிலுக்கும் அவர்கள் தேவையாக உள்ளது. - என்றார்.(அ)

# வாக்குரிமையை மீறினால் நிச்சயம் சட்ட நடவடிக்கை!

## அரசாங்கத்துக்கு எதிரணி எச்சரிக்கை

கொழும்பு, பெப். 19

தேர்தல் என்பது மக்களின் அடிப்படை உரிமையாகும், அதனைத் திட்டமிட்டுக் காலம் தாழ்த்துவது சட்டவிரோத செயற்பாடாகும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

எனவே, மக்களின் வாக்குரிமையை மீறும் வகையில் அரசாங்கம் செயற்படுமாயின் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்-

சட்டம் மற்றும் அரசமைப்புக்கமைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். மாறாக அரசாங்கம் சட்ட விரோதமாகச் செயற்படுமானால் நாம் அது தொடர்பில் நடவடிக்கை எடுப்போம்.

அரசாங்கத்திற்கு சட்ட விரோதமாகச் செயற்பட முடியாதல்லவா? தேர்தல் என்பது மக்களின் அடிப்படை உரிமையாகும். அவ்வாறிருக்கையில் அதனைத் திட்டமிட்டுக் காலம் தாழ்த்துவது சட்டவிரோத செயற்பாடாகும்.

அடிப்படை உரிமைகளை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நீதிமன்றத்தினுடையதாகும். அதற்கமைய நீதிமன்றம் மக்களின் வாக்குரிமையைப் பாதுகாக்கும் என்று நம்புகின்றோம்.

ஓரிரு வருடங்களில் நெருக்கடிகளுக்குத் தீர்வு

பொருளாதாரத்தைச் சீரழித்ததன் பின்னர் துரித தீர்வைக் காண முடியாது. ஓரிரு வருடங்களில் இந்த நெருக்கடிகளுக்கு தீர்வு கண்டு விட முடியும் என்று எண்ண வேண்டாம். அவ்வாறு துரித தீர்வு எதுவும் இல்லை.

நாட்டில் தற்போது ரூபாவும் இல்லை, டொலரும் இல்லை. இன்னும் நீண்ட காலத்துக்கு எவ்வித பேதமும் இன்றி அனைவரும் இந்த நெருக்கடிகளை எதிர்கொள்ளவேண்டும்- என்றார். (அ)

# காலநிலை நிதியுதவிக்கான 2023 திட்ட வரைபடத்தை தயாரிக்கும் பசுமை குழு

கொழும்பு, பெப். 19

2023 ஆம் ஆண்டில் பசுமை நிதி திட்டங்களுக்கு நிதி திரட்ட, ஒரு வலுவான திட்ட வரைப்படத்தை வெளியிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவான் விஜேவர்தன தலைமையில் பசுமை நிதிக் குழுவொன்றை நியமிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

ருவான் விஜேவர்தன தலைமையில் நேற்று முன் தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இதற்கான ஆரம்பக்கட்ட கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

காலநிலை மாற்றத்தில் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளவும் குறைந்த கார்பன் பொருளாதாரத்தை நோக்கி நகரவும் நிதி ஆதாரங்களை திரட்டுவதற்கு பசுமை நிதிக் குழு பணியாற்றவுள்ளது.

ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் சாந்தனி விஜேவர்தன, மேலதிக செயலாளர் வெர்னன் பெரேரா உள்ளிட்ட பலர் இந்த கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். (அ)

ஈழநாடு
Eelanadu
19.02.2023 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், மாசி 07
"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.
E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழர் பிரச்சினை இரண்டாம் நிலையிலா?

சர்வதேச நாணய நிதிய உதவியின் ஒரு பகுதி, அடுத்த மாதமளவில் சாத்தியப்படலாமென்று கணிக்கப்படுகின்றது. குறித்த உதவியை தொடர்ந்து மேற்குலக நாடுகள் இலங்கைக்கு உதவக் கூடிய சாத்தியங்கள் உண்டு. இதேவேளை அமெரிக்க பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகள் குழுவின் விஜயம் கூடுதல் கவனத்தை பெற்றிருக்கின்றது. சீனாவிற்கும் அமெரிக்காவிற்குமான அதிகார மோதல் வெளிப்படையாக தெரியத் தொடங்கியிருக்கும் சூழலில், அமெரிக்காவின் நகர்வுகளும் தீவிரமடைந்து வருகின்றது. சோவியத் – அமெரிக்க பனிப்போர் காலத்தை நினைவுப்படுத்தும் வகையிலான சம்பவங்கள் அண்மைய நாட்களாக இடம்பெற்று வருகின்றது. பசுபிக் பிராந்தியத்திற்குள் முதல் முதலாக சீன பலூன்கள் பல தடவைகள் சுட்டுவீழ்த்தப்பட்டிருக்கின்றன. சீனா வேண்டுமென்றே உளவு பலூன்களை அமெரிக்காவின் பசுபிக் பிராந்தியத்திற்குள் பறக்க விடுவதானது, சர்வதேச அரசியலில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.

உக்ரெய்னுக்கும் ரஷ்யாவிற்குமான யுத்தம் முடிவற்றவகையில் தொடர்ந்துவருகின்ற நிலையில், ஐரோப்பா தொடர்ந்தும் பதற்றமான அரசியல் சூழலுக்குள் இருக்கின்றது. தொடர்ந்தும் நேட்டோ நாடுகள், உக்ரெய்னுக்கு இராணுவ உதவிகளை வழங்கிவருகின்றன. உக்ரெய்னுக்கும் ரஷ்யாவிற்குமான யுத்தமாக இருந்தாலும் அடிப்படையில் மேற்குலகிற்கும் ரஷ்யாவிற்குமான யுத்தமாகவே நிலைமைகள் மாறியிருக்கின்றன. இந்த பின்புலத்தில் சீனாவிற்கும் ரஷ்யாவிற்கும் இடையில் வரையறையற்ற நட்புக்கான உடன்பாடு எட்டப்பட்டிருக்கின்றது.

இந்த பின்புலத்தில் சீனாவிற்கும் அமெரிக்காவிற்குமான அதிகார போட்டி உடனடியாக பனிப்போரை எட்டாவிட்டாலும் கூட, இரு நாடுகளுக்கிடையிலுமான அதிகார போட்டியை தீவிரப்படுத்தியிருக்கின்றது. இந்த பின்புலத்தில் இரண்டாம் உலகமகா யுத்தத்திற்கு பின்னர், ஜப்பானும் புவிசார் அரசியல் போட்டிக்குள் பங்குகொள்ளும் முடிவை எடுத்திருக்கின்றது. ஆசியப் பிராந்தியத்தை பொறுத்தவரையில், சீனாவிற்கு எதிரான பிரதான மூலோபாய பங்காளியாக ஜப்பான் இருக்கின்றது.

இவ்வாறானதொரு பின்புலத்தில் தெற்காசியாவின் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த இடமொன்றில் அமைந்திருக்கும் இலங்கைத் தீவின் மீது அமெரிக்க கரிசனை அதிகரித்திருக்கவே வாய்ப்புண்டு. இலங்கைக்குள் சீனா வலுவாக காலூன்றியிருப்பதுடன், சீனாவின் ஒரு பாதை – ஒரு வலயம் திட்டத்திற்கான தளமாக இலங்கையை பயன்படுத்திக்கொள்வதில் சீனா விட்டுக்கொடுப்பற்ற வகையில் செயற்பட்டுவருகின்றது. மேலும், இலங்கைக்குள் தனது காலை வலுவாக ஊன்றுவதற்கான முயற்சிகளிலேயே ஈடுபட்டுவருகின்றது. எனினும் இலங்கை பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கிய போது, சீனா உடனடியாக உதவிகளை வழங்கவில்லை. அதே வேளை கடன் மறுசீரமைப்பு விடயத்திலும் கொழும்பின் எதிர்பார்ப்பை உடனடியாக பூர்த்திசெய்யவில்லை. இவ்வாறானதொரு சூழலில், பொருளாதார நெருக்கடி வெளியாருக்கான முக்கியமான துருப்புச் சீட்டாக மாறியிருக்கின்றது.

இலங்கையை பொறுத்தவரையில் வெளியாருக்காக காத்திருக்கும் ஒரு நாடாகவே முற்றிலுமாக மாறியிருக்கின்றது. இந்த நிலையில், பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கையை மீட்பதற்கே நாடுகள் முக்கியத்துவம் கொடுக்க முற்படுகின்றன. இலங்கையின் உள்ளக பிரச்சினையான பொறுப்புக் கூறல் நல்லிணக்கம் போன்ற விடயங்கள் இரண்டாம் நிலைக்கு சென்றிருக்கின்றன. இன்றைய நெருக்கடியான சூழலில், இவற்றை அதிகம் முதன்மைப்படுத்தாமல், முதலில் அனைவருக்குமான பிரச்சினையான பொருளாதார பிரச்னையிலிருந்து மீள்வதே முக்கியமானதென்னும் நிலைப்பாடே அனைவரிடமும் இருக்கின்றது. இந்த பின்புலத்தில் நோக்கினால் தமிழர் பிரச்னை இரண்டாம் நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதாகவே தெரிகின்றது.

# கடற்றொழிலாளர் கட்டமைப்பை வலுப்படுத்த அறிஞர்கள் குழாம்!

*யாழ்ப்பாணம், பெப். 19*

வட பகுதியைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கும் கடற்றொழிலாளர் கட்டமைப்பை வலுப்படுத்தவும் அறிஞர்கள் குழாமொன்று உருவாக்கப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர் சமாச தலைவர் அ.அன்னராசா தெரிவித்தார்

யாழில் இடம்பெற்ற கலந்துரையாடலிலே அவர் இவ்வாறு கூறினார்.

வடக்கில் கடற்றொழில் சமூகங்களை சேர்ந்தவர்களும் சமாசங்களை சேர்ந்த பிரதிநிதிகளும் கலந்துரையாடலில் ஈடுபட்டு இந்தக் குழுவை உருவாக்கியதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

அதற்கு ஆலோசனை வழங்குவதற்கான அறிஞர் குழுவில் அகிலன் கதிர்காமர், சூசை ஆனந்தன், செல்வின் ஆகியோர் உள்ளடங்கியுள்ளனர்.

குறித்த மூவருக்கு அப்பால் கடற்றொழிலாளர்களுக்கு ஆலோசனை வழங்க ஏனைய அறிஞர்கள் முன்வர வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

(அ)

# கொழும்புத் துறைமுக நகரம் மற்றொரு வெள்ளை யானையா?

## கேள்வியெழுப்புகிறது அல் ஜஸீரா

*கொழும்பு, பெப். 19*

கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் 2017 ஆம் ஆண்டு அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகம், சீன அரசுக்குச் சொந்தமான சைனா மெர்ச்சன்ட் போர்ட் ஹோல்டிங்ஸ் நிறுவனத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டது.



அதேபோன்று, கொழும்பு துறைமுக நகரமும் சர்ச்சைக்குரிய திட்டங்களில் ஒன்றாக பீஜிங் கடனில் கட்டப்பட்ட மற்றொரு வெள்ளை யானை என்று பல உள்ளூர் விமர்சகர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சுமார் 269 ஹெக்ரேயர் (665 ஏக்கர்) கடலை நிரப்புவதன் மூலம் அபிவிருத்தி செய்யப்படவுள்ள துறைமுக நகரம், நீடித்து நிலைக்க முடியாத ஒன்று எனவும், நாட்டின் நலிவடைந்த பொருளாதாரத்திற்கு குறிப்பிடத்தக்க நன்மைகளைத் தராது எனவும் விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கொழும்பு துறைமுக நகரமானது இலங்கையின் பொருளாதாரத்திற்கு மிகச் சிறிய நன்மையையே தரும்.

"நாட்டின் பிற பகுதிகளில் உள்ள மக்கள் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டு அதிக வரிச்சுமைகளை சகித்துக் கொண்டு இருக்கும் போது துறைமுக நகரம் தனியான வரியில்லா கனவுலகமாக மாறியுள்ளது" என ஆய்வாளர் பிரியங்கி ஜயசிங்க அல் ஜசீரா செய்தி சேவைக்கு தெரிவித்தார்.அ)

# கட்சி மாறி போட்டியிடுவோரை களை எடுக்கவுள்ளது பெரமுன

*கொழும்பு, பெப். 19*

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஏனைய அரசியல் கட்சிகள் அல்லது கூட்டணிகளின் கீழ் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்த பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்பினர்களை கட்சியில் இருந்து நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பான கடிதங்களை வழங்கும் நடவடிக்கையில் பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் ஈடுபட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.


இதன்படி, நாடு முழுவதிலும் உள்ள உள்ளூராட்சி மன்றங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் 200 இற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் அந்த இடத்திலிருந்து நீக்கப்படவுள்ளதாக கூறப்படுகிறது.

இவ்வாறு கட்சியில் இருந்து நீக்கப்படுபவர்களுக்கு பதிலாக வேறு உறுப்பினர்களை நியமிக்க தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே எதிர்வரும் வாரம் பெரும் அரசியல் சர்ச்சையை ஏற்படுத்தும் எனவும் அக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

(அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



பகிர்வு -69

# மலையாள நடிகர் மம்முட்டி பெற்ற அதியுயர் விருது.!

**கணபதி சர்வானந்தா**

இன்றை பகிர்வு மலையாள நடிகர் மம்முட்டி பற்றியது. நான் ஐக்கிய அரபு எமிரகத்தில் பணியாற்றிய 1987 காலப்பகுதியில் எனது சகோதரனால் எனக்கு மலையாளத் திரைப்படங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அவற்றை முதலில் பார்த்தபோது, எமது இலங்கைச் சுழலை ஞாபகப்படுத்துதாக இருந்தன. அதில் வரும் கதாபாத்திரங்கள் வேறு மொழியைச் சேர்ந்தவர்கள் என்று கூட எண்ணத் தோன்றுவதில்லை. எம்மூர் சின்னையாண்ணை, பொன்னையாண்ணை, தங்க முத்தக்கா போன்றவர்களை ஒத்ததாக இருக்கக் கண்டேன். அவர்கள் உணவுப் பழக்க வழக்கமும் மொழியும் எனக்கு வேறாகத் தெரியவில்லை. காலப்போக்கில் மலையாளப் படக்களுக்குள் என்னைப் புதைத்துக் கொண்டேன். அப்படங்களும் அங்குள்ள மலையாளிகளின் தொடர்பும் என்னை துபாய் மலையாள சமாஜத்தில் ஒரு அங்கத்தவராக இணைத்துக் கொண்டது.

அப்போது நான் அங்கு பார்த்த மலையாளப் படமான "தனியாவர்த்தனம்" என்ற திரைப்படம் இன்னும் எனது மனதைவிட்டு அகலாது ஒட்டிப் போய்க் கிடக்கிறது. மம்முட்டி முக்கிய பாத்திரத்தை ஏற்று நடித்திருந்த அப் படத்தை பரதன் இயக்கியிருந்தார். தென்னிந்தியத் தமிழ் திரை உலகில் எப்படி சிவாஜி மதிக்கப்படுகிறாரோ அப்படி கேரளத்தில் மம்முட்டி மதிக்கப்படுகிறார்.

அம்மம்முட்டி பற்றிய பதிவொன்று உங்களுக்காக...

நடிகர் மம்முட்டி தன் வாழ்வில் சந்தித்த முக்கியமான மனிதர்களையும், மறக்க முடியாத நினைவுகளையும், இறக்கி வைக்கமுடியாத காட்சிகளையும் "காழ்ச்சப்பாடு" என்ற தலைப்பில் கட்டுரைத் தொகுப்பாக மலையாளத்தில் எழுதியிருக்கிறார். அதனை "மூன்றாம் பிறை வாழ்வனுபவங்கள்" என்ற பெயரில் கே.வி.ஷைலஜா தமிழில் மொழிபெயர்ப்பு செய்திருக்கிறார். அந்தப் புத்தகத்தில் மாத்தம் 23 கட்டுரைகள் இருக்கின்றன. அனைத்துக் கட்டுரைகளும் நம் வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பார்க்கும் வகையிலே அமைந்துள்ளன. அதன் சிறப்பு. அவை ஒட்டுமொத்த சமூகச் சிந்தனைகள் அடங்கிய தத்துவார்த்தமான படிநிலைகளாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

அதில் ஒரு கட்டுரையின் தலைப்பு "வேகத்தின் விலை".

கார் ஓட்டுவது, அதுவும் வேகமாக, கட்டுப்பாடுடன் ஓட்டுவது அவருக்கு மிகவும் பிடிக்கும். ஒருநாள் ஷுட்டிங் முடிந்த ஒரு பின்னிரவில் கோழிக்கோட்டிலிருந்து மஞ்ஞேரிக்குச் சென்றுகொண்டிருக்கும் போது நகர எல்லையைத் தாண்டி அடர்ந்த வனப்பகுதிக்குள் அவருடைய கார் நுழைந்த வேளை... இருபுறமும் வாகை மரங்களுடன் இருந்த சாலையின் வழியாக அவரது வாகனம் சென்றுகொண்டிருந்தது.

இனி அவரின் மொழியில் வாசியுங்கள்.

அந்த அடர் இருளில் ஒரு எளிய மெலிந்த உருவம், பார்க்க ஒடிசலான வயசான முதியவர் ஒருவர் கையில் கை விளக்கு , தலையில் முக்காடு... மின்னல் வேகத்தில் சென்ற என்னைக் கை நீட்டி வழிமறித்தார்.

இடது பக்கம் ஒடித்து மீண்டும் வலப்பக்கம் சாய்ப்பதற்கு இடையில் வண்டி நிலை குலைந்தது. ஒருவாறு வண்டியைக் கட்டுக்குள் கொண்டு வந்து ரிவர்ஸ் எடுத்தேன். கோபத்துடன் அவரைப் பார்த்தேன். அந்த முதியவர் எதுவும் அறியாதது போல என் அருகில் ஓடி வந்தார். அங்கிருந்த கல்மேடையை நோக்கிக் கையை நீட்டினார். அங்கு ஒரு பெண் சுருண்டு படுத்து இருப்பதைக் கண்டேன். .

கைகூப்பியபடி அவர் பேச ஆரம்பித்தார். "பாப்பாவுக்குப் பிரசவ நேரம். ஆஸ்பத்திரிக்கு போக நீங்க தான் உதவணும்." திடீரெனக் காருக்குக் குறுக்கே அவர் ஓடி வந்த போது ஏற்பட்ட கோபமெல்லாம் குறைந்து போனது. நடுநிசி இரவு இரண்டு மணிக்கு எந்த வாகனத்தையும் தேடிப்பிடிக்க முடியாது என்பதால் நான் அவர்களை என் வண்டியில் ஏற்றிக் கொண்டேன்.

அவள் அவருடைய பெயர்த்தி என்பதை அவருடனான தொடர் உரையாடலில் அறிந்து கொண்டேன். அரசு மருத்துவமனை வராண்டாவில் வண்டியை நிறுத்தினேன். அச் சத்தத்தைக் கேட்டு அவசரப் பிரிவில் இருந்து நான்கு ஊழியர்கள் ஓடி வந்தார்கள். அவர்கள் என்னை யாரென்று அடையாளம் தெரிந்து கொள்ளவில்லை. அவர்கள் அந்தப் பெண்ணைக் கைத்தாங்கலாக வண்டியிலிருந்து அழைத்துச் சென்றபின் தான் என் முகத்தில் சமாதானமும் நிம்மதியும் ஏற்பட்டது. நான் வீடு செல்ல வண்டியைத் திருப்பிக் கொண்டிருக்கும் போது மீண்டும் முதியவர் ஓடி என்னருகே வந்தார்.

ரொம்பப் பெரிய உதவி பண்ணி இருக்கீங்க. கடவுள் தான் உங்களை எங்க கிட்ட கொண்டு சேர்த்து இருக்கார் என எண்ணுகிறேன். உங்க பேர் என்ன என்று கேட்டார். "மம்முட்டி" என்றேன். பெயரைக் கேட்டபோது கூட என்னை அவருக்குத் தெரியவில்லை. எனது நடிகன் என்ற கிரீடம் நொறுங்கி விழுந்த கணம் அது.

அவர் வேட்டியின் மடிப்பில் இருந்து கசங்கிய ஒரு நோட்டை எடுத்து "இதை ரீ செலவுக்கு வச்சிக்க" என்று என்னிடம் தந்தார். "என் மனத் திருப்திக்காக..." எனக் கூறிவிட்டு என் கேள்விக்குப் பதில் சொல்லாமல் விறுவிறுவென நடந்து மருத்துவமனைக்குள் சென்று மறைந்துவிட்டார்.

அவர் கொடுத்துச் சென்றது மடித்து வைக்கப்பட்ட ஒரு இரண்டு ரூபாய் தாள். அதை எதற்காகத் தந்தார் என்று இன்றுவரை எனக்குப் புரியவில்லை.

ஒருவேளை... என்னுடைய டிரைவிங் வேகத்துக்காகவோ...! ஒரு ஜீவனைக் காப்பாற்றவும் புதியதொரு ஜீவனை இந்தப் பூவுலகில் கொண்டு வரவும் செய்த சிறிய உதவிக்காகவோ...! அதிக சந்தோஷப்பட்டேன்.

இது வரை நான்கு தேசிய விருது வாங்கி விட்டேன். ஆனாலும் அதை விட இன்னும் பத்திரமாய் பொக்கிஷமாய் அந்த ரெண்டு ரூபாய் நோட்டை நான் பாதுகாத்து வருகிறேன். சிலநேரங்களில் நாம் செய்யும் சிறிய உதவிகள் கிடைப்பவர்களுக்கு பெரிய உதவியாகக் கூட இருக்கும். அதன் பலனாக வெளிப்படும் மகிழ்ச்சிப் பூக்கள் வாழ்க்கைப் பாதை முழுவதும் வெளிச்சம் கொடுத்துக் கொண்டே இருக்கும்.இது எனது அனுபவம்.

# இந்தவார ராசிபலன் 19.02.2023 - 25.02.2023

நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 04.30 - 06.00 திதி : சதுர்த்தசி



பெப்ரவரி 19 ஞாயிற்றுக்கிழமை
சுபகிருது வருடம் - மாசி 07




முருகனை வழிபட முன்னேற்றம் உண்டாகும். கடந்த வாரத்தில் உண்டான தடைகள் விலகும். எதிர்பார்த்த ஆதாயம் ஏற்படும். அந்நியர் வழியே லாபம் அதிகரிக்கும். நீண்ட நாள் எண்ணம் ஒன்று நிறைவேறும். அரசு வழி முயற்சிகள் வெற்றியாகும். உங்கள் முயற்சிகளில் லாபம் காண்பீர்கள். அடுத்தவரை நம்பி உங்கள் பணிகளை ஒப்படைக்காதீர்கள். புதிய வேலை வாய்ப்பிற்கு காத்திருந்தவர்களுக்கு எதிர்பார்த்த தகவல் வரும்.




சூரிய வழிபாடு சுபிட்சம் உண்டாக்கும். வாரத்தின் முதல் நாளில் சங்கடங்கள் தோன்றும். அதன்பின் வேகமுடன் செயல்பட்டு ஆதாயம் காண்பீர்கள். செயல்கள் தொடக்கத்தில் இழுபறி ஆனாலும் இறுதியில் வெற்றியாகும். சுபநிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள். வேகமுடன் செயல்பட்டு வெற்றி காணும் வாரம் இது. அரசு வகையில் எதிர்பார்த்த நன்மை அடைவீர்கள். செயல்களில் நிதானம் தேவை. அதன்பின் நன்மை, ஆதாயம் அதிகரிக்கும் .நீண்ட நாள் எண்ணங்கள் நிறைவேறும். எதிர்பார்த்த லாபம் உண்டாகும்.




துர்கை வழிபாடு சங்கடம் தீர்க்கும். உங்கள் முயற்சிகள் எளிதாக நிறைவேறும். செயல்களில் லாபகரமான நிலையைக் காண்பீர்கள். முயற்சி இழுபறியாகும். அதன்பின் நிலைமை சீராகும். எண்ணங்கள் எளிதாக நிறைவேறும். வாரத்தின் முதல் இரண்டு நாட்களும் மேற்கொள்ளும் முயற்சிகள் வெற்றியாகும். புதிய சொத்து வாங்கும் எண்ணம் நிறைவேறும். நினைத்ததை சாதிப்பீர்கள். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். வேலைவாய்ப்பிற்காக காத்திருந்தவர்களுக்கு எதிர்பார்த்த தகவல் வரும்.




மகாலட்சுமியை மனதில் எண்ணி வழிபட மகிழ்ச்சி அதிகரிக்கும். வெள்ளி முதல் ஞாயிறு வரை உங்கள் செயல்களில் உடனே முடிவைக் காண்பீர்கள். பணவரவு அதிகரிக்கும். வழக்குகள் உங்களுக்கு சாதகமாகும். திருமண வயதினருக்கு வரன் தேடி வரும். அதன்பின் நிதானித்து செயல்பட நன்மை உண்டாகும். நீண்ட நாள் எதிர்பார்ப்பு நிறைவேறும். புதிய சொத்து வாங்கும் முயற்சி நிறைவேறும்.




சனீஸ்வரர் வழிபாடு சங்கடம் போக்கும். முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். சனி, ஞாயிறில் தொழில் முயற்சிகள் ஆதாயத்தை ஏற்படுத்தும். திங்களன்று வருவாய் கூடும். பூர்வீக சொத்தில் இருந்த பிரச்னைகள் விலகும். புதனன்று அமைதி காப்பது நல்லது. உங்கள் முயற்சிக்கேற்ப நன்மை உண்டாகும் வாரம் இது. வருமானமும் செல்வாக்கும் அதிகரிக்கும். கவனமுடன் செயல்படுவதால் நன்மைகள் அதிகரிக்கும்.




விநாயகரை வழிபட நலம் உண்டாகும். உங்கள் செயல்களில் நீங்கள் எதிர்பார்த்த நன்மை காணும் வாரம் இது. நீண்ட நாள் எண்ணங்கள் நிறைவேறும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். சிலர் புதிய வீட்டிற்கு குடியேறுவீர்கள். வீட்டில் திருமணப் பேச்சு எழும். புதிய சொத்து வாங்கும் முயற்சி வெற்றியாகும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். வருமானம் அதிகரிக்கும். பிள்ளைகளின் எண்ணத்தைப் பூர்த்தி செய்வீர்கள். நண்பர்கள் உதவியுடன் புதிய முயற்சியில் ஈடுபட்டு லாபம் காண்பீர்கள்.




துர்கையை வழிபட வெற்றி உண்டாகும். முயற்சிகளால் விருப்பம் நிறைவேறும். ஜென்ம கேதுவால் எதிர்பார்ப்புகளில் பின்னடைவை சந்திப்பீர்கள் என்றாலும் சிந்தித்து செயல்படுவதால் நினைத்ததை அடைவீர்கள். சிலருக்கு வேலை வாய்ப்பிற்குரிய தகவல் வரும். எதிர்பாலினத்தினரின் நட்பில் சில சங்கடங்கள் உண்டாகும். புதிய முயற்சியில் எச்சரிக்கை தேவை.உங்களை சோதிக்கும் அளவில் சில சம்பவம் நடக்கும்.




அண்ணாமலையாரை வழிபடுங்கள். விருப்பம் நிறைவேறும். ஞாயிறு வரை செலவு அதிகரிக்கும். புதிய சொத்து வாங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். திங்கள் முதல் எதிர்பார்ப்பு ஒவ்வொன்றாக நிறைவேற ஆரம்பிக்கும். உங்கள் செயல்களில் வேகமும் விவேகமும் இருக்கும். திருமண வயதினருக்கு வரன் தேடி வரும். புதிய முயற்சியால் ஆதாயம் அதிகரிக்கும். பூர்வீக சொத்துகளில் ஏற்பட்ட பிரச்னைகள் தீரும். எதிர்ப்பு விலகும்.




குருபகவானை வழிபட வெற்றி உண்டாகும். வெள்ளியன்று மனம் மகிழும்படியான நிலை உண்டாகும். சனி, ஞாயிறில் பொருளாதார நிலை உயரும். திங்கள் முதல் எதிர்பாராத வரவுகள் உண்டாகும். முயற்சிகள் எளிதாக நிறைவேறும்.லாப ஸ்தான கேதுவால் வருமானம் உயரும். மூன்றாமிட சூரியனால் முன்னேற்றத்தை அடைவீர்கள். துணிவுடன் செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள்.




அனுமனை வழிபட சங்கடம் மறையும். எதிர்பாராத செலவுகளை சந்திப்பீர்கள். சனி, ஞாயிறில் பணவரவு அதிகரிக்கும். நிதிநிலை உயரும். முயற்சிக்கேற்ற லாபம் உண்டாகும். கொடுக்கல், வாங்கலிலும் பேச்சிலும் கவனம் தேவை. விரும்பியதை அடையும் வாரம் இது. தொழிலில் இருந்த தடைகள் விலகும். எதிர்பார்த்த வகையில் லாபம் அதிகரிக்கும். வெள்ளியன்று செலவுகள் கூடும். பொன், பொருள் சேரும்.




அம்மன் வழிபாடு அல்லல் தீர்க்கும். நினைத்ததை சாதிக்கும் வாரம் இது. நீங்கள் மேற்கொள்ளும் முயற்சி உங்களுக்கு சாதகமாகும். தொழிலை விரிவு செய்யும் முயற்சி பலிக்கும். வேலை தேடியவர்களுக்கு வேலை வாய்ப்பு அமையும். வர வேண்டிய பணம் வந்து சேரும் மூன்றாமிட ராகுவால் தைரியம் அதிகரிக்கும். முயற்சியில் வெற்றி கிடைக்கும். இரண்டாமிட குருவால் வியாபாரம் லாபத்தை நோக்கிச் செல்லும். புதிய முயற்சி வெற்றியாகும். நீண்டநாள் பிரச்னை ஒன்று தீரும்.




சிவனை வழிபட சுபிட்சம் தோன்றும். உங்கள் எதிர்பார்ப்பு எளிதாக நிறைவேறும். குடும்ப நலனில் அக்கறை செலுத்துவீர்கள். திங்கள், செவ்வாயில் செலவுகளும் அதனால் நெருக்கடியும் தோன்றும். புதன் முதல் வருவாய் அதிகரிக்கும். தன்னம்பிக்கையுடன் போராடி நினைத்ததை முடிப்பீர்கள். மூன்றாமிட செவ்வாயால் திறமை வெளிப்படும். இதுவரை இருந்த பிரச்னைகள் தீரும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். திங்கள், செவ்வாயில் சில நெருக்கடிகளை சந்திப்பீர்கள்.வாரத்தின் முதல் மூன்று நாளும் முயற்சிகள் வெற்றியாகும். உடல் நிலையில் கூடுதல் கவனம் தேவை.

# தத்தளிக்கும் புளகாங்கிதம் தத்தளிக்கும் நிறைவு?

மாலி

இலங்கையின் தமிழ் பத்திரிகை, ஒலிபரப்பின் பிதாமகர் சோ. சிவபாத சுந்தரம், 'இலக்கிய யாத்திரை' என்று எழுதிய அவரின் வாழ்க்கைக் குறிப்பில், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே தமிழர்களின் மொழி, கலை, கலாசார ரீதியான பரிவர்த்தனையையும் பிணைப்பையும் அந்நியோன்யத்தையும் அநாயாசமாக உணர்த்துவார். அவருடைய வாழ்வும் அதை உணர்த்தும்.

'இசை, நாட்டியத்தைத் தவிர, நாடக மேடைக்கும் வண்ணார்பண்ணை சிறப்பு பெற்றிருந்த நாள்கள் அவை. இங்கிருந்த தகர கொட்டகையில்தான் கிட்டப்பாவும் சுந்தராம்பாளும் கோவிந்தசாமியும் சுப்பையா பாகவதரும் ராஜலக்ஷ்மியும் மற்றும் ஹார்மோனிய சக்கரவர்த்திகளும் தோன்றிப் புகழ்பெற்றார்கள். முதலில் மதுரை தங்கம் தியேட்டர். அடுத்து, வண்ணார்பண்ணை தகரக் கொட்டகை. இந்த இரு மேடைகளின் வரவேற்பைப் பெற்றால்தான் அந்த நாட்களில் நாடக கலைஞர்கள் அங்கீகரிக்கப்படுவார்கள் என்ற நியதி அப்போது இருந்தது.' - அவர் சொல்கிறார்.

தகர கொட்டகை என்பது, மனோகரா தியேட்டர்.

யாழ்ப்பாணத்தில், இந்திய அரசால் நிர்மாணிக்கப்பட்ட கலாசார நிலையம் பெப்ரவரி 11ஆம் திகதி இலங்கை அரசாங்கத்திடம் உத்தியோகபூர்வமாக ஒப்படைக்கப்பட்ட சிலதினங்களில், 15ஆம் திகதி, இந்திய சுதந்திரத்தின் 75ஆவது ஆண்டு நிறைவையொட்டிய கொண்டாட்டமாக ஒரு கர்நாடக இசைக் கச்சேரி அங்கு நடைபெற்றது.

யாழ்ப்பாணத்துக்கு உண்மையில் ஒரு வரப்பிரசாதம் அந்த மண்டபம். ரசிக ரஞ்சன சபா, அண்ணாமலை மன்றம், இளங்கலைஞர் மன்றம் என்று இன்னோரன்ன சபாக்களாலும் அமைப்புக்களாலும் பல்வேறு இடங்களில் பல்வேறு மண்டபங்களிலும், கோவில் திருவிழாக்களிலும் செழுமைபெற்றவை யாழ்ப்பாணத்து கலைகளும், இக் கலா ரசனையும்.

யாழ்ப்பாண மாநகர சபை மண்டபத்தையடுத்து, அந்த வேளையில் ஒரு புதிய அரங்காக தோற்றிய வீரசிங்கம் மண்டபம், கூடவே ஓர் அந்தஸ்தையும் அப்போது பெற்றது. எனினும், அந்த மண்டபத்தின் ஒலியியல் முறைமை (Acoustic system) அதற்கு ஒரு பின்னடைவாகியது. நடன அரங்கேற்றம் ஒன்றுக்கு பிரதம விருந்தினராக வந்த வீணை பாலசந்தர் அது தொடர்பில் அப்போது மேடையில் சொன்னதும், யாழ்ப்பாணத்து பெருமைமிக்க கலைப் பாரம்பரியத்தில், ஒரு குறிப்பாகவே இடம்பெறுவது.

இசையை, நடனத்தை, மற்றும் நுகர் கலைகளை சௌகரியமாக, ஆழ்ந்து அகன்று, நுண்ணிதாக நுகர்வது இப்போது வாய்ப்பாகிறது. சென்னையில், சங்கீத வித்வத் சபையை (மியூசிக் அக்கடெமி) இப்படிச் சொன்னால், அத்தகைய ஒரு மண்டபம் இந்த யாழ்ப்பாண கலாசார நிலையத்து மண்டபம். இந்த புளகாங்கிதம் மண்டபத்துள் நுழைந்தவுடனேயே ஏற்பட்டது. எனினும், தொடரும் எண்ண அலைகளில், அந்தப் புளகாங்கிதம் தத்தளிக்கிறது, அதை விடுவோம்.





டாக்டர் அருந்ததி பகவதீஸ்வர ஐயர் என்ற, கேரளத்து கர்நாடக இசைக் கலைஞர் ஒருவரின் கச்சேரி. பொதுவான சங்கீத உலகில், எமக்கு அறிமுகமற்றவர். பக்கவாத்திய கலைஞர்களும் அங்கிருந்தே வந்தவர்கள்.

**சென்னையில் சங்கீத வித்வத் சபையை (மியூசிக் அக்கடெமி) இப்படிச் சொன்னால், அத்தகைய ஒரு மண்டபம் இந்த யாழ்ப்பாண கலாசார நிலையத்து மண்டபம்.**

'ஐசிசிஆர்' என்று அழைக்கப்பெறும் இந்திய கலாசார உறவுகளுக்கான இந்திய அரசின் அமைப்பு, அதன் அநுசரணையில், கலைஞர்களை இப்படி வெளிநாடுகளுக்கு அவ்வப்போது அனுப்புகிறது.

அருந்ததி பகவதீஸ்வர ஐயரும் ஐசிசிஆர் அநுசரணையில்தான் இங்கு வந்திருந்தார்.

யாழ். இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டிலான இந்த நிகழ்ச்சியின் தொடக்கத்தில் பாடப்பட்ட தமிழ்த்தாய் வாழ்த்து மனதைச் சற்று குழப்பிவிட்டது.

"நீராரும் கடலுடுத்த….." என்ற மனோண்மணீயம் சுந்தரனாரின் பாடல் தான். இது, கடந்த ஐம்பது ஆண்டுகளாக பாடப்பட்டுவருகிறது. கருணாநிதி முதலமைச்சராகவிருந்தபோது, தமிழக அரசின் தமிழ்த் தாய் வாழ்த்தாக இதனை அறிவித்தார். எம். எஸ். விஸ்வநாதன் இசை அமைத்து, ரி. எம். சௌந்தரராஜனும் எல். ஆர். ஈஸ்வரியும் பாடினார்கள். தேசிய கீதத்தைப் போன்ற உணர்வூட்டும் ஒரு கம்பீரம் அதில் நிறையும்.

1981இல் மதுரையில் நடைபெற்ற ஐந்தாவது உலக தமிழாராய்ச்சி மாநாட்டில் அந்த பத்து நாள்களும் இதனைக் கேட்ட உணர்வு மனதில் ரீங்காரமிடுகிறது. வெள்ளை வெளேரேன்ற உடையுடன், முதலமைச்சர் எம். ஜி. ஆர். எழுந்து, கம்பீரத்துடன் நிற்பது தெரிகிறது.

எம். எஸ். சுப்புலக்ஷ்மி ஒருமுறை கடவுள் வாழ்த்தாக, பாபநாசம் சிவனின் "கஜவதனா கருணா…." கீர்த்தனையைப் பாடினாராம். அதைக் கேட்ட கருணாநிதி, "இது என்ன, தமிழ் பாடலா…" என்று கேட்டாராம். அதன் பின்னர் தான், மனோன்மணீயம் சுந்தரனாரின் பாடலை அவர் தேர்ந்ததாக, தமிழ்நாடு அரசு கலைக் கல்லூரியின் முன்னாள் துணைவேந்தர் டாக்டர் பிரமீளா குருமூர்த்தி ஒருமுறை சொன்னார்.

மோகனத்தில், எம். எஸ். விஸ்வநாதன் அந்த மிடுக்கை அப் பாடல் வரிகளுக்கு சேர்த்தார். அது, அதற்கான மெட்டாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, பேணப்படுகிறது. அதுவே, தமிழ்த்தாய் வாழ்த்து.

ஆக இதில், சிந்துபைரவி இதம் சேர்க்குமா? மங்கை ஒருவர் சிந்துபைரவியில் அங்கு இதனைப் பாடினார்.

ஓர் அதீத எடுப்பில், அருந்ததி பகவதீஸ்வர ஐயர் தன்னுடைய கச்சேரியை தொடங்கியமைதான் சோ. சிவபாதசுந்தரம் சொல்லும் யாழ்ப்பாணத்து தகர கொட்டகையை நினைவில் கொணர்ந்தது. அவர் சொல்லும் 'யாழ்ப்பாணத்து அங்கீகாரத்தை' பகவதீஸ்வர ஐயர் தெரிந்திருந்தாரா…?

வராளி, கீரவாணி ராகங்களை பிரதானமாக பாடினார். கெஞ்சிரா, கடமும் சேர, நல்ல பக்கவாத்தியம். ரசிக்கவைத்த தனியாவர்த்தனம்.

தமிழ் உருப்படிகளையே பாடப் போவதாக பாடியவர், கேரள சம்பிரதாயத்தில் நீலாம்பரியிலான மங்களத்துடன் கச்சேரியை முடித்தார்.

எஸ். பாலசந்தர் வீரசிங்கம் மண்ட பத்து ஒலி அமைப்பை சிலாகித்திருந்த போது, அருந்ததி பகவதீஸ்வர ஐயர் ஒலி அமைப்புக்கு அன்று தனி யான பாராட்டு தெரி வித்தார். பல்கணி உள்பட 620 இருக்கைகளுடன், நல்ல ஒலியியல் அமைப்புடனான அந்த மண்டபத்தில், 'சேகர் சவுண்ட்' அன்றைய ஒலி அமைப் பைச் செய்தது.

ஆக, மாதந்தோறும் ஐசிசிஆர் அநுசரணையுடன் இங்கு கச்சேரிகள் நடக்கும் என்று துணைத்தூதர் ராகேஷ் நட்ராஜ் சொன்ன செய்தி, மண்டபத்திலிருந்து வெளியேறுகையில் நிறைவைத் தந்தது.

ஆனாலும் ஏன், அந்த நிறைவும்கூட தத்தளிக்கிறது?

இலங்கை அரசிடம் யாழ்ப்பாணத்துக்கான இக் கலாசார மண்டபத்தைக் கையளிக்க வந்திருந்த பாஜக அமைச்சர் முருகன், தமிழ்நாடு பாஜக தலைவர் அண்ணாமலை ஆகியோரிடம், கையளிப்பு வைபவத்துக்கு முதல்நாள், 'தமிழர்களுக்காக கட்டப்பட்ட இந்த கலாசார மண்டபத்தை தமிழர்களிடமே கையளியுங்கள்' என்று ஆறு. திருமுருகன், கம்பன் விழாவில் விடுத்த பகிரங்க வேண்டுகோளில் மையங்கொண்டு எழுகின்ற அலையின் தத்தளிப்பு இதுவெனச் சொல்லிவிடலாம்.





# நெடுமாறனின் அறிவிப்பினால் யாருக்கு பயன்?



♦ வீரகத்தி தனபாலசிங்கம்

விடுதலை புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிருடன் இருப்பதாக தமிழ் தேசிய இயக்கத்தின் தலைவர் பழ. நெடுமாறன் கடந்த வாரம் கூறியது நிதானமாக சிந்திக்கக்கூடிய எவரையும் பரபரப்புக்கோ குழப்பத்துக்கோ உள்ளாக்கியிருக்க முடியாது. இதற்கு முன்னரும் சில தடவைகள் அவர் அவ்வாறு கூறியது எம்மெல்லோருக்கும் தெரியும்.

கடந்த திங்கட்கிழமை தஞ்சாவூர் முள்ளிவாய்க்கால் முற்றத்தில் நெடுமாறன் நடத்திய செய்தியாளர்கள் சந்திப்புக்கு பிறகு இந்திய ஊடகங்கள் வெளியிட்ட தகவல்களின் அடிப்படையில் பார்க்கும்போது அவர் 2010 ஆம் ஆண்டு தூத்துக்குடியில் செய்தியாளர்கள் மத்தியில் முதற்தடவையாக பிரபாகரன் உயிருடன் இருப்பதாக கூறினார். ஈழத்தில் போர் மீண்டும் மூளும். அதற்கு பிரபாகரனே தலைமை தாங்குவார் என்றும் அவர் கூறியதாக அறிய முடிகிறது.

பிறகு 2016 பெப்ரவரியில் கோயம்புத்தூரில் செய்தியாளர்களிடம் விடுதலை புலிகளின் தலைவர் உயிருடன் இருப்பதாகவும் அவரது மரணத்தை இந்திய அரசாங்கம் ஒருபோதும் உறுதிப்படுத்தவில்லை என்றும் அவர் கூறினார். அடுத்து 2018 ஆம் ஆண்டில் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகைக்கு அளித்த நேர்காணலில் பிரபாகரன் ஒருபோதும் பிடிபடவில்லை. தப்பி வெளியேறிவிட்டார் என்று கூறினார். அதை அந்த பத்திரிகையே கடந்த வாரம் மீண்டும் சுட்டிக்காட்டியது.

நெடுமாறனைப் போன்றே பிரபாகரனையும் விடுலை புலிகளையும் மையப்படுத்திய அரசியலுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் வைகோவும் நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமானும் நெடுமாறன் கடந்த வாரம் வெளியிட்ட தகவல்களுடன் உடன்படவில்லை.

தமிழ் தேசிய இயக்கத்தின் தலைவர் கூறிய தகவல்களை தனக்கு இருக்கக்கூடிய தொடர்புகள் மூலமாக உறுதிசெய்ய முடியவில்லை என்று வைகோ கூறிய அதேவேளை, கடந்த வருடம் லண்டனில் இருந்து தன்னுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டவர்கள் பிரபாகரன் உயிருடன் இருப்பதாக இதே போன்று அறிக்கையொன்றை வெளியிடுமாறு கேட்டுக்கொண்டதாவும் ஆனால் தன்னுடன் அண்ணன் (பிரபாகரன் ) தொடர்புகொண்டு கேட்டால் அதற்குப் பிறகு அறிக்கையை வெளியிடுவதாக பதிலளித்ததாகவும் சீமான் கூறினார்.

போர்க்களத்தில் தமிழ் மக்களை கைவிட்டு தன்னையும் குடும்பத்தையும் காப்பாற்றிக்கொண்டு தப்பியோடுகின்ற கோழை அல்ல விடுதலை புலிகளின் தலைவர் என்றும் கூறிய சீமானிடம் பிரபாகரன் ஒரு நாள் வந்தால் என்ன செய்வீர்கள் என்று செய்தியாளர்கள் கேட்டபோது "கடவுள் இல்லை என்ற கொள்கையை கொண்டிருந்த ஐயா பெரியாரிடம் கடவுள் ஒருநாள் நேரில் வந்தால் என்ன செய்வீர்கள் என்று ஒரு தடவை கேட்டார்கள். அதற்கு அவர் அவ்வாறு வந்தால் கடவுள் இருக்கிறார் என்று சொல்லிவிட்டுப் போவோம் என்று பதிலளித்தார்.. அதேபோன்று அண்ணன் உயிருடன் வந்தால் நாமும் சொல்லிவிட்டுப் போவோம்" என்று பதில் கூறினார்.



"பிரபாகரன் உயிருடன் நலமே இருக்கிறார். அவரின் குடும்ப உறுப்பினர்களுடன் நான் தொடர்பில் இருக்கிறேன். அவர்களின் அனுமதியுடனேயே இதை அறிவிக்கின்றேன். ஈழத் தமிழர்களின் மீட்சிக்கான திட்டத்துடன் பிரபாகரன் விரைவில் வருவார். உலகம் பூராவும் வாழும் தமிழர்களுக்கு இதை அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். ஈழத்தமிழர்களும் உலகத் தமிழர்களும் அவருக்கு ஆதரவை வழங்கவேண்டும். தமிழ்நாடு அரசாங்கமும் சகல அரசியல் கட்சிகளும் அவருக்கு ஒன்றுபட்டு ஆதரவை வழங்கவேண்டும். தற்போதைய சர்வதேச நிலைவரமும் இலங்கையில் ராஜபக்ச ஆட்சி மக்கள் கிளர்ச்சியில் வீழ்த்தப்பட்ட சூழ்நிலையும் பிரபாகரன் பற்றிய இந்த தகவலை அறிவிப்பதற்கான பொருத்தமான தருணமாகும்" என்று நெடுமாறன் முள்ளிவாய்க்கால் முற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் கூறினார்.

மேலும் அவர், "விடுலை புலிகள் பலத்துடன் இருந்தபோது இந்திய விரோத சக்திகள் தமிழ் மண்ணைப் பயன்படுத்த அவர்கள் ஒருபோதும் அனுமதிக்கவில்லை. இந்தியாவின் எதிரி நாடுகளிடம் இருந்து எந்தவொரு காலப்பகுதியிலும் எந்த உதவியையும் பெறாமல் இருப்பதில் பிரபாகரன் உறுதியாக இருந்தார். சீனா இப்போது இலங்கையை கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது. இந்தியாவுக்கு எதிராக சீனா இலங்கையைப் பயன்படுத்துவதை தடுக்க இந்திய அரசாங்கம் உகந்த நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்து சமுத்திரத்தில் சீன ஆதிக்க அச்சுறுத்தலை தடுக்க இந்தியா தலையிடவேண்டும்" என்றும் கூறினார்.

பிரபாகரனின் மனைவி, மகள் குறித்து கேட்டபோது அவர்கள் நலமாக இருக்கிறார்கள் என்று கூறிய நெடுமாறன் பிரபாகரனின் குண்டு துளைத்த சடலம் என்று காண்பித்து இலங்கை அரசாங்கம் 2009 மே 19 வெளியிட்ட காணொளி குறித்த கேள்விக்கு பதிலளிக்க மறுத்துவிட்டார்.

அவருக்கு அருகில் இந்தியாவில் வசிக்கும் கவிஞர் காசி ஆனந்தனும் வேறு முக்கியஸ்தர்களும் கூட இருந்தனர். செயதியாளர்கள் சந்திப்பின் முடிவில் அவர்கள் இனிப்பு பண்டங்களை எல்லோருக்கும் வழங்கி மகிழ்ந்ததை காணொளி மூலம் காணக்கூடியதாக இருந்தது.

பிரபாகரன் உயிருடன் இருப்பதாக நெடுமாறன் கூறிய முன்னைய சந்தர்ப்பங்களின்போது அந்த செய்திக்கு கொடுக்காத முக்கியத்துவத்தை இந்த தடவை இந்தியாவின் பிரதான பத்திரிகைகளும் மற்றைய ஊடகங்களும் கொடுத்திருக்கின்றன. கடந்த ஒரு வாரகாலமாக இந்திய தொலைக்காட்சிகளில் நெடுமாறனின் அறிவிப்பு மற்றும் அதற்கு இருக்கக்கூடிய பின்னணி குறித்து தொடர்ச்சியாக விவாதங்கள் நடைபெற்றுவருகின்றன. யூ ரியூப் தமிழ் அலைவரிசைகளை பிரபாகரன் பற்றிய கலந்துரையாடல்களும் நேர்காணல்களும் ஆக்கிரமித்திருக்கின்றன. அதன் காரணத்தினால் இந்த தடவை நெடுமாறனின் நடவடிக்கையின் பின்னால் அரசியல் காரணியொன்று இருக்கின்றது என்று அவதானிகள் பலரும் சந்தேகத்தை வெளிப்படுத்துவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

வைகோ, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் மற்றும் தமிழக வாழ்வுரிமை கட்சியின் தலைவர் வேல் முருகன் போன்ற விடுதலை புலிகள் ஆதரவு அரசாயல் வாதிகளையும் முள்ளிவாய்க்கால் முற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் பங்கேற்கச் செய்து தனது அறிவிப்புக்கு பரந்தளவிலான "ஏற்புடைமையை" தோற்றுவிப்பதற்கு நெடுமாறன் முயற்சித்ததாகவும் இறுதி நேரத்தில் அது கைகூடாமல் போய்விட்டதாகவும் தமிழக செய்திகள் கூறுகின்றன. பிரபாகரன் பற்றிய அறிவிப்பு காலப்பொருத்தமானதோ அல்லது அரசியல் பொருத்தமானதோ அல்ல என்றும் இதன் பின்னணியில் இந்திய அரசாங்கமும் அதன் உளவுப்பிரிவும் இருப்பதாகவும் திருமாவளவன் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

இந்திய அரசாங்கத்திடமிருந்தோ அல்லது தமிழ்நாடு அரசாங்கத்திடமிருந்தோ இந்த கட்டுரை எழுதப்பட்டுக் கொண்டிருந்த தருணம் வரை எந்த

(09ஆம் பக்கம் பார்க்க)



# பிரபாகரன் மரணம்: எத்தனை சந்தர்ப்பங்களில் மறுக்கப்பட்டுள்ளது?

முரளிதரன்
காசி விஸ்வநாதன்

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் இலங்கையில் நடந்த உள்நாட்டுப் போரின் இறுதிக்கட்டத்தில் கொல்லப்படவில்லை என்றும் அவர் உயிருடன் இருப்பதாகவும் உலகத் தமிழர் பேரவை தலைவர் பழ. நெடுமாறன் தெரிவித்திருக்கிறார். இவரது கூற்றை இலங்கை ராணுவம் மறுத்துள்ளது. ஆனால், பிரபாகரனின் மரணம் மறுக்கப்படுவது இது முதல் முறையல்ல.

2009ஆம் ஆண்டு மே மாதம் இலங்கையில் நடந்த உள்நாட்டுப் போரின் இறுதிக் கட்டத்தில் புலிகள் இயக்கம் முழுமையாக அழிக்கப்பட்டு விட்டதாக இலங்கை அரசு அறிவித்தது. இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் மே 18-19ஆம் தேதிகளில் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

ஆனால், தமிழ்நாட்டில் உள்ள தமிழீழ ஆதரவாளர்கள் பிரபாகரன் கொல்லப்பட்ட செய்தி வெளிவந்த உடனேயும் அதற்குப் பிறகும் பல தருணங்களில் அவர் மரணமடையவில்லை என்று கூறி வந்துள்ளனர்.

1. பிரபாகரன் கொல்லப்பட்ட சில நாட்களில் அதாவது 2009ஆம் ஆண்டு மே 21ஆம் தேதி பேசிய பழ. நெடுமாறன், அந்தச் செய்தியைக் கடுமையாக மறுத்தார். "பிரபாகரன் கொல்லப்பட்டதாக ஏற்கெனவே மூன்று முறை இலங்கை ராணுவம் பொய்ச் செய்திகளை வெளியிட்டுள்ளது. இதன் பின்னணியில் இந்திய உளவு அமைப்பான "றோ" இருக்கிறது. இதுபோன்ற



பொய்ச் செய்திகளைப் பரப்புவது கண்டனத்துக்குரியது. அவரது மண்ணில் பிரபாகரன் பாதுகாப்பாக இருக்கிறார்," என்று கூறினார் நெடுமாறன்.

2. இதற்கு அடுத்த நாள், அதாவது 2009 மே 22ஆம் தேதி புலிகள் இயக்கத்தின் சர்வதேச பொறுப்பாளராக இருந்த செல்வராசா பத்மநாபன், "பிரபாகரன் சாகவில்லை, உயிருடன் பாதுகாப்பாக - நலமாக இருக்கிறார்" என்று அறிக்கை வெளியிட்டார். (ஆனால், இதற்கு ஒரு வாரத்திற்குப் பிறகு பிபிசியிடம் பேசிய அவர் பிரபாகரன் மரணம் அடைந்ததாகக் கூறினார்).

3. மே 24, 2009: பிரபாகரன் மரணமடைந்த தருணத்தில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அதை ஏற்கவில்லை. அவர் உயிரோடு இருப்பதாகவே பல காலம் தெரிவித்து வந்தார். 2009ஆம் ஆண்டு மே 24ஆம் தேதி பேசிய வைகோ, "தமிழ்த் தேசிய இனத்தின் தலைவரும் உலகத் தமிழர்களின் இதய நாயகனுமான பிரபாகரன் அவர்கள் உயிருடன் இருக்கிறார். அதில் எள் அளவும் எனக்குச் சந்தேகம் இல்லை. உரிய காலத்தில் தமிழ் ஈழத்தை வென்றெ



டுக்க வருவார். தலைவர் பிரபாகரன் அவர்கள், உயிருடன் இருக்கிறார்" என்று கூறினார்.

4. ஜனவரி 20, 2010: பிரபாகரனுடைய தந்தை வேலுப்பிள்ளை இறந்தபோது, அதில் பங்கேற்க இலங்கை சென்று திரும்பினார் திருமாவளவன். அப்போது பேசிய அவர், "எங்களிடம் பேசிய பலரும் பொட்டு அம்மான் பற்றி மறக்காமல் கேட்டனர். பிரபாகரன், பொட்டு அம்மான், சூசை ஆகிய 3 பேரும் ஒன்றாகத்தான் இருந்தனர். எனவே 3 பேரும் ஒன்றாக பாதுகாப்பாகத்தான் இருக்கிறார்கள் என்று பெரும்பாலானவர்கள் கூறினர். பிரபாகரனும் இருக்கிறார். பொட்டு அம்மானும் இருக்கிறார்" என்று தெரிவித்தார் திருமாவளவன். ஆனால், 2021 டிசம்பரில் அளித்த பேட்டி ஒன்றில், அவர் பிரபாகரன் உயிரோடு இருப்பதாகத் தான் நம்பவில்லை என்று தெரிவித்தார்.

5. ஜூன் 11, 2009: அதே ஆண்டு ஜூன் மாதத்திலும் பிரபாகரன் உயிரோடு இருப்பதாக வைகோ கூறினார். "புலிகளுக்கு நிகராகப் போர் நடத்தியவர்கள் யாரும் இல்லை. பிரபாகரன் உயிருடன்தான் உள்ளார். இதில் யாருக்கும் எந்த சந்தேகமும் வேண்டாம். உரிய நேரம் வரும்போது அவர் வெளியே வருவார். அப்போது பலரது முகத்திரை கிழியும்" என்று கூறினார்.

6. 2014 ஜனவரி 16: தென்காசி மாவட்டம் கலிங்கப்பட்டியில் நடந்த பொங்கல் நிகழ்ச்சியில் பேசிய ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, பிரபாகரன் மீண்டும் வந்து தமிழீழத்தை



மீட்பார் என்று தெரிவித்தார்.

7. 2018 அக்டோபர் 13: ராமநாதபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய பழ. நெடுமாறன், "இலங்கையில் மக்கள் போராட்டம் நடத்தத் துவங்கியுள்ளனர். இதுபோன்ற பிரச்னைகள் தொடர்வதால், அங்கு தமிழீழம் அமைய வேண்டும் என்ற போராட்டம் வெடிக்கும். விடுதலை புலிகள் இயக்கத் தலைவர் இறுதிக் கட்ட போரில் கொல்லப்படவில்லை. அவர் நலமுடன் இருந்து வருகிறார். இலங்கை தமிழர்களின் உரிமை போராட்டக் களத்தில் உரிய நேரத்தில் வெளிப்படுவார்" என்று தெரிவித்தார்.

8. 2018 டிசம்பர்: ஒரு தனியார் தொலைக்காட்சிக்குப் பேட்டியளித்த வைகோ, "பிரபாகரன் உயிருடன் இருப்பதாக நான் உணர்வுப்பூர்வமாக நம்புகிறேன். கோடியக்கரை கடலில் இறங்கி பிரபாகரனின் கனவை நனவாக்குவேன் என்று சபதமிட்டேன். என்னைப் பொறுத்தவரையில் பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என்றே நம்புகிறேன். இதில் விவாதிக்க எதுவும் இல்லை" என்று குறிப்பிட்டார்.

# நெடுமாறனின் அறிவிப்பினால்....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிபலிப்பும் வெளியாகியிருக்கவில்லை. இந்த விவகாரத்தை மத்திய அரசாங்கத்தின் கவனத்துக்கு கொண்டு செல்லப்போவதாகவும் அதற்கிடையில் தமிழ்நாடு அரசாங்கம் அதன் நிலைப்பாட்டை வெளிப்படுத்தவேண் டும் என்றும் அகில இந்திய பயங்கரவாத எதிர்ப்பு முன்னணியின் தலைவரான மனிந்தர்ஜீத் சிங் பிட்டா திருப்பதி - திருமலையில் செய்தியாளர்கள் மகாநாட் டில் கடந்த வியாழக்கிழமை கூறியதாக பத்திரிகைச் செய்திகள் மூலம் அறியக்கூடியதாக இருந்தது.

தமிழ் தேசிய இயக்கத்தின் தலைவரின் அறிவிப்பை எதிர்பார்க்கப்பட்டதைப் போன்றே இலங்கை இராணுவம் உடனடியாகவே நிராகரித்தது. 2009 மே 18 பிரபாகரன் இறந்ததை அன்றைய மகிந்த ராஜபக்ச அரசாங்கம் மரபணு சோதனை மூலம் உறுதிப்படுத்தியதாகவும் அந்த தகவலை அன்றைய இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜிக்கு ஜனாதிபதி மகிந்த தொலைபேசி மூலம் தெரியப்படுத்தியதாகவும் வெளியான செய்திகளையும் விடுதலை புலிகளின் சர்வதேச உறவுகள் பிரிவு தலைவராக இருந்த குமரன் பத்மநாதன் (கே.பி.) 2009 மே 24 பி.பி.சி.க்கு வழங்கிய நேர்காணலில் "எமது இணையற்ற தலைவர் வீரமரணமடைந்துவிட்டார்" என்று கூறியதையும் ஊடகங்களும் அரசியல் அவதானிகளும் கடந்த வாரம் நினைவூடியதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

தன்னால் வெளியிடப்பட்ட தகவல்களுக்கு "சான்றாக" பிரபாகரனின் குடும்ப உறுப்பினர்களுடன் தான் வைத்திருப்பதாகக் கூறும் தொடர்புகளை மாத்திரமே நெடுமாறன் முன்வைத்திருக்கிறார். அதேவேளை, விடுதலை புலிகளின் தலைவர் பற்றிய தகவல்களை வெளியிடுவதற்கு தற்போதைய சர்வதேச நிலைவரமும் ராஜபக்ச ஆட்சிக்கு எதிரான கடந்த வருடத்தைய மக்கள் கிளர்ச்சியும் பொருத்தமான தருணம் என்று அவர் கூறிய கருத்து பல்வேறு விமர்சனங்களுக்கு உள்ளாகியிருக்கிறது.

கடந்த வாரத்தைய அறிவிப்பும் முன்னைய அறிவிப்புக்களைப் போன்று இருந்ததே தவிர, வெளியுலகம் நம்பக் கூடியதாக புதிய தகவல் எதையும் நெடுமாறன் வெளியிடவில்லை. செய்தியாளர்களினால் கிளப்பப்பட்ட முக்கியம ான கேள்விகளுக்கும் அவர் உருப்படி யான பதில்களை அறிவிக்கவில்லை. முன்னைய சந்தர்ப்பங்களைப் போலன்றி இத்தடவை முன்கூட்டியே தயாரிக்கப் பட்ட அறிக்கையொன்றை அவர் வெளியிடடார். அது ஒன்றுதான் வித்தியாசம்.

தனது அறிவிப்புக்கு தமிழ்நாட்டு அரசியல் காரணிகள் ஏதாவது இருக்கிறதா என்று கேட்டதற்கு அவ்வாறு எதுவும் இல்லை என்று நெடுமாறன் திட்டவட்டமாக மறுத்ததாக இந்து ஆங்கில பத்திரிகையின் இணை ஆசிரியர் தி.இராமகிருஷ்ணன் கூறியிருந்தார். நான்கு தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக தேர்தல் அரசியலில் இருந்து ஒதுங்கியிருக்கும் நெடுமாறன் அடுத்து வரக்கூடிய எந்தவொரு தேர்தலையும் மனதிற்கொண்டு இந்த அறிவிப்பைச் செய்திருக்க பெரும்பாலும் வாய்ப்பில்லை.

இந்த நிகழ்வுப்போக்குகள் எல்லாம் இலங்கை அரசியலில் குறிப்பாக தமிழர் அரசியலில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதும் இதனால் யாருக்கு பயன் என்பதும் முக்கியமான கேள்விகள்.

உள்நாட்டுப்போர் முடிவுக்கு வந்து பதினான்கு வருடங்கள் நிறைவடையவிருக்கும் நிலையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவமயம் குறைந்தபாடாக இல்லை. அதை குறைக்கவேண்டும் என்ற தமிழ் மக்களின் இடையறாத கோரிக்கைக்கு இதனால் பாதிப்பு ஏற்படலாம் என்பது பரவலான அபிப்பிராயமாக இருக்கிறது. இராணுவத்தின் பலத்தை முன்றில் ஒரு பங்கால் குறைப்பதற்கு திட்டமிருப்பதாக அண்மையில் அரசாங்க தரப்பில் இருந்து அறிவிப்பு வெளியானது கவனிக்கத்தககது.

அரசியலமைப்புக்கான 13 வது திருத் தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்தப் போவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த மாதம் செய்த அறிவிப்பை அடுத்து கிளர்ந்தெழுந்திருக்கும் சிங்கள தேசியவாத சக்திகளுக்கும் மகாசங்கத்துக்கும் "தீனி" போடுவதாகவும் இது அமைகிறது. தென்னிலங்கையில் கிளம்பிய எதிர்ப்பைக் கண்டு இப்போது ஜனாதிபதி 13 என்று வாயெடுக்கவே தயங்குகிறார். தங்களது மீளெழுச்சிக்காக சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்கை வளர்க்க மீண்டும் "புலிப்பூச்சாண்டி" காட்டுவதற்கு இந்த சந்தர்ப்பத்தை ராஜபக்சாக்கள் பயன்படுத்தவும் கூடும். மீண்டும் "தமிழ்ப் பயங்கரவாதம்" தலைதூக்காமல் இருக்கவேண்டும் என்றால் தங்களது ஆட்சியே மீண்டும் வரவேண்டும் என்று அவர்கள் கூறினாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

பிரபாகரனை அவரது ஆதரவாளர்களும் எதிரிகளும் ஒருபோதும் மறப்பதில்லை. அதனால் அவர் செய்திகளில் இருந்து மறைவதில்லை. எமது தமிழ் அரசியல்வாதிகளில் பெரும்பாலானவர்கள் தங்களுக்கு வசதியான முறையில் அவரின் பெயரைப் பயன்படுத்துவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். தேர்தல்கள் நெருங்கும்போது அது சற்று கூடுதலாக இருக்கும். சிங்கள அரசியல்வாதிகளும் பிரபாகரனை தமக்கு தேவைப்படும்போது அவரை சிங்கள மக்கள் மத்தியில் நினைவுபடுத்துவார்கள்.

ஆனால், பிரபாகரன் மீது ஆழமான பற்றுக்கொண்ட நெடுமாறன் நீண்ட காலமாக கவனத்தை கவரக்கூடியதாக செய்திகளில் அடிபடவில்லை. முதுமை காரணமாக முன்னரைப் போன்று அவரால் அரசியல் செயற்பாடுகளில் ஈடுடமுடியாமல் இருப்பது அதற்கு முக்கிய காரணமாக இருக்கலாம். ஆனால், 89 வயதான அவர் பிரபாகரன் பற்றிய அறிவிப்பை அடுத்து இப்போது சடுதியாக இந்திய மற்றும் இலங்கை மட்டங்களில் மாத்திரமல்ல சர்வதேச அளவிலும் ஊடகங்களை ஆக்கிரமித்திருப்பதை காணமுடிகிறது.

# நெடுஞ்சாலையில் பயணிக்கும் கட்டாக்காலிகள் அரசாட்சி!

பனங்காட்டான்

இலங்கையின் ஆட்சிபீடத்தைப் பொறுத்தளவில் எது நடைபெறும், எவை தரப்படும் என்று சொல்லப்படுகின்றனவோ, அவை நடைபெறுவதும் அவை தரப்படுவதும் என்பது நிச்சயமாக இடம்பெறுவதில்லை.

முக்கியமாக, நாட்டின் பூர்வீக குடிகளான தமிழர் விவகாரங்களில் இவை எப்போதுமே வெறும் பேச்சாகி, நீண்டகால களமாகி இறுதியில் நிறைவேற்றப்படாது போகின்றன.

பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம், பிரபாகரன் - ரணில் சமாதான ஒப்பந்தம், தமிழர் தீர்வுக்கான ராஜீவ் - ஜே.ஆர். ஒப்பந்தம் என்பவை ஏமாற்றப்பட்டதுக்கான தனியான வரலாற்றைக் கொண்டவை. இதற்கும் அப்பால், பேசிப்பேசி உறுதியளித்து உத்தரவாதம் கொடுக்கப்பட்டு மறக்கப்பட்டு மறுக்கப்பட்டவைக்கு இன்னொரு பட்டியலொன்றுண்டு.

2015ஐ அடுத்து மொத்தமாக நாலரை ஆண்டுகள் திருமணமாகாது கூடி வாழும் தம்பதியராக ஷதேநிலவு; களித்து, தமிழர் தரப்பு ஏமாற்றப்பட்ட வரலாறு சம்பந்தன் - சுமந்திரன் இணைத்தலைமையில் இயங்கிய கூட்டமைப்புக்குண்டு.

கோதபாய ஜனாதிபதியானபோது இராணுவ ஆட்சிக்கான வாய்ப்பு உருவாகுவதாகக் கூறப்பட்டது. ஒருவகையில் அவரது ஆளும் போக்கு அவ்வாறுதான் காணப்பட்டது. தம்மை ஜனாதிபதியாக்கிய மூத்த சகோதரர் மகிந்தவை அதிகாரங்களற்ற ஒரு கதிரையில் அமர்த்தி அவரை அசட்டை செய்தார். இளைய சகோதரர் பசிலுக்கும் ஒரு கதிரையை கொடுத்து தனிப் போக்காக நடத்தினார். மற்றொரு மூத்த சகோதரரான சமல் ராஜபக்சவுக்கு மந்திரிப் பதவி கொடுத்தாரே தவிர அவரது எந்த ஆலோசனையும் பெறப்படவில்லை. மூத்த சகோதரர்களின் புதல்வர்களுக்கும் மந்திரிப் பதவிகள் கிடைத்ததாயினும் அவர்கள் எட்டாம் கட்டையில்தான் அமர்த்தப்பட்டனர்.

வியத்மக என்ற பெயரில் 'அறிவாளிகள் குழு' ஒன்றை நியமித்து அவர்களின் ஆலோசனையின்படியே நடந்து கொண்டதால் அறகலய என்ற மக்கள் பேரெழுச்சி கோதபாயவை பதவி துறக்க வைத்தது. இன்றைய நாட்களில் பசில், நாமல் போன்றவர்களிடமிருந்து கோதபாய பற்றி வரும் விமர்சனங்கள் இவர்கள் வெளிவிறாந்தையில் அமர்த்தப்பட்டிருந்த மனக்கசப்பையும் மனத்தாங்கலையும் அம்பலப்படுத்துகிறது.

அறகலய காலத்தில் மகிந்தவை பிரதமர் பதவியிலிருந்து வெளியேற்றாது கோதபாய ஜனாதிபதி பதவியை துறந்திருந்தால், அரசியலமைப்பு முறையாக மகிந்தவே ஜனாதிபதியாகியிருப்பார் எனும் பசிலின் ஓலம், ரணிலின் ஜனாதிபதிப் பதவியிலுள்ள எதிர்ப்பினை வெளிப்படையாகக் காட்டுகிறது.

பசில் அமெரிக்க பிரஜாவுரிமையைத் துறந்து, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பெரமுன சார்பில் போட்டியிடுவார் என்பதும், மார்ச் மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் பெரமுன அமோக வெற்றிபெறும் என்பதும் ரணிலுக்கு அச்சத்தை ஏற்படுத்தவென கூறப்படுபவை. இதனால் ரணில் தமது கதிரையை இறுகப்பற்றிக் கொள்ள வேண்டிய தேவை ஏற்படுத்தப்படுகிறது.

இந்தப் பின்னணியிலேயே ரணிலின் ஆட்சிப் பயணத்தை இப்போது கூர்ந்து பார்க்க வேண்டும்.

13ம் திருத்தம் முழுமையாக அமுல் செய்யப்படுமென்று அறிவித்ததும், சகல அரசியல் கட்சிகளினதும் பங்கேற்புடனேயே புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படுமென தெரிவித்ததும், பெப்ரவரி 4ம் திகதிய உரையில் இது தொடர்பான உறுதிப்பாடுகள் வெளிப்படுத்தப்படுமென கூறியதும், உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் மார்ச் மாதம் 9ம் திகதி இடம்பெறுமென பிரகடனம் செய்ததும்......

இவைகளில் ஏதாவது சாத்தியமானதா? சாத்தியப்படுமா? மார்ச் 8ஆம் திகதிவரை - அதாவது உள்ளூராட்சித் தேர்தலுக்கு முதல் நாள்வரை தேர்தல் நடைபெறுமென்று நிச்சயமாகக் கூறமுடியாதென்பது இப்போது உறுதியாகியுள்ளது.

ஓர் அரசாங்கத்துக்குள் பல அமைச்சுகள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், நிர்வாக சபைகள், ஆணையங்கள் இருந்தாலும் அனைத்துக்குமான 'தலை' ஒன்றுதான். இவை அனைத்தும் ஒன்றுக்கொன்று கூட்டிணைந்து செயற்படுவதுதான் அரச நிர்வாகம். இவை நிர்வாக முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம் ஆகியவற்றால் இணைக்கப்பட்டவை. ஆனால், ரணிலின் ஆட்சியில் அப்படியான அடையாளம் காணப்படவில்லை - காட்டப்படவும் இல்லை.

உள்ளூராட்சித் தேர்தலுக்கான முற்கூட்டிய வாக்களிப்பு அட்டைகளை அச்சடிப்பதற்கு முழுப்பணத்தையும் அரச அச்சகம் கேட்கிறது. யாரிடம் கேட்கிறது? தேர்தல் ஆணைக்குழுவிடம் கேட்கிறது. தேர்தல் ஆணைக்குழு நிதியமைச்சிடமும் திறைசேரியிடமும் கை நீட்டுகிறது. அவர்கள் கை விரிக்கிறார்கள். அதற்குக் கூறப்படும் காரணம் விந்தையானது.

"அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டுமே நிதி செலவிடப்பட வேண் டும். புதிதாக காசு அச்சடிக்க முடியாது" என்று சில நாட்களுக்கு முன்னர் ஜனாதிபதி என்ற அதிகார வழியாக ரணில் சகல அர சாங்க நிர்வாகங்களுக்கும் உத்தரவிட்டார். அதனையே காரணம் காட்டி - அதாவது, தேர்தல் அத்தியாவசிய சேவை அல்ல என்று கூறி நிதி அமைச்சு கைவிரித்துள்ளது.

உள்ளூராட்சிச் சபைகளின் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் ஏற்கப்பட்டு, முற்கூட்டிய வாக்களிப்புக்கான திகதிகளும் அறிவிக்கப்பட்ட பின்னரே, ரணிலின் இந்த உத்தரவு அரசாங்க நிறுவனங்களுக்கு பிறப்பிக்கப்பட்டது. அப்படியெனில் இதன் மறைபொருள் என்ன? தேர்தலுக்கு நிதி உதவி வழங்க வேண்டாமென்பது ரணிலின் உத்தரவு என்பதை சொல்லித்தான் தெரிய வேண்டுமென்றில்லை.



ஆனால், தேர்தலுக்கு எதிரான எந்தக் கருத்தையும் பகிரங்கமாக வெளியிடாது பவ்வியமாக அடக்கி வாசிக்கிறார் அவர். இதுபற்றி சில ஊடக சந்திப்புகளில் கேள்விகள் கேட்கப்பட்டபோது, பட்டும் படாமலும் மழுப்பிப் பதிலளித்தார் அவர். இதுதான் ரணிலின் பாணி.

முக்கிய முடிவுகளை தாமே எடுப்பாராயினும், அதன் பொறுப்புகளை வேறு இடங்களுக்கு லாவகமாக ரணில் தள்ளி விடுவார். தேர்தலுக்குப் பொறுப்பான அமைச்சராக பிரதமர் தினேஸ் குணவர்த்தன இருப்பதால், அவரே இந்தப் பிச்சுப்பிடுங்கலுக்கு நடுவில் நிறுத்தப்பட்டுள்ளார்.

தேர்தல் வேண்டும், தேர்தல் இப்போதைக்கு வேண்டாம் என்ற இரு தரப்பும் நீதிமன்ற வாயிற்படி ஏறியுள்ளன. தேர்தல் ஆணையம் சுயாதீனமான ஒன்றாக இருப்பினும், அரசாங்கத்தின் கைகளுக்குட்பட்ட ஒன்றாகவுள்ளதால் இதற்காக ஆஜராக வேண்டிய சட்டமா அதிபர் திணைக்களம் அதனை புறக்கணிக்கிறது. இதனால் தனியார் சட்டவாளர்களை தேர்தல் ஆணையம் தமக்காக வாதிட நியமிக்கிறது. இவ்விடயத்தில் ஜனாதிபதியின் நிலைப்பாடு என்ன?

**சொல்வதைச் செய்யாது விடுவதும், சொல்லாதவைகளைச் செய்வதும், அதனூடாக இனவாதத்தையும் மதவாதத்தையும் தீமூட்டி அதில் குளிர் காய்வதும், சிங்கள பௌத்த அரசியல் தலைமைகளுக்கும் அதன் வால்பிடிகளுக்கும் கை வந்த கலை. 13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதிலும், உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதிலும் உள்ளிருந்து நடத்தும் முன்னுக்குப் பின்னாலான குளறுபடிகள் - கட்டாக்காலிகளின் அரசாட்சி என்பது இதுதான்!**

தேர்தல் தொடர்பாக கடந்த வாரம் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு சாதாரண மக்களைப் பொறுத்தளவில் குதர்க்கமானதாக அவதானிக்கப்படுகிறது. "தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் தயாராகியுள்ளன என்று தேர்தல் ஆணையம் நீதிமன்றத்துக்குத் தெரிவித்துள்ளதால் மார்ச் ஒன்பதாம் திகதி தேர்தலை நடத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட வேண்டியது அவசியமில்லை" என்ற நீதிமன்ற தீர்ப்பின் வாசகம் தேர்தல் நடத்தும் பொறுப்பை அதன் ஆணையத்திடம் தள்ளிவிட்டுள்ளது. இத்தகைய ஒரு தீர்ப்புக்காகவா தேர்தல் ஆணையம் உயர்நீதிமன்றத்திடம் சென்றது. தேர்தலை திட்டமிட்ட படி நடத்த அரச இயந்திரத்துக்கு நீதிமன்றம் உத்தரவிட வேண்டுமென்ற ஒரு தீர்ப்பை எதிர்பார்த்த வேளையில் இரண்டுக்குமிடையில், ஷ நடத்தலாம்; என்று ஒரு தீர்ப்பை உயர்நீதிமன்றம் வழங்கியது ஜனநாயக நாட்டில் நீதித்துறைக்கு ஏற்புடையதா என்ற கேள்வி எழுகிறது.

தேர்தலை இடைநிறுத்தக்கோரி தாக்கலான மற்றொரு மனுவின் விசாரணை இந்த வாரத்து வியாழக்கிழமை (23ம் திகதி) நீதிமன்றத்தில் விசாரணைக்கு வருகிறது. இந்தத் திகதிதான் தபால் மூல வாக்களிப்பின் ஒரு நாள்.

ஆனால், தபால் மூல வாக்களிப்பு சீட்டுகள் அச்சடிக்கும் பணி இதனை எழுதும்வரை நிறைவேறவில்லை. இதற்கான நிதியை முற்கூட்டியே வழங்க வேண்டுமென அரசாங்க அச்சகம் கேட்டுள்ளது. அது மட்டுமன்றி காவற்துறை பாதுகாப்பையும் அது கோரியுள்ளது. இவை இரண்டும் நிறைவேற்றப்படவில்லை என்று அரச அச்சக தலைமை அதிகாரி தெரிவித்துள்ளார். அரச அச்சகம் என்பது தனியார்துறை சார்ந்ததல்ல என்பதும் கவனிக்கப்பட வேண்டியது.

நடைபெறும் சமாசாரங்களைப் பார்க்கையில், இலை மறைவில் ஒரு நாடக அரங்கேற்றம் இடம்பெறுவது நன்கு தெரிகிறது. தேர்தலை நடத்துவதற்கு அனுசரணையாக இருக்க வேண்டிய ஒவ்வொரு அரசாங்க அலகும், இதனைத் தடுப்பதில் அதீத கவனம் எடுக்கின்றன. அரசியல் அமைப்பின்படி, சகல நிறைவேற்று அதிகாரங்களையும் தன்னகத்தே கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழனாக இயங்குவது வெள்ளித்திரையில் பளிச்செனத் தெரிகிறது.

இவரது ஐக்கிய தேசிய கட்சி தேர்தலுக்குத் தயாரில்லை. இவரைக் கதிரையில் அமர்த்திய கோதபாயவின் சகோதரர்களது பொதுஜன பெரமுனவின் ஒரு பகுதியினர் தேர்தல் இப்போது இடம்பெறுவதை விரும்பவில்லை.

தமிழர் தரப்பு இதற்கு விதிவிலக்கல்ல. இரண்டாகப் பிளவுபட்டு முன்னாள் இந்நாள் கூட்டமைப்பு என்று இருப்பவர்களும் தேர்தலை மனதார விரும்பவில்லை. முக்கியமாக தமிழரசின் ஷமறுதலை; என வர்ணிக்கப்படும் சுமந்திரன் தேர்தல் பரப்புரைகளை இன்னமும் தீவிரமாக ஆரம்பிக்காது நீதிமன்றங்களை நாடி ஓடித் திரிவதை பார்க்கையில் அவரும் தேர்தலை விரும்பவில்லையென தமிழரசின் முக்கியஸ்தர் ஒருவர் இப்பத்தி எழுத்தாளரிடம் கடந்த புதனன்று கூறியது உண்மையாக இருக்கலாம்.

தமிழரசு அணியின் நாடாளுமன்றத் தலைவர் சம்பந்தனைப் பொறுத்தளவில் எல்லாமே ஒன்றுதானாம். முதுமையும் இயலாமையும் முழுமையாக தேர்தல் வேலைகளில் அவரை நேரடியாக ஈடுபடுத்த அனுமதிக்கப்போவதில்லை. தேவைப்படின் அவ்வப்போது அறிக்கைகளை வெளியிடுவார். அதுவும்கூட ஆட்சித்தரப்பையும், புதிய கூட்டமைப்பை உருவாக்கியவர்களையும் எச்சரிக்கும் பாணியில் அமையலாம்.

13ம் திருத்தம் முழுமையான அமல், உள்ளூராட்சித் தேர்தல்கள் ஏற்பாடு, புதிய அரசியலமைப்பு உருவாக்கம் எனப்படுகின்ற ஒவ்வொரு அறிவிப்பும், அதன் பின்னணியும், மறைமுகமாக அவைகளை தட்டிக் கழிக்கும் வகையில் எடுக்கப்படும் நடவடிக்கைகளும்... ரணில் தமக்கான திட்டத்தை தாமே வகுத்து அதற்கான நெடுஞ்சாலையில் பயணிப்பது தெரிகிறது. இது மேற்கு நாடுகளின் ஷஓம்னி; சட்டவாக்கம் போன்றது.


நாடாளுமன்றத்தில் தமக்கான ஆதரவை பெறத் தவறினால், தேர்தலை முற்கூட்டிய காலம் நெருங்கும் போது நடத்தப்போவதாக நினைவூட்டலாம். நாடாளுமன்றத்தில் தமக்கான ஆதரவு குறையுமானால் அது ஜனாதிபதியின் பதவிக் காலத்தைப் பாதிக்காது, நாடாளுமன்ற உறுப்பினர்களைத்தான் வீட்டுக்கு அனுப்புமென அவர்களுக்கு அச்சமூட்டலாம்.

முக்கியமாக பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என்ற நம்ப முடியாத ஒரு தரப்பினரின் அறிவிப்பைக் கையிலெடுத்து தமிழ்த் தேசிய கட்சிகளை தட்டிப் பார்க்கவும் அவர் முனையலாம். கிழட்டு நரியின் வளர்ப்பிலான குள்ளநரிக்கு இதுவெல்லாம் சொல்லிக் கொடுக்க வேண்டியதில்லை.

அரசுக்கு எதிரான போராட்டம், சட்ட மறுப்பு, வீதி மறிப்பு, கறுப்பு கொடி ஆர்ப்பாட்டம் என்றால் அவை தமிழர்களால் மட்டுமே மேற்கொள்ளப்படுபவை என்ற காலம் போய், இன்று தங்களின் சிங்கள பௌத்த அரசியல் தலைமைக்கு எதிராக அவர்களை ஆட்சிக்குக் கொண்டு வந்தவர்களே நித்தம் நித்தம் போராடும் காலம் உருவாகியுள்ளது.

கட்டாக்காலிகளின் அரசாட்சி என்றால் இது இப்படித்தான் இருக்கும் என்பதற்கு நிகழ்காலம் வரலாற்றுக்கான பதிவு. இது அரச இயந்திரத்துக்குள் ராணுவ பலத்தைப் புகுத்த ரணிலுக்கு வாய்ப்பளிப்பதாகவும் மாறலாம்! யார் கண்டது?

# இலங்கையில் ஆட்சி மாறினால் பொருளாதாரக் காட்சிமாறுமா?



கந்தையா அருந்தவபாலன்

இலங்கையின் தற்போதைய அரசியற் பொருளாதாரக் களநிலைமைகளில் தேர்தலொன்று அவசியமானதா என்ற கேள்வி பரவலாக எழுந்துள்ள அதே வேளையில் மக்களும் அது தொடர்பாக அக்கறையற்றவர்களாகவே உள்ளனர். அதிகரித்துவரும் பொருளாதார நெருக்கடிகளினால் எல்லாத்தரப்பு மக்களும் ஏதோவொரு வகையில் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளதால் தேர்தலைப்பற்றிச் சிந்திக்கும் நிலையில் அவர்கள் இல்லை என்பதுடன் தேர்தலொன்றின் மூலம் அந்த நெருக்கடி களுக்கு விடிவு கிடைக்குமென்ற நம்பிக்கையும் அவர்களிடம் இல்லாதிருப்பதுவும் அதற்கான காரணங்களாகும். ஆனால் எதிர்க்கட்சி அரசியல்வாதி களுக்கு மட்டும் தேர்தல் ஒன்று தற்போது அவசியமாக உள்ளது. தற்போது தேர்தல் ஏன் அவசியமாகிறது என அவர்களின் வார்த்தைகளில்கூறுவதானால்,

"இன்றிருப்பது மக்களின் ஆணையற்ற அரசாங்கம். இவ்வரசாங்கமே இன்றைய பொருளாதார நெருக்கடி களுக்கெல்லாம் காரணம். இதற்கு சர்வதேச அங்கீகாரம் கிடையாது. இதனால் இந்நெருக்கடிகளுக்குத் தீர்வுகாணும் வல்லமை கிடையாது. எங்களிடம் மட்டுமே அதற்கான வல்லமை உள்ளது. அதனால் புதிய அரசாங்கம் ஒன்றைத் தெரிவு செய்வதற்கான ஜனநாயக உரிமை மக்களுக்கு வழங்கப்பட வேண்டும்." என்பதாகும். எதிர்க்கட்சித் தலைவர்களின் மேற்கூறிய கருத்துகளில் ஓரளவு உண்மையிருப்பினும் அவை மக்கள் நலன்சார்ந்த சிந்தனயா அல்லது குழம்பிய குட்டையில் விரைவாக அதிகார மீனைப்பிடிக்கும் ஆசையா என்பது நியாயமான கேள்வியாகும். ஏனெனில் இப்போதைய களநிலைமைகளில் தேர்தலொன்றின் மூலம் அமைக்கப்படும் புதிய அரசாங்கமொன்றினால் இன்றுள்ள நெருக்கடிகளுக்கு இலகுவாகத் தீர்வு காண்பதற்கான சாத்தியம் மிகக் குறைவாக இருப்பதலாகும்.

தூரநோக்கில்லாது தான் வாங்கிக் குவித்த வெளிநாட்டுக் கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாத கையறு நிலையை இலங்கை அடைந்திருப்பதுடன் வரண்டுபோன வெளிநாட்டுச் செலாவணிக்கையிருப்பு, மிக உயர்ந்த மட்டப் பணவீக்கம், இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் மத்தியிலும் பாரியளவிலான வர்த்தகப் பற்றாக்குறை, அரசின் நடைமுறைச் செலவுகளையே ஈடுசெய்ய முடியாதவகையிலான வருமானப் பற்றாக்குறை, மிக உயர்வான வட்டிவீதங்கள், பொருளாதார வீழ்ச்சியும் அதன் தொடரான பாதக விளைவுகளும் என முக்கியமான மூலப்பொருளாதாரக் காரணிகளின் எதிர்மறையான நிலைமைகளால் அரசயந்திரமே இன்று ஆட்டம் காணும் நிலையில் இருப்பதுடன் ஏலவே அதிகரித்த வாழ்க்கைச் செலவை சுமக்க முடியாமல் திணறும் மக்களிடம் வருமான வரி, மின்சாரக் கட்டண உயர்வு போன்ற சுமைகளும்மேலும் ஏற்றப்படுகின்றது.

இலங்கையின் உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 2022இல் மறைப்பெறுமானத்தில் பதினொரு சதவீதமாக(-11வீதம்) இருந்துள்ளதாகவும் அது 2023இல் மறைப்பெறுமானத்தில் மூன்று சதவீதமாக (-3வீதம்) முன்னேறும் என்றும் மதிப்பிடப்படுகிறது. அதாவது பொருளாதார வீழ்ச்சி குறைவடையும் வகையிலான ஒருவளர்ச்சியொன்று எதிர்வு கூறப்படுகிறது. பொருட்களின் சராசரி விலைகள் குறிகாட்டியான பணவீக்கம் சென்ற மாதம் 55 வீதம் ஆகும். உணவுப்பொருட்களின் பணவீக்கம் 60 வீதத்துக்கு மேலுள்ளது. அதிகரித்த மின்சாரக் கட்டணம் இதனை மேலும் உயரச்செய்யும் எனலாம். இவை வாழ்க்கைச் செலவினைக் கூட்டி வாழ்க்கைத் தரத்தை வீழச்செய்வதுடன் வறுமை மட்டத்தை மேலும் அதிகரிக்கச் செய்யும்.

வெளிநாட்டுப் பரிமாற்றத்தைப் பொறுத்தமட்டில் இறக்குமதி தொடர்பாக இறுக்கமான கட்டுப்பாடுகளின்மத்தியிலும் வர்த்தகப் பற்றாக்குறை சுமார் 400 மில்லியன் அமெரிக்க டொலர்களாக உள்ளது. வெளிநாட்டு நாணயக் கையிருப்பு முழுமையாகத் தீரந்து விட்ட நிலையில் அத்தியாவசிய மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கே நாடு அல்லாடுகிறது. சரக்குடன் வரும் கப்பல்கள் தமது தீர்ப்பனவுக்காக கடலில் பல நாட்கள் தவம் கிடக்கின்றன. அரச கஜானா காலியாகிவிட்ட நிலையில் அன்றாடம் காய்ச்சியாகஅரசாங்கம் மாறிவிட்டது. அன்றாடச் செலவுகளையே அரைகுறையாக நகர்த்துவதுடன் அரச ஊழியர்களுக்கான சம்பளத்தைக்கூட உரியநேரத்தில் வழங்குதிலும் இடர்ப்பாட்டை அதுஎ திர்கொள்கிறது.

இத்தகைய மோசமான பொருளாதாரக் காட்சிகள் எதிர்க்கட்சித் தலைவர்கள் கூறுவதுபோல தற்போதையஅரசாங்கத்தினால் மட்டும் ஏற்படுத்தப்பட்டவையா? அதாவது 2020 க்குப் பின் ராஜபக்ஷ சகோதரர்களின்ஆட்சியால் அல்லது அதன் தொடர்ச்சியான ரணில் தலைமை வகிக்கும் இக்காலத்தில் ஏற்பட்ட நிலைமைகளா? உண்மையில் நாட்டின் இன்றைய நிலைமைக்கு ராஜபக்ஷ சகோதரர்கள் மட்டுமல்ல சுதந்திரத்துக்குப் பின் இலங்கையை ஆட்சி செய்த அத்தனை தலைவர்களும் பொறுப்பாளிகள் ஆவர். குறுகிய அரசியல் நோக்கங்கள், தூரநோக்கற்ற பொருளாதாரத் திட்டங்கள், ஊழல்முறைகேடுகள், அதிகாரத் துஷ்பிரயோகங்கள், இனவாதப்போக்கு போன்ற இன்னோரன்ன காரணிகளின் வரலாற்று ரீதியான விளைவே இன்றைய நிலை. இதனை இன்று







> **புதிய தலைமை தோன்றும்வரை இப்போது நாம் காணும் காட்சிகள் எவையும் மாறப்போவதில்லை என்பதற்கப்பால் இன்னும் மோசமான நிலைமைக்குத் தள்ளப்படுவதையும் தடுக்க முடியாமல் போகும். இப்போதையநிலையில் தேர்தல்மூலம் ஏற்படும்ஆட்சிமாற்றம் என்பது தலையிடியைப் போக்கத் தலையணையை மாற்றுவதற்கு ஒப்பானதாகவே அமையும்.**

பல்வேறு வெளிநாட்டு நிறுவனங்களும்ஆய்வாளர்களும் எடுத்துக் கூறுகின்றனர். இதனை நிரூபிக்க சிங்கப்பூரின் தந்தை என வர்ணிக்கப்படும் லீகுவான் யூ 1960களில் கூறிய "நான் சிங்கப்பூரை இலங்கை போல மாற்றுவேன்" என்ற கூற்று ஒன்றேபோதும். லீ குவான் யூ போன்ற ஓர் தேசியத் தலைவர் இலங்கையில் உருவாகாமை இந்நாட்டின்துரதிஸ்டம். இங்கு ஆட்சி செய்தவர்கள் வெறும் அரசியல் தலைவர்களாக இருந்தார்களேயன்றி இலங்கை என்ற வளமிக்க பல்லின நாட்டின் எதிர்காலம் பற்றிச் சிந்திக்கும் தேசியத் தலைவராக இருக்கவில்லை. இன்று இருக்கும் அவர்களின் வாரிசுகளும் அதை உணரும் நிலையில் இல்லை.

இவ்வாறான ஒருநிலையில் வழமையான ஆட்சி மாற்றம் ஒன்றினூடாக இப்பிரச்சினைகளுக்கு இலகுவில் தீர்வு கண்டுவிட முடியுமா?ஆட்சிமாற்றம் ஒன்று ஏற்பட வேண்டுமானால் முதலில் பாராளுமன்றத் தேர்தலே இடம்பெறவேண்டும். அத்துடன் அத்தேர்தலின் மூலம் ஆட்சியமைக்கும் கட்சியின் உறுப்பினர் ஒருவர் ஜனாதிபதியாக இருந்தால் மட்டுமே இலங்கையின் அரசியலமைப்பின்படி அது உண்மையான ஆட்சிமாற்றமாக இருக்கும். இன்றைய நிலையில் பாராளுமன்றத் தேர்தலொன்று நடைபெறுவதாக இருந்தால் எத்தகைய ஆட்சிமாற்றம் நிகழ்வதற்கான வாய்ப்புகள் அதிகம் காணப்படுகின்றது? தென்னிலங்கையின் பாரம்பரியக் கட்சிகளாகக் கருதப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் சேடம் இழுக்கும் நிலையிலுள்ளன. சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து பிரிந்துசென்று உருவாகி குறுகியகாலத்தில் பெருவளர்ச்சி பெற்ற பொதுசன பெரமுனவும் இன்று பல துண்டுகளாகச் சிதறிவிட்டதுடன் அதன்மீதான நன்மதிப்பும் குறைந்துவிட்டது. இந்த நிலையில் இன்று அரசியல் களத்தில் எதிர்த்தரப்பில் முன்னிலையிலுள்ள கட்சிகளென்றால் அது சஜித் தலைமயிலான ஐக்கிய மக்கள் சக்தியும் அனு குமார தலைமையிலான ஜே.வி.யின் தேசிய மக்கள் சக்தியுமாகும்.தேர்தல் ஒன்று வரும்போது புதியகூட்டுகளுக்கான வாய்ப்பிருப்பினும் போட்டியில் முன்னணியில் ஓடுபவர்கள் சஜித்தும் அனுரகுமாரவுமே என்பதுதான் தற்போதைய களநிலவரம். அரசியல் நோக்கர்களின் கருத்துப்படி ஜே.வி.பிக்கானஆதரவுத்தளம் ஐக்கிய மக்கள் சக்தியைவிட வேகமாக வளர்ந்து வருகின்ற போதும் ஐக்கிய தேசியக்கட்சியின் பாரம்பரிய வாக்கு வங்கியின் பெரும்பகுதியைக் அது கொண்டிருப்பதுடன் ஏனையசிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவையும் அது கொண்டுள்ளதால் அதனை அண்மிய வருங்காலத்தில்மேவும் நிலையில் ஜே.வி.பி இல்லை என்பதுடன் கூட்டுக்களை ஏற்படுத்தும் வாய்ப்பும் ஜே.வி.பிக்குக் குறைவாகவே உள்ளது.

இவ்வாறான ஒரு களநிலமையில் தேர்தல் ஒன்று நடக்குமாக இருந்தால் சஜித் தலைமையிலான கூட்டணிக்கே அரசாங்கத்தை அமைப்பதற்கான வாய்ப்பு அதிகமிருக்கும். ஆனால் தனித்துப்பெரும்பான்மை பெறும் வாய்ப்பு மிகக் குறைவாகவே இருக்கும். ஜே.வி.பி, பொதுசன பெரமுன உள்ளிட்டஏனைய கட்சிகளும் தனித்தோ அன்றி கூட்டாகவோ கணிசமான ஆசனங்க ளைப் பெறக்கூடிய வாய்ப்பு இருப்பதால் உறுதியற்ற தொங்கு பாராளுமன்றம் ஒன்று அமைவதற்கான வாய்ப்புகளேஅதிகம். இந்தவகையில் உறுதியற்ற அரசாங்கம் ஒன்றுக்கு உறுதியற்ற, பலவீனமான தலைவரான சஜித் தலைமை தாங்கும் நிலைமையே ஏற்படும்.

இன்றுள்ள கட்சித் தலைவர்களுள் பலவீனமான ஒரு தலைவராகவே சஜித் பல தரப்பினராலும் நோக்கப் படுகிறார். அவரது கடந்தகாலத் தீர்மானங்களையும் செயற்பாடுகளையும் நோக்குமிடத்து அதில்பெருமளவு உண்மை இருப்பதை மறுக்க முடியாது. சரி பிழை களுக்கு அப்பால் மகிந்த ராஜபக்ஷபோலவோ ரணில் போலவோ அல்லது அவரது தந்தை பிரேமதாச போலவோ ஒரு உறுதியான தலைமையை இன்றைய சூழலில் சஜித்தால் வழங்க முடியாதிருக்கும். அவ்வாறா யின் மிகமோசமாக உருக்குலைந்துள்ள நாட்டின் நிலைமையை எவ்வாறு அவரால் சீர்செய்யமுடியும் என்பது பெறுமதியான ஒரு வினாவாகும். இதனை உறுதிப் படுத்துவது போலவே அண்மையில் கலதாரி ஹோட்ட லில் பல லட்சம்ரூபாக்கள் செலவுசெய்து அக்கட்சியி னால் வெளியிடப்பட்ட எதிர்காலத் திட்ட முன்மொழிவுகள் காணப்படுகின்றன. அவை நாட்டின் இன்றைய நிலைமைய வெற்றி கொள்வதற்கான அடிப்படை மாற்றங்கள் பற்றிக் கவனம் செலுத்தாது வழமையான மேலெழுந்தவாரியான சீர்ப்படுத்தல்கள் பற்றிய ஒருதேர்தல் விஞ்ஞாபனமாகவே காணப்படுகிறது.

உண்மையில் இன்றைய இலங்கை வேண்டி நிற்பது முற்றுமுழுதான அரசியல் பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றத்தையும் அதை முன்னெடுப்பதற்கான அரசியல் பண்பாட்டைக் கொண்ட தலமையையுமாகும்.

துருப்பிடித்துப்போன நாட்டின் அரசியல் கட்டமைப்பும் பொருளாதாரக் கட்டமைப்பும் மாற்றப்படுவதன் மூலமே எதிர்கால விருத்திக்கான உறுதியான தளத்தை ஏற்படுத்த முடியும். சிறியளவிலான தேசிய இனங்களின் உரிமைகளை அங்கீகரிக்காத எந்த நாடும் முன்னேறியதான வரலாறுஇல்லை. பெயரளவிலன்றி ஆத்மார்த்தரீதியாக எல்லாமக்களும் இலங்கையர்கள் என்ற உணர்வுஏற்படுத்தப்பட வேண்டும். ஆனால் இதை உணரும் நிலையில் இன்றுகூட தலைவர்கள் இல்லை என்பதுகவலைக்குரிய விடயம். அடுத்து அரச தலைவர் தொடக்கம் அடிமட்டம் வரையில் வேரோடிப் போயுள்ள ஊழல்முறைகேடுகள், அதிகாரத் துஷ்பிரயோகங்கள், சட்டமீறல்கள் அகற்றப்பட்டு நிலையான சட்ட ஆட்சி பேணப்படுவதற்கான ஏற்பாடுகளும் நடைமுறைகளும் உருவாக்கப்படவேண்டும். சட்டவாக்கம், நீதி, நிர்வாகம் எனபவற்றின் தனித்துவமும் சமநிலையும் பேணும்வகையில் இறுக்கமான அரசியலமைப்பும் செயற்பாட்டுப் பொறிமுறையும் ஏற்படுத்தப்படவேண்டும். இப்போது நிலவும் குறுகிய கட்சிசார் அரசியல்,குடும்ப அரசியல், இனவாத, வகுப்புவாத அரசியல் மனப்பாங்கற்ற இளைய தலைமுறை உருவாக்கப்படவேண்டும். இதற்கு முற்போக்கான உறுதியான தலைமையே இலங்கைக்குத் தேவைப்படுகிறது. இன்றுள்ள தலைமைகள்இதை உணர்ந்து தம்மை மாற்றும்வரை அல்லது புதிய தலைமை தோன்றும்வரை இப்போது நாம் காணும் காட்சிகள் எவையும் மாறப் போவதில்லை என்பதற்கப்பால் இன்னும் மோசமான நிலைமைக்குத் தள்ளப்படுவதையும் தடுக்க முடியாமல் போகும். இப்போதையநிலையில் தேர்தல்மூலம் ஏற்படும்ஆட்சிமாற்றம் என்பது தலையிடியைப் போக்கத் தலையணையை மாற்றுவதற்கு ஒப்பானதாகவே அமையும்.

●


# புத்தகமானது சிறீதேவி வாழ்க்கை

தமிழில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமாகி பொலிவூட் வரை பிரகாசித்தவர் மறைந்த நடிகை சிறீதேவி. அவரின் வாழ்க்கை வரலாறு ‘சிறீதேவி - தி லைவ் ஒவ் ஏ லெஜண்ட்’ என்ற பெயரில் புத்தகமாக வெளிவரவிருக்கிறது. புத்தகத்தில் போனி கபூர், “சிறீதேவியின் அசாதாரண வாழ்க்கையை எழுதியிருக்கிறார் தீரஜ்குமார். சிறீதேவி, தனது கலையை திரையில் ரசிகர்களுடன் பகிர்ந்து கொண்டபோது மகிழ்ச்சியாக இருந்தார். அதே சமயம், அவர் ஒரு தனிமை விரும்பி” எனச் சொல்லியிருக்கிறார்.






**திரைப்படம் - வாத்தி**
**இயக்கம் - வெங்கி அட்லூரி**
**இசை - ஜி. வி.பிரகாஷ்குமார்**
**நடிப்பு - தனுஷ், சம்யுக்தா, சமுத்திரக்கனி**




கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி வந்திருக்கும் படம். கல்வியை வியாபாரமாகப் பார்த்து கோடிகளில் சம்பாதிக்க நினைக்கும் கல்வி நிறுவன முதலாளிக்கும், பலருக்கு கல்வி கொடுத்த நல்ல பெயரை மட்டும் சம்பாதிக்க நினைக்கும் வாத்தியாருக்கும் இடையிலான போராட்டமே இந்த ‘வாத்தி’.

கல்வியின் முக்கியத்துவம் எவ்வளவு, கற்றால் வாழ்க்கையில் எந்த அளவிற்கு உயரலாம் என்ற உயரிய கருத்தை சொல்லியிருக்கும் படம். சாதி வித்தியாசம் இல்லாமல் ஒருவரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது கல்வி மட்டுமே என்பதை அழுத்தமாக சொல்லியிருக்கிறார் இயக்குநர் வெங்கி அட்லூரி.

இயக்குநர் தெலுங்கு என்பதாலோ என்னவோ சிறிய கதாபாத்திரங்களில்கூட தெலுங்கு நடிகர்களே ஆக்கிரமித்துள்ளனர். ஒரு தெலுங்கு படத்தைப் பார்த்த உணர்வு மட்டுமே வருகிறது. அவ்வளவு அற்புதமான கருத்தை, கதையை எடுத்துக் கொண்ட இயக்குநர் தமிழ் ரசிகர்களையும் படத்துடன் ஒன்றி ரசிக்கும் கலை எது என்பதை கற்க மறந்துவிட்டார்.

சமுத்திரக்கனி நடத்தும் பாடசாலை ஒன்றில் உதவி ஆசிரியராக வேலை பார்க்கிறார் தனுஷ். அரசாங்க பாடசாலைகளின் தரத்தை மேம்படுத்த தனியார் கல்வி நிறுவனங்களின் சங்கம் முடிவெடுக்கிறது. அதன்படி தங்களிடமிருந்து திறமையற்ற சில ஆசிரியர்களை தனியார் பாடசாலைகளுக்கு அனுப்புகிறது. அப்படி சென்னை, ஆந்திரா எல்லையில் உள்ள சோழவரம் கிராமத்துக்கு ஆசிரியராக வருகிறார் தனுஷ். அவருடைய தீவிர முயற்சியால் அங்குள்ள மேல்நிலைப் பள்ளியில் சிறந்த மாணவ, மாணவிகளை உருவாக்குகிறார். அவர்களை மருத்துவராக, பொறியியலாளராக ஆக்க முயற்சிக்கிறார். ஆனால், அப்படி நடந்து அரசு பாடசாலை களின் தரம் உயர்ந்தால் தங்கள் கல்வி வியாபாரத்துக்கு பாதிப்பு வரும் என நினைக்கும் சமுத்திரக்கனி, அதற்கு பெரும் தடையாக இருக்கிறார். அதையும் மீறி தனது இலட்சியத்தில் தனுஷ் வெற்றி பெற்றாரா, இல்லையா என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

தனுஷும் படத்தில் சீருடை அணிந்திருப்பதால் சில நேரங்களில் அவர் வாத்தியாரா அல்லது மாணவரா என்ற சந்தேகம் வருகிறது. அந்த அளவுக்கு இன்னமும் இளமையாகவே இருக்கிறார். சமுத்திரக்கனியின் சவாலை ஏற்றுக்கொண்டு எப்படியாவது சாதிக்க வேண்டும் என்று போராடுகிறார். அவருடைய போராட்டமும், முயற்சியும் எப்படியாவது வெற்றி பெறவேண்டும் என்ற உணர்வு நமக்கும் படம் முழுவதும் வரவேண்டும். ஆனால், அதை நமக்குள் பெரும் தாக்கமாக ஏற்படுத்தத் தவறிவிட்டார் இயக்குநர். எப்படியும் தனுஷ் வெற்றி பெறுவார் என்ற உச்சக்கட்டத்தை நாமே ஊகித்துவிடுவோம் என்பதே அதற்குக் காரணம்.

தனுஷின் நல்ல குணத்தைக் கண்டு அவரை காதலிக்கும் சக ஆசிரியையாக சம்யுக்தா. அந்த கதாபாத்திரத்துக்கு ஏற்ற தோற்றத்தையும், நடிப்பையும் வெளிப்படுத்தி இருக்கிறார்.

கல்வி தாளாளர், தந்தை என தற்காலத்தில் பெருமையாக அழைக்கப்படும் கல்வி வியாபாரியாக சமுத்திரக்கனி. தனியார் கல்வி நிறுவனங்கள், பயிற்சி நிறுவனங்களின் ‘இலக்கு’ நடுத்தர மக்கள்தான் என்று அவர் பேசும் வசனம் நூற்றுக்கு நூறு உண்மை. மற்ற கதாபாத்திரங்களில் ஊர் தலைவராக சாய்குமார், மாணவர் கென் கருணாஸ் ஆகியோர் மட்டுமே குறிப்பிடும்படி நடித்திருக்கிறார்கள்.

ஜி. வி. பிரகாஷ்குமார் இசையில் ‘வா வாத்தி’ பாடல் திரும்பத் திரும்பக் கேட்க வைக்கிறது. 1999, 2000 கால கட்டங்களில் நடக்கும் கதை. அந்த காலகட்டத்தைக் கண்முன் கொண்டு வந்திருந்தாலும் தமிழ் மண்ணுக்குரிய வாசம் எங்குமில்லை.

தெலுங்கு படங்களில் மட்டுமே பார்த்த பல காட்சிகள் ஆங்காங்கே வந்து போகின்றன. படிப்பு, படிப்பு என படம் முழுவதும் இருப்பதால் ‘போதனை’ மட்டுமே நிறைந்திருக்கிறது, ‘ரசனை’ காணாமல் போய்விட்டது.

# எனக்கு சிரிப்பு நோய்

தமிழ், தெலுங்கு சினிமாவில் முன்னணி நடிகையாக வலம் வந்தவர் நடிகை அனுஷ்கா ஷெட்டி. பாகுபலி படம் மூலமாக இந்திய அளவில் கவனம் ஈர்த்த நடிகையாக இருந்தார் பாஹுமதி படத்தின் பின்னர், அவர் எந்தப் படத்திலும் நடிக்கவில்லை.

நீண்ட இடைவெளிக்கு பிறகு பேட்டி ஒன்றை அளித்துள்ளார் அனுஷ்கா. அதில், ”எனக்கு சிரிப்பு நோய் உள்ளது. அதாவது எப்போதும் சிரித்துக்கொண்டே இருப்பது. சிரிப்பதெல்லாம் ஒரு நோயா என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால், உண்மையில் எனக்கு அந்த நோய் உள்ளது. ஒருமுறை நான் சிரிக்க ஆரம்பித்தால், குறைந்தது 20 நிமிடங்கள் வரை சிரித்துக் கொண்டே இருப்பேன்” என்று தெரிவித்துள்ளார்.



# அஜித்தை இயக்கும் மகிழ்திருமேனி



“துணிவு“ படத்துக்கு பிறகு அஜித்தின் 62ஆவது படத்தை விக்னேஷ் சிவன் இயக்குவார் என்று கூறப்பட்டது. ஆனால், பின்னர் இந்தப் படம் நிறுத்தப்பட்டது.

இந்த நிலையில், வெளிநாட்டு சுற்று பயணத்தை முடித்து திரும்பிய அஜித், மகிழ்திருமேனியை அழைத்து கதை கேட்டுள்ளார். அந்த கதைக்கு அவர் ஒப்புதல் அளித்துள்ளார்.

விரைவில் இதுபற்றிய முறையான அறிவிப்பை தயாரிப்பு நிறுவனமான லைகா வெளியிடவுள்ளது.

# உச்ச நட்சத்திரங்களுடன் தமன்னா

தற்போது இரண்டு சுப்பர் ஸ்ரார் நடிகர்களுடன் தான் நடித்து வருகிறார் என்று மகிழ்ச்சியுடன் கூறியுள்ளார் தமன்னா.

இது குறித்து அவர் அளித்த நேர்காணல் ஒன்றில்,

“தமிழில் சில ஆண்டுகளாக பட வாய்ப்புகள் இல்லாமல் இருந்த நான், இப்போது சுப்பர் ஸ்ரார் ரஜினி நடிக்கும் ஜெயிலர் படத்தில் நடித்து வருகிறேன். தமிழில் பட வாய்ப்புகளே இல்லாமல் இருக்கும்போது ரஜினியுடன் நடிக்கும் வாய்ப்பு கிடைக்கும் என்று நான் எதிர் பார்க்கவே இல்லை. இது ஒரு கனவு போல் உள்ளது.

இதேபோல் தெலுங்கில் சிரஞ்சீவியுடன் போலா சங்கர் என்ற படத்தில் நடித்து வருகிறேன். இதற்கு முன்பு சைராவில் அவருடன் நடித்திருந்தாலும் அது சிறிய வேடம். ஆனால் இந்த போலா சங்கர் படத்தில் கதாநாயகியாக நடித்து வருகிறேன். அவருடன் நடனமாட வேண்டும் என்பது எனது நீண்டநாள் ஆசை. இந்த படத்தில் அவருடன் நடிக்கும் பாடல் காட்சியை ஆவலுடன் எதிர்பார்த்துள்ளேன் - என்றார்.



# காந்தாரா நாயகனுக்கு ‘தாதா சாகேப் பால்கே’ விருது

கடந்த ஆண்டு செப்ரெம்பர் 30ஆம் திகதிவெளியான கன்னட திரைப்படம் “காந்தாரா“ 400 கோடி ரூபாய் வசூலை குவித்தது. கர்நாடகத்தில் வாழும் பழங்குடி மக்களின் சமய வழிபாட்டை மையமாக வைத்து உருவாகியிருந்த இந்த படத்தை ரிஷப் ஷெட்டி இயக்கி நடித்திருந்தார்.

இந்த படத்தின் 2ஆம் பாகம் அடுத்த ஆண்டு வெளியாகவுள்ளதாக படக்குழு தெரிவித்துள்ளது. இந்நிலையில், “சிறந்த நம்பிக்கைக்குரிய நடிகர்“ என்ற பிரிவில் நடிகர் ரிஷப் ஷெட்டிக்கு 2022ஆம் ஆண்டிற்கான “தாதா சாகேப் பால்கே“ விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விழா நாளை மறுதினம் மும்பையில் நடைபெறவுள்ளது.



# தொடங்குகிறது ஐ. பி. எல். வெளியானது அட்டவணை



ஐ. பி. எல். இருபது - 20 கிரிக்கெட் தொடரின் 16ஆவது தொடருக்கான போட்டி அட் டவணை வெளியிடப்பட்டுள்ளது.

0 அணிகள் பங்கேற்கும் இந்த இருபது -20 கிரிக்கெட் திருவிழா வரும் மார்ச் 31ஆம் திகதி தொடங்குகிறது. லீக் போட்டிக்கான அட்டவணை மட்டும் தற்போது வெளியிடப்பட்டுள்ளது. 52 நாட்களில் மொத்தம் 70 போட்டிகள் நடைபெறவுள்ளன. லீக் ஆட்டம் மே 21ஆம் திகதி முடி வடைகிறது.

இறுதிப் போட்டிக்கான தகுதி போட்டிகள், இறுதிப் போட்டிநடைபெறும் இடங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இறுதிப் போட்டி மே 28ஆம் திகதி நடைபெறுகிறது. இம்முறை பழைய பாணியில் ஒவ்வோர் அணியும் தனது சொந்த மைதானத்தில் 7 போட்டிகளிலும், வெளி மைதானங்களில் 7 போட்டிகளிலும் விளையாட உள்ளன. மொத்தம் 12 நகரங்களில் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இருபது- 20 கிரிக்கெட் திருவிழாவின் தொடக்க ஆட்டத்தில் மார்ச் 31ஆம் திகதி நடப்பு சம்பியனான குஜராத் ரைட்டன்ஸ், 4 முறை சம்பியனான சென்னை சுப்பர் கிங்ஸ் (சிஎஸ்கே) அணியுடன் மோதுகிறது.

இந்தப் போட்டி அஹமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி மைதானத்தில் இரவு 7.30 மணிக்கு நடைபெறுகிறது. சென்னை தனது சொந்த மைதானமான சேப்பாக்கத்தில் முதல் ஆட்டத்தை ஏப்ரல் 3ஆம் திகதி லக்னோவுக்கு எதிராக விளையாடுகிறது. இம்முறை 18 ஒரே நாளில் இரு போட்டிகள் நடைபெறவுள்ளன.

ராஜஸ்தான் றோயல்ஸ் தனது முதல் இரு சொந்த மைதான போட்டிகளை குவாஹாட்டியிலும், எஞ்சியுள்ள 5 ஆட்டங்களை ஜெய்ப்பூரிலும் விளையாடுகிறது.

பஞ்சாப் 5 போட்டிகளை மொஹாலியி லும் இரு ஆட்டங்களை தரம் சாலாவிலும் விளையாட உள்ளது.

INDIAN PREMIER LEAGUE

## போட்டி விவரம்

| அணிகள் | திகதி | நேரம் |
|---|---|---|
| குஜராத் - சென்னை | மார்ச் 31 | இரவு 7.30 |
| பஞ்சாப் - கொல்கத்தா | ஏப்ரல் 01 | பி. ப. 3.30 |
| லக்னோ - டில்லி | ஏப்ரல் 01 | இரவு 7.30 |
| ஹைதராபாத் - ராஜஸ்தான் | ஏப்ரல் 02 | பி. ப. 3.30 |
| பெங்களூர் - மும்பை | ஏப்ரல் 02 | இரவு 7.30 |
| சென்னை - லக்னோ | ஏப்ரல் 03 | இரவு 7.30 |
| டில்லி - குஜராத் | ஏப்ரல் 04 | இரவு 7.30 |
| ராஜஸ்தான் - பஞ்சாப் | ஏப்ரல் 05 | இரவு 7.30 |
| கொல்கத்தா - பெங்களூர் | ஏப்ரல் 06 | இரவு 7.30 |
| லக்னோ - ஹைதராபாத் | ஏப்ரல் 07 | இரவு 7.30 |
| ராஜஸ்தான் - டில்லி | ஏப்ரல் 08 | பி. ப. 3.30 |
| மும்பை - சென்னை | ஏப்ரல் 08 | இரவு 7.30 |
| குஜராத் - கொல்கத்தா | ஏப்ரல் 09 | பி. ப. 3.30 |
| ஹைதராபாத் - பஞ்சாப் | ஏப்ரல் 09 | இரவு 7.30 |
| பெங்களூர் - லக்னோ | ஏப்ரல் 10 | இரவு 7.30 |
| டில்லி - மும்பை | ஏப்ரல் 11 | இரவு 7.30 |
| சென்னை - ராஜஸ்தான் | ஏப்ரல் 12 | இரவு 7.30 |
| பஞ்சாப் - குஜராத் | ஏப்ரல் 13 | இரவு 7.30 |
| கொல்கத்தா - ஹைதராபாத் | ஏப்ரல் 14 | இரவு 7.30 |
| பெங்களூர் - டில்லி | ஏப்ரல் 15 | பி. ப. 3.30 |
| லக்னோ - பஞ்சாப் | ஏப்ரல் 15 | இரவு 7.30 |
| மும்பை - கொல்கத்தா | ஏப்ரல் 16 | பி.ப 3.30 |
| குஜராத் - ராஜஸ்தான் | ஏப்ரல் 16 | இரவு 7.30 |
| பெங்களூர் - சென்னை | ஏப்ரல் 17 | இரவு 7.30 |
| ஹைதராபாத் - மும்பை | ஏப்ரல் 18 | இரவு 7.30 |
| ராஜஸ்தான் - லக்னோ | ஏப்ரல் 19 | இரவு 7.30 |
| பஞ்சாப் - பெங்களூர் | ஏப்ரல் 20 | பி. ப. 3.30 |
| டில்லி - கொல்கத்தா | ஏப்ரல் 20 | இரவு 7.30 |
| சென்னை - ஹைதராபாத் | ஏப்ரல் 21 | இரவு 7.30 |
| லக்னோ - குஜராத் | ஏப்ரல் 22 | பி. ப. 3.30 |
| மும்பை - பஞ்சாப் | ஏப்ரல் 22 | இரவு 7.30 |
| பெங்களூர் - ராஜஸ்தான் | ஏப்ரல் 23 | பி. ப. 3.30 |
| கொல்கத்தா - சென்னை | ஏப்ரல் 23 | இரவு 7.30 |
| ஹைதராபாத் - டில்லி | ஏப்ரல் 24 | இரவு 7.30 |
| குஜராத் - மும்பை | ஏப்ரல் 25 | இரவு 7.30 |
| பெங்களூர் - கொல்கத்தா | ஏப்ரல் 26 | இரவு 7.30 |
| ராஜஸ்தான் - சென்னை | ஏப்ரல் 27 | இரவு 7.30 |
| பஞ்சாப் - லக்னோ | ஏப்ரல் 28 | இரவு 7.30 |
| கொல்கத்தா - குஜராத் | ஏப்ரல் 29 | பி. ப. 3.30 |
| டில்லி - ஹைதராபாத் | ஏப்ரல் 29 | இரவு 7.30 |
| சென்னை - பஞ்சாப் | ஏப்ரல் 30 | பி. ப. 7.30 |
| மும்பை - ராஜஸ்தான் | ஏப்ரல் 30 | இரவு 7.30 |
| லக்னோ - பெங்களூர் | மே 01 | இரவு 7.30 |
| குஜராத் - டில்லி | மே 02 | இரவு 7.30 |
| பஞ்சாப் - மும்பை | மே 03 | இரவு 7.30 |
| லக்னோ - சென்னை | மே 04 | பி. ப. 3.30 |
| ஹதராபாத் - கொல்கத்தா | மே 04 | இரவு 7.30 |
| ராஜஸ்தான் - குஜராத் | மே 05 | இரவு 7.30 |
| சென்னை - மும்பை | மே 06 | பி. ப. 3.30 |
| டில்லி - பெங்களூர் | மே 06 | இரவு 7.30 |
| ராஜஸ்தான் - ஹைதராபாத் | மே 07 | இரவு 3.30 |
| குஜராத் - லக்னோ | மே 07 | இரவு 7.30 |
| கொல்கத்தா - பஞ்சாப் | மே 08 | இரவு 7.30 |
| மும்பை - பெங்களூர் | மே 09 | இரவு 7.30 |
| சென்னை - டில்லி | மே 10 | இரவு 7.30 |
| கொல்கத்தா - ராஜஸ்தான் | மே 11 | இரவு 7.30 |
| மும்பை - குஜராத் | மே 12 | இரவு 7.30 |
| ஹைதராபாத் - லக்னோ | மே 13 | பி. ப. 3.30 |
| டில்லி - பஞ்சாப் | மே 13 | இரவு 7.30 |
| ராஜஸ்தான் - பெங்களூர் | மே 14 | பி. ப. 3.30 |
| சென்னை - கொல்கத்தா | மே 15 | இரவு 7.30 |
| லக்னோ - மும்பை | மே 16 | இரவு 7.30 |
| பஞ்சாப் - டில்லி | மே 17 | இரவு 7.30 |
| ஹைதராபாத் - பெங்களூர் | மே 18 | இரவு 7.30 |
| பஞ்சாப் - ராஜஸ்தான் | மே 19 | இரவு 7.30 |
| டில்லி - சென்னை | மே 20 | பி. ப. 3.30 |
| கொல்கத்தா - லக்னோ | மே 20 | இரவு 7.30 |
| மும்பை - ஹைதராபாத் | மே 21 | பி. ப. 3.30 |
| பெங்களூர் - குஜராத் | மே 21 | இரவு 7.30 |

# பங்களாதேஷ் பிறீமியர் லீக் விக்டோரியன்ஸ் சம்பியன்




7 அணிகள் பங்கேற்றிருந்த பங்களாதேஷ் பிறீமியர் லீக் இருபதுக்கு 20 கிண்ணத்தை நான்காவது தடவையாகவும் இம்றுல் கைய் தலைமையி லான கொமிலா விக்டோரியன்ஸ் அணி கைப்பற்றிக் கொண்டது.

மிர்பூரில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் திசர பெரேரரா அங்கம் வகிக்கும், மஷ்ரபீ மொர்த்தஸா தலைமையிலான சில்ஹெட் ஸ்ட்ரைக்கர்ஸ் அணியும், இம்றுல் கைஸ் தலைமையிலான கொமிலா விக்டோரியன்ஸ் அணியும் மோதிக்கொண்டன.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய சில்ஹெட் ஸ்ட்ரைக்கர்ஸ் அணி 20 ஒவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 175 ஓட்டங்களை குவித்தது. துடுப்பாட்டத்தில் அணி சார்பில் முஷ்பிகர் ரஹீம், ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான நஜூமுல் ஹொாசைன் ஷென்ட்டோ ஆகியோர் முறையே 74 ஓட்டங்களையும், 64 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக் கொடுத்தனர். திசர பெரேரா ஓட்டமெதுவும் அடிக்கால் முதற்பந்திலயே ஆட்டமிழந்து அரங்கு திரும்பினார்.

பந்துவீச்சில் முஸ்தபிஹூர் ரஹ்மான் அதிக பட்சமாக 2 விக்கெட்களை சாய்த்தார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொமிலா விக்டோரியன்ஸ் அணி 24 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களை இழந்து தடுமாறியது. இதன் பின்னர் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான லிட்டன் தாஸ் 55 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழக்க, போட்டியில் மீண்டும் சூடு பற்றிக்கொண்டது. இந்நிலையில் 4 ஆவது விக்கெட்டுக்காக மொயீன் அலியுடன் ஜோடி ஜொன்ஸ்ட்டன் சார்ள்ஸ் அரைச்சதம் அடித்து அணியின் வெற்றியை உறுதி செய்தார். இந்த ஜோடி 4 ஆவது விக்கெட்டுக்காக பிரிக்கப்படாத 74 ஓட்டங்களை பகிர்ந்தது. இறுதியில் 19.2 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 7 விக்கெட்களால் வெற்றியீட்டி சம்பியன் கிண்ணத்தை வென்று அசத்தியது.

கடைசி வரை ஆட்டமிழக்காமல் களத்திலிருந்து ஜொன்ஸ்ட்டன் சார்ள்ஸ் 52 பந்துகளில் 7 பௌண்ட்ரிகள், 5 சிக்ஸர்கள் அடங்லாக 79 ஓட்டங்களை விளாசினார். மொயீன் அலி 25 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில் ருபேல் ஹொசேன் 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

போட்டியின் நாயகனாக ஜொன்ஸ்ட்டன் சார்ள்ஸூம் தொடரின் நாயகனாக நஜ்முல் ஹொசேன் ஷண்டோ தெரிவு செய்யப்பட்டனர்.

# பிரபாகரன் விவகாரம்: பின்னால் பாஜக அரசா? திருமா குற்றச்சாட்டும், பின்னணியும்!

அன்னம் அரசு

பிரபாகரன் கொல்லப்பட்டதாக இலங்கை அரசு அறிவித்ததிலிருந்தே, அதை மறுத்துவருகிறார் பழ.நெடுமாறன். இதுவரை நான்குக்கும் மேற்பட்ட முறை "பிரபாகரன் திரும்ப வருவார்" என்ற கருத்தை அவர் தெரிவித்திருக்கிறார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் உயிரோடு இருப்பதாக பழ.நெடுமாறன் அறிவித்த நிலையில், இலங்கை ராணுவம் அந்தக் கூற்றை முற்றிலுமாக மறுத்துவிட்டது. தமிழ்நாட்டிலுள்ள அரசியல் தலைவர்களில் சீமான், வைகோ ஆகியோர் பிரபாகரன் உயிருடன் இருக்க வாய்ப்பில்லை என்ற கருத்தை தெரிவித்து விட்டனர். நெடுமாறனைப் பொறுத்தவரை இலங்கை உள்நாட்டுப் போரின் இறுதிக்கட்டம் முடிவடைந்து பிரபாகரன் கொல்லப் பட்டதாக அந்த நாட்டு அரசு அறிவித்ததிலிருந்தே, அதை மறுத்து வருகிறார். இதுவரை நான்குக்கும் மேற்பட்ட முறை "பிரபாகரன் திரும்ப வருவார்" என்ற கருத்தை தெரிவித்திருக்கிறார் நெடுமாறன்.

இந்த அறிக்கைக்கு ஆதரவும், விமர்சனங்களும் எழுந்துவரும் நிலையில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன், "பிரபாகரன் உயிரோடு இருக்கிறார் என்ற அறிவிப்பில் கால பொருத்தமும் இல்லை, அரசியல் பொருத்தமும் இல்லை. பிரபாகரன் உயிரோடு இருக்கிறார் என்பதைத் தற்போது அறிவிப்பதற்கு என்ன காரணம்... அதை அறிவிப்பதற்கான தற்போதைய தேவை என்ன... பா.ஜ.க அரசு ஈழத் தமிழர் பிரச்னையில் இலங்கையிலுள்ள சிங்கள அரசை அச்சுறுத்தும் நோக்கோடு தலையீடுவதாகத் தெரிகிறது. அதே வேளையில், பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என்ற அறிவிப்பின் பின்னணியில் இந்திய உளவுத்துறை இருப்பதாக எண்ணத் தோன்றுகிறது" என்று ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல் பிரசாரத்தில் கலந்துகொண்ட பிறகு செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்திருக்கிறார்.

இது தொடர்பாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் துணைப் பொதுச்செயலாளர் வன்னி அரசிடம் பேசினோம். "இப்போது இருக்கும் தெற்காசிய அரசியல் சூழலில் இந்தியா ராணுவ ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் மிகப்பெரும் பின்னடைவைச் சந்தித்து வருகிறது. இந்தியாவைச் சுற்றியிருக்கும் நாடுகள் எல்லாமே பகை நாடுகளாக மாறியிருக்கின்றன. நிலைமை இவ்வாறு இருக்க இந்தியாவை ஒட்டியிருக்கும் இலங்கையைத் தன் கட்டுக்குள் கொண்டு வருவதற்கு ரொம்ப நாள்களாக இந்தியா ஆசைப்படுகிறது. அதவாது காங்கிரஸ், பா.ஜ.க இரண்டுமே. இதற்காக இந்தியா பல கோடி ரூபாய் இலங்கைக்கு நிதி உதவி செய்தாலும், இலங்கை சீன சார்பு நாடாகவே இருக்கிறது. ரணில் விக்ரமசிங்க அமெரிக்க சார்புடையவராக இருந்தாலும், ராஜபக்சே ஏற்கெனவே சீன சார்பு நிலையை எடுத்ததினால், அந்த நிலைப்பாட்டிலிருந்து விலக முடியவில்லை.

இப்படிப்பட்ட ஒரு சூழலில் இலங்கையைத் தன் கட்டுப்பாட்டில் கொண்டுவர வேண்டும் என்று இந்தியா நீண்டகாலமாக முயல்கிறது. ஏற்கெனவே இந்த ஸ்டேட்டர்ஜியை வைத்துத்தான் ஜெயவர்த்தனேவை இந்திரா காந்தி அச்சுறுத்தி வைத்திருந்தார். அதே நிலைப்பாட்டை இவர்கள் மீண்டும் பிரபாகரன் வருகிறார் என்று சொல்லவைத்து இலங்கையை அச்சுறுத்துவதற்கான ஒரு யுத்தியை உளவுத்துறையும், உளவுத்துறை இயக்குகிற பா.ஜ.க-வும் கையாள்வது தெரிகிறது. இந்தப் பின்னணியில் நெடுமாறன் ஐயாவிடம் இந்தச் சதியைச் சொல்லி, சொல்ல வைத்திருப்பார்கள் என்று நான் நம்பவில்லை. பிரபாகரன் உயிரோடு இருப்பார் என்றால், புலிகளைக் கட்டுப்படுத்துவதற்கு இந்தியாவின் உதவி தேவைப்படும். அப்போது நாம் கட்டுப்படுத்தலாம் என இவர்கள் கணக்கு போடுகிறார்கள்.

அதே வேளையில் ராஜபக்சேவுக்கு எதிராக சிங்கள மக்களே போராட்டம் நடத்துகிறார்கள். அந்த சிங்கள மக்களை திசை திருப்புவதற்கு, 'எதிரி பிரபாகரன் வந்துவிட்டார். அமைதியாக வந்திருங்கள். புலிகளை அடக்க ராஜபக்சேதான் சரியாக இருப்பார்' என்கிற ஒரு யுத்தியையும் கையில் எடுக்கிறார்கள். இலங்கை ராணுவம் பிரபாகரன் இறந்துவிட்டார் என்று அறிவித்த போது, இந்தியாவும் ஒப்புக்கொண்டது. அதைத் தொடர்ந்து இந்தியா அங்கிருக்கும் மக்களுக்கு உதவி செய்கிறது. இந்த நிலையில், இப்போது இதைச் செய்வதற்கான காரணம் தெற்காசியாவில் இந்தியா, இலங்கையைக் கட்டுப்படுத்தும் என்பதே.

நெடுமாறன் ஐயா அறிவிப்புக்குப் பிறகு, இந்நேரம் உளவுத்துறை விசாரித்திருக்க வேண்டாமா... ஏனென்றால் விடுதலைப் புலிகள் இயக்கம் தடை செய்யப் பட்ட இயக்கம். ஒவ்வொரு மூன்றாண்டும் பா.ஜ.க தடையை நீட்டிக்கிறது. அப்படி நீட்டிக்கப்படும் இயக்கத்தின் தலைவர் உயிரோடு இருக்கிறார் என்று சொல்லும்போது, நெடுமாறன் ஐயாவை விசாரணை செய்திருக்க வேண்டும். இதுவரை அவரை விசாரணை செய்யாததினால் முழுக்க முழுக்க அவரை இயக்கியதன் பின்னணியில் இந்தியாவின் உளவுத்துறையும், பா.ஜ.க அரசும் சேர்ந்து செய்த நாடகம் என்பது தெளிவாகிறது. இதனால் ஈழத்தமிழர்களுக்கு எந்தவித பயனும் கிடைக்காது. இது முழுக்க முழுக்க பா.ஜ.க அரசின் செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்தக்கூடிய ஒரு யுக்தி. அந்த யுக்திக்கு நெடுமாறன் ஐயா பயன்பட்டிருக்கிறார்" என்றார்.

இந்த விவகாரம் தொடர்பாக பா.ஜ.க மாநில துணைத் தலைவர் நாராயணன் திருப்பதி பேசுகையில், "கடந்த இருபது, இருபத்தைந்து ஆண்டுகளாக ஈழ நாடகத்தை வைத்து பிழைப்பு நடத்திக்கொண்டிருப்பவர்கள், அங்கிருக்கக்கூடிய மக்களைக் காப்பாற்றுவதற்கு, நல்வாழ்வுக்கு, பொருளாதார சீர்திருத்தத்துக்குப் பாடுபட்டு உழைத்துக்கொண்டிருக்கும் பா.ஜ.க-வைக் குறித்துப் பேசுவதற்கு எந்த அருகதையும் இல்லை. இதுவரையிலும் ஈழ மக்கள் குறித்து, திருமாவளவன் உட்பட யாரேனும் யாழ்ப்பாணம் சென்று யாரை யாவது சந்தித்தது உண்டா... இவர்கள் பா.ஜ.க நாடகமாடுகிறது என்று சொல்வதற்கு எந்தவிதமான முகாந்திரமும், உரிமையும் இல்லை.

அந்த மக்கள் குறித்து கவலைப்படுவதற்கு இவர்களுக்குத் தகுதியும் கிடையாது. பா.ஜ.க தொடர்ந்து இத்தனை வருடங்களாக, அங்கிருக்கும் மக்கள் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு அந்த நாட்டில், அந்த மக்கள் சிறப்பாக வாழ வேண்டும் என்று உறுதியோடு பணியாற்றிக்கொண்டிருக்கிறது. ஆனால், ஒன்றரை லட்சம் தமிழர்களைப் படுகொலை செய்யக் காரணமாக இருந்த காங்கிரஸுடன் வெட்கமே இல்லாமல் கூட்டணி வைத்துக்கொண்டு பதவி சுகத்தை அனுபவித்துக்கொண்டிருக்கும் திருமாவளவன், பா.ஜ.க குறித்துப் பேசுவதை வன்மையாகக் கண்டிக்கிறோம்" என்றார்.

(ஜூனியர் விகடன்)

---



உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி

வியுக்தியார் பதில்கள்
ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
viyukthiyar@gmail.com

# வியுக்தியார் பதில்கள்

எஸ் பீற்றர்போல்,
இரண்டாம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.

**கேள்வி:** விக்னேஸ்வரனுடன் சென்றால் பெரிதாக சாதிக்கலாம் என்ற எண்ணத்துடனே தமிழ் தேசிய கூட்டமைப்பு பிரிந்து சென்றது. ஆனால், விக்கினேஸ்வரன் சமர்த்தியமாக பிரித்து விட்டு ஒதுங்கிக் கொண்டுள்ளார் என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ஈ. சரவணபவன் குறிப்பிட்டுள்ளாரே கவனித்தீர்களா?.

**வியுக்தியார்:** தமிழ் அரசுக்கட்சிக்குள் அவர் இப்போதும் இருக்கிறாரா என்றே கேட்கவேண்டும் போல இருக்கின்றது. தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து தமிழ் அரசு தனியாக பிரிந்துசென்று உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடுவது என்று மட்டக்களப்பில் முடிவெடுத்த மத்திய குழுக்கூட்டத்தில் அவர் கலந்து கொண்டாரோ தெரியவில்லை. கலந்துகொள்ளவில்லை என்றால், அவரது சட்டத்தரணியிடம் கேட்டு விட்டு கதைக்க சொல்லவேண்டும். ஆனாலும் மனுசன் ஒரு உண்மையை சொல்லியிருக்கின்றது. தமிழ் அரசிலிருந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு பிரிந்து சென்றிருக்கின்றது என்ற உண்மையையாவது ஒப்புக்கொண்டிருக்கின்றார். ஆனால் அவரது கட்சிக்காரர்கள் இப்போதும் தமது தேர்தல் பிரசுரங்களில் ஆங்காங்கே கூட்டமைப்பின் பெயரையும் தவிர்க்கமுடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கின்றார்கள்.

சபா. கதிர், குருமண்காடு, வவுனியா.

**கேள்வி:** இலங்கையின் நெருங்கிய நண்பனான சீனாவுடன் எப்போதும் கைகோர்த்து செயற்படுவோம் என்று இந்தியாவின் கேரள மாநிலத்தில் வைத்து தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, எவ்வாறாயினும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்தியாவுடன் தற்போதுள்ள உறவுகளைச் சீர்குலைக்கப் போவதில்லை என்றும் கூறியுள்ளாரே. இதன் அர்த்தம் உங்களுக்காவது புரிந்ததா?.

**வியுக்தியார்:** தமிழகத்தின் முன்னாள் முதல்வர் கருணாநிதி க்கு இரண்டு மனைவியர். தாயாளு அம்மையார் அவர் மனைவி என்பார்கள். கனிமொழியின் தாயாரை கருணாநிதியின் துணைவியார் என்பார்கள். அதாவது தாயாளு அம்மையார் சட்டபூர்வமான மனைவி. மற்றவர் அப்படியல்ல. அதேபோலத்தான், சீனா தங்களுக்கு துணைவியார் போல என்று சிறிலங்கா சொல்லியிருக்கின்றது. ஆனாலும் இந்தியா தங்களது மனைவி என்றிருக்கிறார்கள். துணைவியாரோடு வாழ்ந்தாலும் மனைவியையும் விவாகரத்து செய்யப் போவதில்லை என்கிறார்கள் என்று நினைக்கின்றேன். அதற்கும் அவர்களுக்கு துணிவு இருக்கின்றது என்பதைத்தான் மனைவியின் வீட்டிலேயே நின்றுகொண்டு சொல்லியிருக்கின்றது சிறிலங்கா.

சி. ராஜேஸ்வரன், கோயில் வீதி, நல்லூர்.

**கேள்வி:** இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் மீன்பிடிப்பதற்கு அனுமதிப்பது தொடர்பாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இலங்கை வந்த இந்தியாவின் மீன் வளங்கள் இணை அமைச்சர் எல். முருகனுடன் யாழ்ப்பாணத்தில் வைத்துக் கலந்துரையாடியுள்ளதாக செய்திகள் வெளிவந்திருந்தன. அது நமது மீனவர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாதா?

**வியுக்தியார்:** இப்போது அனுமதி மறுக்கப்பட்டுள்ள போதிலும், அவர்கள் வல்வெட்டித்துறை கடற்கரை வந்து மீன்பிடிக்கவே செய்கிறார்கள். இந்தநிலையில் அவர்களை அனுமதித்துவிட்டால் பிரச்சினை இல்லை என்று நினைக்கின்றார்களோ தெரியவில்லை. ஏற்கனவே தடைசெய்யப்பட்ட நிலையிலும் கேரள கஞ்சா நூற்றுக்கணக்கான கிலோ கணக்கில் தினமும் வந்துகொண்டிருக்கின்றது என்றால், மீன்பிடிக்கும் அனுமதியை கொடுத்துவிட்டால், தமிழக படகுகள் நமது மீன்பிடிதுறைமுகத்திலேயே கொண்டுவந்து இறக்கிவிட்டுப்போவார்களோ தெரியவில்லை. அனுமதி கொடுப்பதுதான் கொடுக்கிறார்கள் அதற்காக இந்தியாவை ஆக்குறைந்தது இந்த பாழாய்ப்போன பதின்மூன்றை முழுமையாக நடைமுறைப்படுத்த இலங்கைக்கு அழுத்தம்கொடுங்கள், நாங்கள் அனுமதி தருகின்றோம் என்றாவது நிபந்தனை விதித்தால் நல்லது.


கே. கணேஷ், பிரதான வீதி, ஹட்டன்

**கேள்வி:** உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசு பணம் வழங்காவிட்டால் மக்களைத் திரட்டி வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்தப் போவதாக ஐக்கிய மக்கள் சக்தியும் தேசிய மக்கள் சக்தியும் கூறிக் கொண்டிருக்கின்றன. அப்படி தேர்தல் நடாத்தக்கோரி மக்கள் வீதிக்கு வருவார்கள் என்று நம்புகின்றீர்களா?

**வியுக்தியார்:** அறகலய போல மக்கள் தன்னெழுச்சியாக வீதிக்கு வரப்போவதில்லை. ஆனால் இந்த இரண்டு கட்சிகளினதும் ஆதரவாளர்கள் நிச்சயம் வருவார்கள்தானே. அதைவிட அடுத்த தேர்தலில் ஆட்சியைப்பிடிக்கலாம் என்று இந்த இருவருமே சொல்லிக்கொண்டிருப்பதால், அந்த கட்சிகளின் உள்ளூர் தலைவர்களும் தத்தம் செல்வாக்கை காட்டுவதற்காக தமது இடங்களிலிருந்து மக்களை தமது செலவில் அழைத்து வந்து தமது செல்வாக்கை காட்ட முயற்சி செய்வார்கள். அப்படியெனில்தானே அந்த கட்சிகள் ஆட்சிக்கு வந்தால் அவர்கள் பிளைப்பு நடாத்தலாம். உள்ளூராட்சி தேர்தல் நடந்தாலும் இப்போது ஆட்சிமாற்றம் நடக்கப்போவதில்லையே. இதனால் சாதாரண மக்களுக்கு என்னதான் கிடைக்கப் போகின்றது. அவர்கள் ஏன் வீதிக்கு வரப்போகின்றார்கள்?.

# காலமும் கனியும்

விமல் பரம்



(கடந்த வாரத் தொடர்ச்சி)

இருக்கிற வீட்டையும் ஆக்களில்லா மல் நெடுக வும் பூட்டி வைச்சிருக்கே கலாது. மனிசியின்ர சொந்தக்காரன் இருக்க கேக்கிறான் இனி அவன் காணி யையும் பாப்பான். அந்த ஒழுங்கைச் செய்து போட்டுப் போகத் தான் வந்தனான்” என்றார். எனக்கு திக்கென்றது.

“அண்ணை” என்ற சொல்லோடு அசையாது நின்றார் அப்பா.

“இந்த கிழமைக்குள்ள அவன் வந்திடு வான். வந்தபிறகு என்னை வந்து பார் உன்ர கணக்கை முடிச்சு விடுறன். இப்ப கிளிநொச்சி யில எனக்கொரு அலுவல் இருக்கு நான் போட்டு வாறன்” என்றவர் கேசவன் மாமாவிடம் திரும்பினார்.

“என்ர விஷயம் முடிஞ்சுது நான் போறன். நீங்களும் உங்கட பிரச்சனை களை கதையுங்கோவன்” சொல்லி விட்டுப் போனார்.

அடுத்த பிரச்சனையா... இந்தக் காணியும் கைவிட்டுப் போகப் போகுதா... பார்த்து பார்த்து ஒவ்வொன் றையும் செய்தவராச்சே திடீரென இரண்டையும் ஒரே நேரத்தில் இழந்தால் அப்பாவால் எப்படித் தாங்கிக் கொள்ள முடியும். இனி வேறு வேலை தேட வேணுமே. ஒரு நிமிடத்தில் கற்பனை எங்கேயோ போய்விட தலையை உதறிவிட்டு மாமாவைப் பார்த்தேன்.

அப்பாவின் முகமும் அவரை நோக்கியே இருந்தது.

“மகனின்ர படிப்புக்காக யாழ்ப்பா ணத்திற்குப் போன தங்கச்சி திரும்ப வந்து என்ர வீட்டில இருக்கப் போறா ளாம்...” என்று இழுத்தார் மாமா.

“அவையள் வந்திருக்கட்டுமண்ணை. நான் வந்து என்ர வேலையளைச் செய்து போட்டு போறன்” அப்பா அவசரமாய் பதில் சொன்னார்.

“தம்பி சொன்னமாதிரி இனி வேலை குறைவுதானேடா. வீட்டில இருக்கிறவை பாக்கட்டும். மெசினையும் பைப்புக ளையும் கொண்டு வந்து குடுத்தால் தங்கச்சின்ர மனிசன் தண்ணியை இறைச்சுப் பாப்பார். உன்னையும் உடன போகச் சொல்லேல. முன்பக்கத்துக்கு மதில் கட்டி இரும்பு கேற் போடுவம் எண்டு நாளைக்கு ஆட்களை வரச் சொன்னனான். அந்த வேலை முடியு மட்டும் நீதான் பொறுப்பாய் இருந்து பாக்கவேணும் விடியவே வந்திடு” என்றார் மாமா.

காணி வேலை முடிந்ததும் அப்பா வேண்டாம் என்றவர் மதில் வேலைக்கு வரச்சொல்லுறாரே என்ற கோபத்தோடு அப்பாவை பார்த்தேன்.

“நாளைக்கு அவசரமாய் வவுனியா வுக்குப் போகவேணும் ஒரு செத்தவீடு இருக்குது அண்ணை. வந்ததும் வேலைக்கு வாறன்” ஏமாற்றத்தை மறைத் துக் கொண்டு சொன்னார் அப்பா.

“என்னடாப்பா நீ. நான் போகக் கிடையில இந்த வேலையளை முடிச் சிட்டுப் போகவேணும். என்ர அவசரம் தெரியாமல் நீ போறாய். சரி போ நான் வாற ஆட்களை வைச்சுத் தொடங்கிறன்” பட்டென்று சொன்னதும் அப்பாவின் முகம் வாடிவிட்டது. வீட்டுக்கு வந்த பின்பும் முகத்தில் மலர்ச்சியில்லை திகிலே தெரிந்தது.

“திடீரெண்டு காணியை விடச் சொன் னால் என்ன செய்யிறது. இவரை நம்பித்தானே கிடைச்ச வேலையையும் விட்டிட்டு வந்தன். இப்பிடிச் செய்வார் எண்டு நினைக்கேலயே இனி எங்க போய் வேலையைத் தேடுவன்” அம்மா விடம் புலம்பிக் கொண்டிருந்தார்.

பிறகு நடந்ததை நினைத்துப் பார்க்க நெஞ்சு வலித்தது. அடுத்தநாள் என்னை யும் தம்பியையும் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி விட்டு அப்பாவும் அம்மாவும் வவுனியாவிற்கு மோட்டார்சைக்கிளில் போனார்கள். போகும் வழியில் சாமான் ஏற்றி வந்த லொறியோடு ஏற்பட்ட விபத்தில் உயிரில்லாத அப்பாவின் உடல் வீட்டுக்கும் காயத்தால் துடித்த அம்மா வின் இரத்தம் தோய்ந்த உடல் ஆஸ்பத் திரிக்கும் வந்தது. என்ன செய்வது என்று தெரியாமல் துடித்த கணங்கள். அம்மாவையும் இழந்து அநாதையாகி விடுவோமோ என்று பதறிய நாட்கள். முதுகுத் தண்டில் ஏற்பட்ட காயத்திலி ருந்து அம்மா மீண்டு வர ஆறு மாதங்க ளுக்கு மேலானது. கொஞ்சம் கொஞ்சமாய் சேர்த்து வைத்த பணம் எல்லாம் அம்மாவின் வைத்தியச் செலவுக்கே கரைந்து போனது. அம்மாவைப் பார்க்க வந்தவர்கள் தந்த பணத்தில் மீதி நாட்கள் நகர்ந்தன. அடுத்தவர் கையை தினமும் எதிர்பார்க்க முடியுமா.. கடை வேலைக்கு முயற்சி செய்தேன் கிடைக்கவில்லை. வேறு என்ன வழி.. என்ன செய்யலாம்...

திடீரென கேசவன் மாமா வந்திருப்பதாக தம்பி சொன்னது நினைவுக்கு வந்தது. அவர் வீட்டுக்கு யாரும் வரவில்லை. பூட்டியிருந்தது. ஆட்களைப் பிடித்துத்தான் காணி வேலைகளைப் பார்க்கிறார். நான் அம்மாவிடம் சொன்னேன்.

“மாமா வந்திருக்கிறாராம் அப்பா செய்த வேலையை நான் செய்தால் படிச்சுக் கொண்டே பின்னேரங்களில காணியையும் பாக்கலாம். நான் மாமாட்ட கேக்கப் போறனம்மா”

“வேண்டாம் போகாதே” என்றாள்.

ஆனாலும் அப்பாவை இழந்து நிர்க்கதியாய் நிற்கும் எங்களுக்கு உதவுவார் என்ற எதிர்பார்ப்பில் மாமாவிடம் போய்க் கேட்டேன்.

“என்னடா விளையாடுறியா.. சின்னப் பெடியன் நீ காணியை பாப்பியே” என்றார்.

“காணியைத் திருத்தி தொடங்கிறது தான் கஷ்டம். அப்பா வேலை செய்யேக்க பாத்தனான் மாமா. அந்த வேலையை எனக்குத் தாங்கோ நான் தண்ணியெல்லாம் இறைச்சுப் பாப்பன்”

“தண்ணி மட்டும் விட்டால் போதுமேடா. காணியில கொத்திப்பிரட்டுற வேலையள் எத்தனை இருக்கும் உன்னால செய்யேலாது. உன்ர அப்பா சொன்ன வேலையளை குறையில்லாமல் செய்தான் நானும் உடனே அவன் செய்த வேலைக்கு சம்பளத்தைக் குடுத்திட்டன் கணக்கு முடிஞ்சுது. இப்ப நீ வந்து அப்பா செய்ததை நான் செய்யப் போறன் எண்டு சொந்தம் கொண்டாடுறாய். வந்திட்டான் வேலை கேட்டு இஞ்ச நீ ஒண்டும் செய்ய வேண்டாம் போய் வேற வேலையைப் பார் திரும்ப வந்து நிக்காதை” அலட்சியமாய் சொல்லி விட்டு திரும்பி நடந்தார். அவமானத்தில் உடல் நடுங்கியது.

அப்பாவை இழந்து நாம் படும் துன்பமும் கஷ்டமும் அவருக்கு நன்றாகவே தெரியும். ஆறுதலாக இரண்டு வார்த்தை கூறினால் பண உதவி கேட்டு வந்திடுவோம் என்று நினைத்திருப்பார்.

உழைப்புக்கு இனி என்ன செய்வது. அப்பாவின் ஞாபகம் வந்தது. திடீரென காணியில் வேலை இல்லை என்றதும் துடித்துப் போன அப்பாவின் மன உளைச்சல் விபத்தில் முடிந்தது. மனதைத் தளர விடக்கூடாது திடமாய் இருக்கவேணும். சொந்தமாய் ஏதாவது முயற்சி செய்ய வேண்டும். அம்மாவிடம் நடந்ததைச் செல்லும்போது அழுகை வந்தது.

“எனக்குத் தெரியுமடா. கஷ்டப்பட்டு உழைச்ச மனிசனையே காரியம் முடிஞ்சதும் தூக்கி எறிஞ்சவை உன்னில இரக்கம் காட்டுவினமே. சொன்னது கேளாமல் நீ ஏன் போனாய்”

“மற்றவையளிட்ட வேலை கேட்டு அவமானப்பட்டது போதுமம்மா. சொந்தமாய் ஏதாவது செய்யலாம் எண்டால் அதுக்கும் வழி இல்லையே” குரல் கம்மியது.

“ஏன் இல்லை. அதுக்கு நான் ஒழுங்கு செய்திட்டன். கொஞ்சக் காலத்துக்கு எங்களால வயல் செய்யேலாது இப்ப வயலைக் குத்தகைக்குக் குடுத்த கதிரேசுவோட கதைச்சனான் ஒவ்வொரு வருசமும் குத்தகை தராமல் அஞ்சு வருசத்துக்கு மொத்தமாய் காசு தந்திட்டு வயலைச் செய் எண்டு சொல்ல அவனும் விளையிற காணியை விடேலாது தாறன் எண்டு சொன்னான். ஒண்டரை லச்சம் வரும். காணாததுக்கு கொஞ்சக் கடனையும் வாங்குவம். இந்த வீட்டுக் காணியிலேயே முன் பக்கமாய் ஒரு கடையைப் போடு. நீ சாமான்கள் வாங்க வெளியில போற நேரம் நான் வந்து இருப்பன். சின்னதாய்த் தொடங்குவம் நல்லதே நடக்குமடா”

அம்மா சொல்லச் சொல்ல என்னால் நம்ப முடியவில்லை. அப்பாவின் பெரிய சொத்து கையில் இருக்க ஒன்றுமேயில்லை என்று நினைத்துக் கவலைப்பட்டேனே. பாய்ந்து அம்மாவைக் கட்டிக் கொண்டேன்.

“இது போதுமம்மா எனக்கு. இந்த நூ லைப் பிடிச்சு மேல ஏறிடுவேன்”

(முற்றும்)

# வங்கத்தில் எழுந்த மொழிப் போராட்டமும் உலக தாய்மொழி தின பிரகடனமும்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

தாய் மொழிக்காக போராடி உயிரிழந்தவர்களை நினைவுகூறி, உலகில் அனைத்து மக்களின் தாய் மொழி உரிமையைப் பாதுகாக்கும் வகையில், பெப்ரவரி 21ம் திகதியை சர்வதேச தாய்மொழி தினமாக ஐ.நாவின் யுனெஸ்கோ 1999ம் ஆண்டு பிரகடனப் படுத்தியது. இதையடுத்து 2000ம் ஆண்டிலிருந்து, பெப்ரவரி 21ம் திகதி உலக தாய்மொழிகள் தினமாக கொண்டாடப்படுகிறது.

இதற்கான மூல காரணம் சரியாக எழுபது ஆண்டுகளுக்கு முன்னால் இன்றைய வங்கதேசத்தில் எழுந்தது என்பதே வரலாற்றின் சான்றாக பொருந்தி அமைகிறது.





அன்றைய கிழக்குப் பாகிஸ்தானில் இன்றைய பங்களாதேஷில், “எங்களுக்கு வங்க மொழியே ஆட்சி மொழி பாகிஸ்தான் திணிக்கும் உருது மொழியை ஆட்சி மொழியாக ஏற்க முடியாது” என்று அறிவித்து, 1952-ஆம் ஆண்டில் வங்காளிகள் நடத்திய உருதுமொழி எதிர்ப்புப் போராட்டத்தில் உயிர்நீத்த நான்கு மாணவர்களின் தியாகத்தைப் போற்றும் வகையில், அவர்கள் கொல்லப்பட்ட நாளான பெப்ரவரி 21-ஆம் நாள் உலகத் தாய்மொழி நாளாக அறிவிக்கப்பட்டது. இதன் பின்னரே பெப்ரவரி 21. இன்று உலகத் தாய்மொழி நாள் உலகெங்கிலும் கொண்டாடப் படுகிறது.

அன்றைய கிழக்கு பாகிஸ்தானில், உருது மட்டுமே தேசிய மொழியாக இருந்தது. ஒரே மதத்தினராக இருந்தாலும், மேற்கு பாகிஸ்தானில் அதிகம் பேசப்படும் உருது மொழியானது, கிழக்கு பாகிஸ்தானில் திணிக்கப்படுவதை, வங்காள மக்கள் ஏற்கவில்லை.

### வங்க மொழி இயக்கம்

இதையடுத்து கிழக்கு பாகிஸ்தானில் தேசிய மொழியாக வங்க மொழியே வேண்டும் என்று 1952-ம் ஆண்டு பெப்ரவரி 21ம் திகதி “வங்க மொழி இயக்கம்”



உருவானது. இதையடுத்து வங்க மொழி இயக்கத்தைச் சார்ந்த மாணவர்கள், அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டனர். பொலிசாரின் நடவடிக்கையால், மாணவர்கள் 4 பேர் உயிரிழந்தனர். போராட்டம் தீவிரமாக பரவியது. அதன்பின் 1956ம் ஆண்டு, கிழக்கு பாகிஸ்தான் மொழியாக வங்க மொழி அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து, தலைநகர் டாக்காவில் நடைபெற்ற போராட்டத்தில் உயிரிழந்தவர்களின் நினைவாக ஆண்டுதோறும், பெப்ரவரி 21ம் திகதியை உலக தாய் மொழிகள் தினமாகக் கடைபிடிக்க வேண்டும் என்கிற தீர்மானத்தை வங்க தேச அறிஞர் ரபீக்குல் இஸ்லாம் 1998ம் ஆண்டு யுனெஸ்கோவில் முன்மொழிந்தார். 2000ம் ஆண்டிலிருந்து, பெப்ரவரி 21ம் திகதி உலக தாய்மொழிகள் தினமாக கொண்டாடப்படுகிறது.

### வங்கம் பிறந்த வரலாறு:

இந்தியா-பாகிஸ்தான் என இரு நாடுகளாக 1947 ஆகஸ்ட் மாதத்தில் பிரிந்தபோது, பாகிஸ்தானின் மொத்த மக்கள் தொகை 6.9 கோடி. இதில் 4.4 கோடிப் பேர் கிழக்குப் பாகிஸ்தானில் வசித்தனர். அவர்களின் தாய்மொழி வங்காளியாக இருந்த அதேநேரத்தில், மேற்கு பாகிஸ்தானில் இருந்த மக்கள் உருது, பஞ்சாபி, பஷ்தூ, சிந்தி ஆகிய மொழிகளைப் பேசுபவர்களாக இருந்தனர்.

இந்தப் பின்னணியில் 1948 பெப்ரவரி 23 அன்று கூடிய பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபை, தனது உறுப்பினர்கள் உருது அல்லது ஆங்கிலத்தில் மட்டுமே பேசலாம் என முடிவெடுத்தது. இதை எதிர்த்த கிழக்கு பாகிஸ்தானைச் சேர்ந்த உறுப்பினர் திரேந்திரநாத் தத்தா ‘வங்க மொழியையும் அதில் சேர்க்க வேண்டும்’ என்று முன்மொழிந்தார். எனினும், அன்றைய பாகிஸ்தான் பிரதமர் லியாகத் அலி கான், கிழக்குப் பாகிஸ்தான் முதல்வர் க்வாஜா நசிமுதீன் உள்ளிட்ட பலரின் உதவியுடன் வங்க மொழிக்கு ஆதரவான தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது. இதற்கு எதிராக கிழக்கு பாகிஸ்தான் போர்க்கோலம் பூண்டது.

1948 மார்ச் 11இல் பொது வேலை நிறுத்தம் நடைபெற்றது. மார்ச் 19-ல் பாகிஸ்தான் அதிபர் முகமது அலி ஜின்னா அரசுமுறைப் பயணமாக டாக்கா வந்து கலந்துகொண்ட இரண்டு நிகழ்ச்சிகளிலுமே, மக்களின் கடுமையான எதிர்ப்புக் குரல்களுக்கு இடையே, ‘பாகிஸ்தானின் அரசு மொழியாக உருது மட்டுமே இருக்கும்’ எனத் திட்டவட்டமாகத் தெரிவித்தார். இதைத் தொடர்ந்து, அரசியல் மட்டத்தில் தொடங்கிய எதிர்ப்பு மாணவர்கள், இளைஞர்கள், அறிவுஜீவிகள் மத்தியிலும் வேகமாகப் பரவியது. இவ்வாறு தாய்மொழியான வங்க மொழிக்கு ஆதரவாக 1948-ல் தொடங்கிய இந்த இயக்கம் தொடர்ந்து வலுப்பெற்று 1952-ல் உச்சம் எய்தியது.

### டாக்கா மாணவர்களின் கிளர்ச்சி

அந்த ஆண்டு பெப்ரவரி 21 அன்று டாக்கா மருத்துவக் கல்லூரி மாணவர்களின் கிளர்ச்சியை ஒடுக்க ராணுவம் நடத்திய தாக்குதலில் ரஃபீக் உதீன் அகமது, அப்துல் ஜப்பார், அப்துல் பரக்கத், அப்துல் சலாம் ஆகிய மருத்துவக் கல்லூரி மாணவர்களோடு, ஒன்பது வயதேயான ரஹியுல்லா என்ற சிறுவன் உட்பட ஐந்து பேர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர் காயமுற்றனர்.

இவர்கள் உயிர்நீத்த அதே இடத்தில் பெப்ரவரி 23 அன்று தியாகிகள் நினைவுச் சின்னம் தற்காலிகமாக உருவானது. அன்றிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் அரசின் கடுமையான ஒடுக்குமுறைக்கு இடையே பெப்ரவரி 21ஐ மொழிப் போர் தியாகிகளின் தினமாக கிழக்கு பாகிஸ்தான் மக்கள் கடைப்பிடித்து வந்தனர்.

மக்களின் கடுமையான எதிர்ப்பினை அடுத்து 1956 பெப்ரவரி 16 அன்று பாகிஸ்தானின் அரசு மொழிகளில் ஒன்றாக வங்க மொழி ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனினும், மேற்கு பாகிஸ்தானின் ஆதிக்க உணர்வு மங்கிவிடவில்லை. பொருளாதாரரீதியாகவும், சமூகரீதியாகவும் கிழக்கு பாகிஸ்தான் மக்களை ஒடுக்கவும், மதரீதியாக அவர்களைப் பிளவுபடுத்தவுமான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

### மொழிப் போரால் பிறந்த நாடு

இவ்வாறு தாய்மொழிக்காகத் தொடங்கிய போராட்டம் படிப்படியாக அரசியல்ரீதியாக வலுப்பெற்று, விடுதலைப் போராக உருமாறியது. இப்போரின்போது கிழக்கு பாகிஸ்தான் மக்களை அடக்கி ஒடுக்க பாகிஸ்தான் ராணுவப் படைகள் கட்டவிழ்த்துவிட்ட வன்முறை வெறியாட்டத்தில் முப்பது லட்சம் பேர் படுகொலை செய்யப்பட்டனர் மூன்று லட்சம் பெண்கள் மிகக் கொடூரமான வகையில் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாயினர். கிழக்கு பாகிஸ்தானில் காலம்காலமாக இருந்து வந்த கட்டமைப்பு வசதிகள் முற்றிலுமாகத் துடைத்தெறியப்பட்டன.

இறுதியில், உலகிலேயே முதன்முறையாக ஒரு மொழியின் அடிப்படையில் வங்கதேசம் என்ற தனியொரு நாடு உருவாக வழிவகுத்தது. இந்தப் பின்னணியில்தான் தாய்மொழியின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் சர்வதேசக் கலாச்சார அமைப்பான யுனெஸ்கோ, வங்கதேசத்தின் மொழிப் போர் தொடங்கிய பெப்ரவரி 21-ஐ உலகத் தாய்மொழி நாளாக ஆண்டுதோறும் கொண்டாட வேண்டும் என 1999 நவம்பர் 17-ல் தீர்மானம் நிறைவேற்றியது. பின்பு, ஐக்கிய நாடுகள் சபையும் தனது உறுப்புநாடுகள் இதைக் கொண்டாட வேண்டுமென பொது அவையில் தீர்மானம் நிறைவேற்றியது.

ஒவ்வொரு தாய்மொழி நாளும் பெப்ரவரி 21 அன்று கொண்டாடப் படும் வேளையில், உலகத்துக்குச் சொல்லும் பாடம் ஒன்று தான். தேசிய இனங்களுக்கான உரிமைகளை, அவர்களது மொழி, பண்பாடு ஆகியவற்றை, ஒற்றை ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவரத் துடிக்கும் எந்தவொரு அரசும் இறுதியில் சிதறுண்டு போனதையே உலக வரலாறு நிரூபித்துள்ளது.



# ஆலயங்களில் சிவராத்திரி தரிசனங்கள்




# ஈஸ்டர் தாக்குதல் போன்ற உயர் நீதிமன்ற தீர்ப்பை தேர்தலை சீர்குலைப்போர் எதிர்கொள்ள வேண்டும்!

## தேசிய மக்கள் சக்திக்கான சட்டத்தரணிகள் எச்சரிக்கை

கொழும்பு, பெப். 19

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் பொறுப்பற்ற முறையில் செயற்பட்டால், ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் சம்பவத்தைப் போன்று அரசியல் அதிகாரங்களும் சம்பந்தப் பட்ட அரசாங்க அதிகாரிகளும் உயர் நீதிமன்றத்தின் சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ள நேரிடும் என தேசிய மக்கள் சக்திக்கான சட்டத்தரணிகள் நேற்று தெரிவித்துள்ளனர்.

சட்டத்தரணி சுனில் வட்டகல செய்தி யாளர் மாநாட்டில் கூறுகையில், உள்ளூ ராட்சித் தேர்தலை ஒத்திவைக்கும் நடவ டிக்கைகளின் பின்னணியில் அமைச்சர வையும் அரசியல் அதிகாரம் மற்றும் ஐந்து அரசாங்க அதிகாரிகளும் உள்ளனர்.

அரசியல் அதிகார சபையினால் எடுக்கப்படும் தேர்தல் ஒத்திவைப்புத் தீர்மானங்களை நிறைவேற்றும் பொறுப்பானவர்கள் பொலிஸ்மா அதிபர், திறைசேரி செயலாளர், சட்டமா அதிபர், அரசாங்க அச்சக அதிகாரி மற்றும் ஊடக அமைச்சின் செயலாளர் ஆகிய ஐந்து அரச அதிகாரிகளே இதற்குப் பொறுப்பானவர்கள்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான சமீபத்திய தீர்ப்பின்போது, பொது மக்கள் மீதான தங்கள் பொறுப்பை நிறைவேற்றத் தவறிய அரசியல் அதிகாரம் மற்றும் அரசாங்க அதிகாரிகள் மீது உயர் நீதிமன்றம் சிறந்த தீர்ப்பை வழங்கியது.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான உயர் நீதிமன்றத் தீர்ப்பு, உள்ளூராட்சி தேர்தலை ஒத்திவைத்ததற் குக் காரணமானவர்களுக்கும் பொருந் தும். தேர்தலை சீர்குலைக்கும் நடவடிக் கைகள் இன்னும் கடுமையான குற்றமா கும் - என்றார். (அ)

### கல்வி tv CHANNEL-1

**19.02.2023**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள்<br>மறு ஒளிபரப்பு<br>அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

### கல்வி tv CHANNEL - 2

**19.02.2023**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# தேர்தலைச் சீர்குலைக்கும் அரசின் செயற்பாடுகளை தடுக்கவேண்டும்!

## சட்டத்தரணிகள் சங்கம் கண்டனம்

கொழும்பு, பெப். 19

**தேர்தல் நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் அனைத்து முயற்சிகளும் தோற்கடிக்கப்படவேண்டும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

2023 ஆம் ஆண்டு மார்ச் 19 ஆம் திகதிக்கு முன்னர் நடத்தப்பட வேண்டிய உள்ளூராட்சி மன்றத் தேர்தலை சீர்குலைக்க அரச அதிகாரிகள் அண்மைக் காலமாக மேற்கொண்ட முயற்சிகள் குறித்து ஆழ்ந்த கவலையடைவதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அனைத்து தேர்தல்களும் மிகவும் முக்கியமானவை என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்துயுள்ளது.

அரச நிதியை கையாள்வதாகக் கூறி கடந்த வாரங்களில் அரசாங்கம் எடுத்த பல தீர்மானங்கள், தேர்தல்கள் ஆணைக்குழு தேர்தலை நடத்துவதைத் தடுக்கும் விளைவை ஏற்படுத்தியுள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

வாக்குச்சீட்டுகள் அச்சடிக்கப்படுவதற்கு முன், அதற்கான நிதியை விடுவிக்குமாறு அரச அச்சகம் விடுத்த கோரிக்கை மற்றும் தேர்தலுக்குப் பணம் இல்லை என திறைசேறி செயலாளர் கூறியமையும் இவற்றுள் அடங்குவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நடவடிக்கைகளுக்காக வரவு செலவுத் திட்டத்தில் 10 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ள போதிலும், கடந்த சில வாரங்களாக திறைசேரி செயலாளர், அரச அச்சகர் உட்பட அரச அதிகாரிகள் மற்றும் நிறுவனங்களின் நடவடிக்கைகள், தேர்தலை நிறுத்துவதற்கான முயற்சிகளாக அமைந்தமை தெளிவாக புலப்படுவதாகவும், அதனூடாக மக்களின் வாக்குரிமை நகைப்புக்குட்படுத்தப்படுவதாகவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

மக்களின் வாக்குரிமையில் தலையிடுவதற்கு பல வருடங்களாக பல்வேறு நிர்வாக சபைகள் மேற்கொண்ட முயற்சிகள் நாட்டுக்கும் மக்களுக்கும் பேரழிவு தரக்கூடிய விளைவுகளை ஏற்படுத்தியுள்ளதாகவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

நாட்டின் இன்றியமையாத நடவடிக்கையான தேர்தலை நடத்துவதற்கு நிதி வழங்குவதை உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் புனிதமான கடமையாகும்.

அரசியலமைப்பு மற்றும் சட்டத்திற்கு மதிப்பளித்து, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை மேலும் சீர்குலைக்கவோ அல்லது தடுக்கவோ முயற்சிக்காமல், திட்டமிட்டவாறு நடைபெறுவதை உறுதி செய்யுமாறு அரசாங்கத்தையும் அனைத்து அரச அதிகாரிகளையும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது. (அ)



# உமா மகேஸ்வரன் நூலகம் வவுனியாவில் திறந்துவைப்பு

வவுனியா, பெப். 19

வவுனியாவில் உமா மகேஸ்வரனின் 78ஆவது பிறந்தநாளை முன்னிட்டு வவுனியா கோவில் குளத்தில் நூலகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் ஜி. ரி. லிங்கநாதன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவருமான த. சித்தாத்தன் நாடா வெட்டி திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மற்றும் பிரதேச சபை தலைவர்களான சுப்பையா ஜெகதீஸ்வரன், த.யோகன் மற்றும் கட்சி முக்கியஸ்தர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கான மேன்முறையீடு பெப்.28 வரை ஏற்கப்படும்

கொழும்பு, பெப். 19

தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் நேர்முகப் பரீட்சைக்கான மேன்முறையீடுகள் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

2019 மற்றும் 2020 ஆம் ஆண்டு உயர்தர பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கான மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவதுடன், குறித்த நேர்முக பரீட்சைகள் தொடர்பில் மேன்முறையீடு செய்ய முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மேன்முறையீடுகள் கல்விப் பணிப்பாளர், கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

உயர்தர பரீட்சைக்கு தோற்றிய ஆண்டு, புதிய பாடத்திட்டம், அல்லது பழைய பாடத்திட்டம் என்பதை அதில் குறிப்பிடல் வேண்டும்.

மேல்முறையீட்டுக்கான காரணம், விண்ணப்பதாரர்களின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகியவற்றையும் குறிப்பிட வேண்டும் என கல்வி அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. (அ)

# குடியிருப்பு பகுதிக்குள் நுழைந்த யானைகளால் மரங்கள் அழிப்பு

முல்லைத்தீவு, பெப். 19

விசுவமடு நாச்சிக்குடா பிரதேசத்தில் மக்கள் குடியிருப்புக்குள் நுழைந்த யானைகளால் பயன்தரும் மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட குறித்த கிராமத்தில் நேற்று முன் தினம் இரவு நுழைந்த காட்டு யானைகள் இவ்வாறு அழிவை ஏற்படுத்தியுள்ளன.



4 காணிகளில் பயன்தரும் தென்னை மரங்களை அழித்துள்ளதாகவும், வீடுகளில் இருந்த தம்மை அச்சுறுத்தியதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

என்றும் இல்லாதவாறு இவ்வருடம் தமக்கு யானைகளால் அழிவுகளும், அச்சுறுத்தலும் ஏற்பட்டுள்ளதாக மக்கள் தெரிவித்தனர்,

இவற்றை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# வாக்குச் சீட்டுகளை அச்சிடும் பணிகள் மீண்டும் ஆரம்பமான பின் அரச அச்சகத்துக்கு பாதுகாப்பு

கொழும்பு, பெப். 19

அரச அச்சகத்தினால் பாதுகாப்பு கோரப்பட்டுள்ள போதிலும் , தற்போது வாக்கு சீட்டு அச்சிடும் பணிகள் இடைநிறுத்தப் பட்டுள்ளமையால் மீண்டும் அப்பணிகள் ஆரம்பமானதன் பின்னர் உரிய நேரத்தில் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.




அரச அச்சகத்தினால் பொலிஸ் திணைக்களத்திடம் பாதுகாப்பு கோரப்பட்டுள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எந்தவொரு தேர்தலுக்கும் பொலிஸ் திணைக்களத்தினாலேயே பாதுகாப்பு வழங்கப்படும். தேர்தல் ஆணையாளரின் ஆலோசனைக்கமையயே அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். இந்நிலையில் அரச அச்சகம் பாதுகாப்பு வழங்குமாறு பொலிஸ் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

எவ்வாறிருப்பினும் நிதி நெருக்கடிகள் காரணமாக வாக்கு சீட்டு அச்சிடும் பணிகள் இடம்பெறவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. எனவே வாக்கு சீட்டு அச்சிடும் பணிகள் ஆரம்பமானதன் பின்னர் நாம் பாதுகாப்பு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்போம்.

இவ்வாறு பாதுகாப்பு வழங்கும் போது நீண்ட காலத்திற்கு பொலிஸ் உத்தியோகத்தர்களை அங்கு பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்த வேண்டி யேற்படும். இதற்காக பொலிஸ் உத்தியோகத்தர்களை பிரத்தியேகமாக நியமிக்க வேண்டிய தேவையும் காணப்படுகிறது.

இவ்வாறான அரச நிறுவனங்களினால் கோரிக்கை விடுக்கப்படுகின்ற போதிலும் , கடமைகளில் ஈடுபடுத்தப்பட வேண்டிய பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை பொலிஸ் திணைக்களத்தினாலேயே தீர்மானிக்கப்படும். எனவே இந்தக் காரணிகள் தொடர்பில் ஆராய்ந்து பாதுகாப்பினை வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (அ)

# அரசாங்கத்திற்கு எதிராக நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளது பவ்ரல்

கொழும்பு, பெப். 19

உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பில் அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிராக நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

சிவில் அமைப்புகளுடன் இணைந்து இது தொடர்பில் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாரச்சி தெரிவித்தார்.

எதிர்வரும் மார்ச் மாதம் 09 ஆம் திகதி தேர்தல் நடைபெறுவதில் நிச்சயமற்ற தன்மை காணப்படுவதாகவும், இதுவரை தேர்தலுக்கான நிதி வழங்கப்படவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதனூடாக நாட்டு மக்களின் ஜனநாயக உரிமை மறுக்கப்படுவதாக ரோஹன ஹெட்டியாரச்சி குறிப்பிட்டார்.

இதேவேளை, நாட்டில் இதுவரை 74 தேர்தல்கள் நடைபெற்றுள்ள போதிலும் இம்முறை 75 ஆவது தேர்தலில் சில அரச அதிகாரிகளின் இடையூறுகளால் தபால் மூல வாக்களிப்புகளும் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக ஜனநாயக சீர்திருத்தம் மற்றும் தேர்தல் ஆய்வு நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார். (அ)

# ரஷ்யாவுக்கு எதிராக ஐ.நாவில் தீர்மானம் இலங்கையின் ஆதரவை கோரிய ஜேர்மனி

கொழும்பு, பெப். 19

ரஷ்யாவுக்கு எதிரான ஐ.நா தீர்மானத்திற்கு இலங்கை ஆதரவளிக்கவேண்டும் என ஜேர்மனி வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பின் போது இந்த விவகாரம் குறித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டதாக இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜேர்மனியின் பாராளுமன்ற உறுப்பினர் பீற்றர் ரம்சோர் தெரிவித்தார்.

ரஷ்யாவுக்கு எதிரான தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பை இலங்கை கடந்த வருடம் தவிர்த்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## மினகட்டணத்தை...

இடம்பெற்றது.

நேற்றும் ஹங்குரன்கெத்த மற்றும் காலி பிரதேசங்களில் மின்சார கட்டண அதிகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்தப்பட்டது. (அ)

## திலீபன்...

தலைவர்களிடம் ஆசிகளை பெற்றனர்.

நல்லூரில் அமைக்கப்பட்டுள்ள தியாக தீபம் திலீபன் நினைவிடத்தில் சுடரேற்றி மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தியிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து நல்லை ஆதீன குரும் முதல்வர் மற்றும் சிவகுரு முதல்வர், யாழ்.ஆயர் மற்றும் முஸ்லீம் மௌளபி ஆகியோரையும் அவர்கள் சந்தித்து கலந்துரையாடினர். (அ)

## சீனாவின்...

கொள்கையின் கீழ், இலங்கையின் கடனை அங்கீகரிப்பது பற்றி சர்வதேச நாணய நிதியம் பரிசீலிக்கலாம் என தகவல் வெளியாகியுள்ளது.

இந்த ஏற்பாடு, கடனாளி ஒரு நாட்டுக்கு நிதியுதவி தேவைப்படுவதைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ள சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்படும்.

**சர்வதேச நாணய நிதியக் கொள்கை**

நிதியத்தின் இணையதளத்தில் உள்ள விளக்கத்தின்படி, உடனடி நிதி உதவி அவசியம் என்று கருதி, நாடு தகுந்த கொள்கைகளைப் பின்பற்றுவதையும், கடனாளர்களுடன் உடன்பாட்டை எட்ட நல்ல நம்பிக்கையுடன் முயற்சிகளை மேற்கொள்வதையும் பார்த்தால், உத்தியோகபூர்வ நிலுவைத் தொகையின் மத்தியிலும் சர்வதேச நாணய நிதியம் கடன் வழங்குவதற்கான கொள்கையைப் பயன்படுத்தலாம். (அ)

## வாக்குகளை பயன்படுத்தி...

உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

நாட்டின் பொருளாதாரம் விரைவில் வழமைக்குத் திரும்பும் என்று நம்பிக்கை தெரிவித்த ஜனாதிபதி, இந்த வருட இறுதிக்குள் நாட்டில் ஜனநாயகம் தளராமல் செயற்படும் சமூகம் கட்டியெழுப்பப்படும் என்றும் உறுதியளித்தார்.

அத்துடன், நாட்டின் பொருளாதார பிரச்னைகளை தீர்த்துவிட்டு மக்கள் துன்பப்படுவதற்கு இடமளிக்கப்படப் போவதில்லை என வலியுறுத்திய ஜனாதிபதி, அதற்கான சகல தீர்மானங்களையும் அரசாங்கம் மேற்கொள்ளும் எனவும் தெரிவித்தார்.

தான் ஜனநாயகத்தை மதிக்கும் தலைவர் என்றும், ஆனால் ஜனநாயகத்திற்கு முதலில் பொது அமைதி தேவை என்றும், அதற்கு சட்டம் ஒழுங்கை பேணுவது அவசியம் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

ஒரு நாட்டில் சட்டம் ஒழுங்கு இல்லாமல் ஜனநாயகம் இருக்க முடியாது எனவும், ஜனநாயகத்திற்கு நிலையான பொருளாதாரம் அவசியம் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

சட்டம், ஒழுங்கு மற்றும் பொருளாதார மீட்சி இல்லாத நாட்டில் அராஜகமே தவிர ஜனநாயகம் இல்லை எனவும், நாட்டை அராஜக பாதைக்கு செல்ல ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என்று தெரிவித்த ஜனாதிபதி, ரணில் விக்கிரமசிங்க, அராஜகத்தின் கீழ் நிலைக்கு கொண்டு செல்வதற்கு தான் ஒருபோதும் இட மளிக்கப் போவதில்லை எனவும் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் குறிப்பிட்டார்.

பொருளாதாரத்தை மீட்டெடுப்பதன் மூலம் அடுத்த வருடம் மக்கள் தமது வாக்குகளைப் பயன்படுத்தி நாட்டில் தேவையான மாற்றங்களை ஏற்படுத்தி தமக்கு விரும்பும் எதிர்காலத்தை உருவாக்குவதற்கான சூழல் ஏற்படுத்தப்படும் எனவும் ஜனாதிபதி நம்பிக்கை தெரிவித்தார். (அ)

## அமெரிக்காவிலிருந்து வந்தது....

கட்டுநாயக்க விமான நிலையத்தில் 2 அமெரிக்க இராணுவ விமானங்களில் வந்திறங்கிய இந்த உயர்மட்டக் குழுவில் அமெரிக்காவின் புலனாய்வு அமைப்பான சி.ஐ.ஏயின் மிக முக்கிய பிரமுகர்கள் அடங்கியிருந்தனர் என சிங்கள ஊடகங்கள் கடும் சந்தேகம் வெளியிட்டுள்ளன.

அமெரிக்காவில் இருந்து வருகை தந்த குழுவைப் பற்றி கேள்வி எழுப்பிய போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிரித்து சமாளித்துவிட்டார் எனவும் அவை கூறியுள்ளன.

கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதியை சந்தித்த அமைச்சர்கள் பலர், அமெரிக்க உயர்மட்டக் குழுவின் வருகை குறித்து பேசினர் எனவும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தக் குழுவில் அமெரிக்க சி.ஐ.ஏ. அமைப்பின் தலைவர் அடங்கியிருந்தார் எனவும் கூறப்படுகிறது.

அது உண்மையாயின், அவ்வாறான ஒருவர் இலங்கைக்கு வருவது இதுவே முதல் முறை.

கூட்டத்தில் அமைச்சர்களின் கதைகளையெல்லாம் சிரித்துக் கொண்டே கேட்டாலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதிலுக்கு எதுவும் பேசவில்லை. சிரித்துக்கொண்டே சமாளித்துவிட்டார் என கூட்டத்தில் பங்கேற்ற அமைச்சர்கள் கூறியுள்ளனர்.

இந்தோ-பசிபிக் பாதுகாப்பு விவகாரங்களுக்கான அமெரிக்காவின் பிரதம துணைப் பாதுகாப்புச் செயலாளர் ஜெடிடியா றோயல் 20 அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் குழுவுடன் கடந்த 14 ஆம் திகதி இரவு இலங்கை வந்தடைந்தமை கடந்த சில தினங்களாக பெரும் பேசுபொருளாக மாறியுள்ளது.

அமெரிக்க விமானப்படைக்கு சொந்தமான இரண்டு போயிங் சி-17 குளோப் மாஸ்ரர் சிறப்பு விமானங்களில் இந்தக் குழு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது.

ஜெடிடியா றோயலின் இரகசியப் பயணத்திற்கு மூன்று நாட்களுக்கு முன்னதாக விமான நிலையம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்ததுடன், அவர் இலங்கை வந்தடைந்த 14ஆம் திகதி விமான நிலையத்துக்கும் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

விமான நிலையத்தில் குடிவரவு திணைக்கள அதிகாரிகள்கூட வந்தவர்களைச் சோதனை செய்யவில்லை என்பதும் இந்த குழுவினரின் வருகையின் மற்றுமொரு விசேட அம்சம் என கூறப்படுகிறது.

அண்மையில் அமெரிக்க இராஜாங்கச் செயலர் இலங்கை வந்திருந்தபோது, அவரது கடவுச்சீட்டு மற்றும் ஏனைய ஆவணங்கள் குடிவரவு அதிகாரிகளால் பரிசோதிக்கப்பட்டபோதிலும், இந்தக் குழுவினர் அவ்வாறானதொரு சோதனைக்கு உட்படுத்தப்படாதது அரசியல் மற்றும் பாதுகாப்பு துறைகள் வட்டாரத்தில் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 14 ஆம் திகதி இரவு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த இந்தக் குழுவினர், கட்டுநாயக்க-கொழும்பு நெடுஞ்சாலையை பொது மக்கள் போக்குவரத்து செய்யமுடியாதவாறு மூடியதன் மூலம் இந்த உயர்மட்டக் குழு பலத்த பாதுகாப்புடன் கொழும்புக்கு வர வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புடன் பல வாகனங்களில் அமெரிக்க இராணுவ விமானங்களில் யார் கொழும்புக்கு வந்தார்கள், எதற்காக வந்தார்கள் என்ற தகவல்களை வழங்குவதை சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் தவிர்த்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விசேட குழுவின் வருகை தொடர்பில் ஜனாதிபதி அல்லது அவரது கட்சி, பாதுகாப்பு அமைச்சு அல்லது பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் இருந்து இதுவரை எந்த தகவலும் வெளியிடப்படவில்லை.

இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு மற்றும் அமைச்சின் செயலாளரிடம் ஊடகவியலாளர்கள் வினவியபோதிலும் அவர்கள் தகவல்களை வழங்காமல் தவிர்த்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த குழுவின் வருகை தொடர்பில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவரிடமும் ஊடகவியலாளர்கள் வினவிய போதிலும் அவர் எதுவும் கூற முன்வரவில்லை.

அமெரிக்கக் குழுவின் இலங்கைப் பயணம் குறித்து வெளிவிவகார அமைச்சுக்குக்கூட அறிவிக்கப்படவில்லை என சிங்கள ஊடகங்கள் கூறியுள்ளன.

இவர்கள் மிகவும் இரகசியமாக இந்த நாட்டுக்கு வந்து வீதிகள் மூடப்பட்டு பாதுகாப்பாகச் செல்வதற்கு வசதி செய்து கொடுக்கப்பட்டமை தொடர்பில் பலத்த சந்தேகங்கள் எழுந்துள்ளதாகவும் சிங்கள ஊடகங்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளன.

உலகத் தலைவர் ஒருவருக்குக் கூட கிடைக்காத பாதுகாப்பு இந்தப் பிரதிநிதிகளுக்கு வழங்கப்படுவதன் இரகசியம் என்ன என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இந்தோ-பசிபிக் பாதுகாப்பு விவகாரங்களுக்கான அமெரிக்க முதன்மை துணை பாதுகாப்புச் செயலர் ஜெடிடியா றோயல் தலைமையிலான குழுவினர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் நாயகம் கமல் குணரத்ன ஆகியோரை இரண்டு தடவைகள் கடந்த 16 ஆம் திகதி சந்தித்தனர்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் லெப்டினன்ட் கேணல் அந்தோனி நெல்சனுடன் பாதுகாப்பு அமைச்சுக்கு விஜயம் செய்த பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இங்கு இடம்பெற்ற கலந்துரையாடலின்போது அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையில் நிலவும் உறவுகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்கத் தூதரகத்தின் உதவி பாதுகாப்பு ஆலோசகர் சேதி பாவின்ஸ், அமெரிக்காவின் தெற்காசிய பிராந்திய அதிகாரி லெப்டினன்ட் கேணல் கிறிஸ்டியன் மிட்செல், பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் (பாதுகாப்பு) ஹர்ஷ விதானச்சி மற்றும் அதிகாரிகள் குழுவும் இந்த கலந்துரையாடலில் கலந்துகொண்டது.

ஸ்ரீஜயவர்தனபுர கோட்டேயில் அமைந்துள்ள பாதுகாப்பு தலைமையக வளாகத்துக்கும் சென்ற அமெரிக்க பிரதிநிதிகள் பாதுகாப்புச் செயலாளர் கமல் குணரத்னவுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

அத்தகவல்களின்படி, அன்பான வரவேற்பிற்குப் பிறகு, பாதுகாப்புச் செயலாளர், அமெரிக்காவின் உதவிச் செயலாளருடன், இரு நாடுகளுக்கிடையிலான சிறப்பு உறவுகள் குறித்து, அமெரிக்காவின் தலைமைப் பிரதிநிதியுடன் நீண்ட நேரம் கலந்துரையாடினார். இரு நாடுகளுக்கும் இடையே பாதுகாப்பு ஒத்துழைப்பை வளர்ப்பது மற்றும் பிராந்திய பாதுகாப்பு ஸ்திரத்தன்மை குறித்தும் அவர்கள் விவாதித்தனர்.

ஜெடிடியா றோயல் சர்வதேச அரசியல் அறிவியல் சங்கத்தின் உறுப்பினர் ஆவார் மற்றும் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பு அமைப்பின் துணை இயக்குநராகவும் பணியாற்றியுள்ளார். அங்கு பல்வேறு பாதுகாப்பு ஒத்துழைப்பு திட்டங்களை ஒருங்கிணைக் கும் பணியில் ஈடுபட்டார். அதற்கு முன், அவர் வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பின் (நேட்டோ) பாதுகாப்பு கொள்கை மற்றும் திட்டமிடல் இயக்குநராக பணியாற்றினார். ஐக்கிய நாடுகளின் பணியிலும் ஈடுபட்டார்.

இந்த நிலையில், ஜெடிடியா றோயல் நேட்டோவின் பாதுகாப்புக் கொள்கை, திறன்கள், திட்டமிடல், தடுப்பு, பொறுப்பு பகிர்வு மற்றும் கூட்டாண்மை விடயங்களில் அமெரிக்க பிரதிநிதியாக பணியாற்றினார். அந்த நேட்டோ பதவிக்கு முன்பு, ஜெடிடியா றோயல் பாதுகாப்புச் செயலாளர் உட்பட பல்வேறு அலுவலகங்களில் பணியாற்றினார். அவர் ஆப்கானிஸ் தான், பாகிஸ்தான் மற்றும் மத்திய ஆசிய உறவுகளுக்கான தற்காலிக துணை உதவி செயலாளராகவும் பணியாற்றியுள்ளார் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (அ)

## திட்டமிட்டபடி...

காரியாலயங்களுக்கு அறிவித்துள்ளமையே இதற்குக் காரணம் என தெரிவிக்கப்படுகின்றது.

தபால் மூல வாக்களிப்பு நடவடிக்கையை காலவரையறையின்றி ஒத்திவைக்க தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்ததுடன், அதற்கான அடிப்படை நடவடிக்கைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட நிர்வாக பிரிவுகளுக்கு தேர்தல் ஆணையாளர் நாயகம் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இது தொடர்பான கடிதம் அனைத்து மாவட்ட தேர்தல் அதிகாரிகள் மற்றும் அனைத்து மாவட்ட துணை மற்றும் உதவி தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அதன்படி, நாளை திங்கட்கிழமை முதல் அனைத்து ஊழியர்களுக்கும் சாதாரண அலுவலக நேரம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், தேர்தல் கடமைகளுக்கான மேலதிக நேர வேலைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

பிரதான அலுவலகம் உட்பட அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலகங்களையும் வார இறுதி நாட்கள் மற்றும் பொது விடுமுறை நாட்களில் மூடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் எனவும் குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வார இறுதி நாட்களிலோ அல்லது விடுமுறை நாட்களிலோ ஏதாவது விசேட கடமைக்காக அலுவலகத்தை திறப்பது அவசியமானால் அதற்கு தேர்தல் ஆணையாளர் நாயகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

தற்போது பணியில் உள்ள தற்காலிக உதவியாளர்கள் மற்றும் ஓய்வு பெற்ற அலுவலர்களின் சேவைகள் நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் அலுவலக நேரத்திற்குப் பிறகு தற்காலிகமாக நிறுத்தப்படும்.

ஊழியர்களின் போக்குவரத்துக்காக பல்வேறு நிறுவனங்களில் இருந்து பெறப்பட்ட அனைத்து வாகனங்களும் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு தற்காலிகமாக விடுவிக்கப்படவேண்டும் எனவும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், குறித்த அலுவலகத்தின் பாதுகாப்புக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள பொலிஸ் பாதுகாப்பு தொடர்பில் எதிர்காலத்தில் அறிவுறுத்தல் வழங்கப்படவுள்ளதாகவும் அதுவரை பொலிஸ் பாதுகாப்பை பெற்றுக்கொள்ள ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால் உள்ளூராட்சித் தேர்தல் திட்டமிட்ட திகதியில் நடைபெறுவது சந்தேகம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu

# வெளியேறத் தயாராகும் ஜேர்மனி நிறுவனங்கள்!

## இலங்கைக்கு மற்றொரு அதிர்ச்சி

கொழும்பு, பெப். 19

இறக்குமதித் தடை தொடரும் பட்சத்தில் இலங்கையில் செயற்படும் ஜேர்மன் நிறுவனங்கள், நாட்டிலிருந்து வெளியேற நிர்ப்பந்திக்கப்படும் என சில எச்சரிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க டொலர் தட்டுப்பாடு காரணமாக இலங்கை பல பொருட்களுக்கு இறக்குமதி தடை விதித்துள்ள போதிலும், தடையை தளர்த்துமாறு ஜேர்மனி அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் ஹொல்கர் சூபேர்ட் நேற்று கொழும்பில் ஊடகவியலாளர்கள் குழுவிடம் தெரிவித்ததாவது:

சில ஜேர்மன் நிறுவனங்கள் இறக்குமதித் தடை குறித்து கவலை தெரிவித்துள்ளன.

மேலும் 2 ஆண்டுகளுக்கு இறக்குமதி தடை நீடித்தால் சில நிறுவனங்கள் நாட்டை விட்டு வெளியேறலாம் என்றும் அவர் கூறினார். பல ஜேர்மன் நிறுவனங்கள் இலங்கையில் இயங்கி வருவதுடன் வாகன உதிரிபாகங்கள் உட்பட ஜேர்மன் தயாரிப்புகளை விளம்பரப்படுத்துகின்றன.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக ஜப்பானின் முன்னணி நிறுவனங்களான மிட்சுபிசி மற்றும் தாய்சேய் ஆகியவை இலங்கையில் தனது செயற்பாடுகளை குறைப்பதாக அண்மையில் அறிவித்திருந்தன. இலங்கை திவாலானதாக அறிவிக்கப்பட்டதையடுத்து, ஜேர்மனியும் இலங்கைக்கான கடன்களை வழங்குவதை நிறுத்தி வைத்துள்ளது.

எவ்வாறாயினும், சர்வதேச நாணய நிதியத்துடனான இலங்கையின் ஒப்பந்தம் அங்கீகரிக்கப்பட்டவுடன் நிலைமை மேம்படும் என்று நம்புகிறோம்.

ஜேர்மன் முதலீட்டாளர்களுக்கான ஒட்டுமொத்த வணிகச் சூழல் குறித்தும் கவலைகள் உள்ளது.

முதலீட்டுச் சபை உட்பட இலங்கை அதிகாரிகளுடன் இது தொடர்பான கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன - என்றார். (அ)



# இலங்கைக்காக இந்தியா மற்றுமொரு பிரேரணை!

## ஜி-20 மாநாட்டில் முன்வைக்கப்படும்

கொழும்பு, பெப். 19

ஜி-20 மாநாடு அடுத்த வாரம் கூடும்போது முன்வைக்கப்படும் இந்தியாவின் மற்றுமொரு பிரேரணையால் இலங்கை பயனடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பொருளாதாரத்தில் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள இலங்கை போன்ற நாடுகளுக்கு உதவ ஜி-20 நாடுகளுக்கு இந்திய அரசாங்கம் ஒரு திட்டத்தை உருவாக்கி வருவதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில் 20 நாடுகள் கொண்ட குழுவைச் சேர்ந்த நிதி அமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி தலைவர்கள் அடுத்த வாரம் பெங்களூரில் சந்திக்க உள்ளனர்.

உலகின் மிகப்பெரிய பொருளாதார நாடுகளை கொண்ட குழுவான ஜி 20 ற்கு இம்முறை இந்தியா தலைமை தங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஐக்கிய தேசிய கட்சிக்கு விரைவில் புதிய யாப்பு!

கொழும்பு, பெப். 19

புதியதொரு கட்சி யாப்பை தயாரிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு அனுமதி வழங்கியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன்தினம் கூடியபோது, இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கட்சிக்கான யாப்பை தயாரிப்பதற்காக முன்னாள் அமைச்சர் திலக் மாரப்பன, தயா பெல்பொல, ரொனால்ட் பெரேரா மற்றும் நிஷாங்க நாணயக்கார ஆகிய ஜனாதிபதி சட்டத்தரணிகளை உள்ளடக்கிய வகையில் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. (அ)

# ராஜபக்ஷ நிழல் அரசுக்கு உடன் முடிவு கட்டவேண்டும்

## சஜித் பிரேமதாஸ வலியுறுத்து



கொழும்பு, பெப். 19

ராஜபக்ஷக்களைப் பாதுகாக்கும் ஒரு ராஜபக்ஷ நிழல் அரசு உருவாகியுள்ளது, இதற்கும் மக்கள் உடனடியாக முடிவு கட்ட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

ஹரிஸ்பத்துவ தொகுதி அக்குரணை பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டு மக்களின் மாபெரும் போராட்டத்தாலேயே நாட்டை அழித்த ஜனாதிபதி, பிரதமர், நிதி அமைச்சர் உள்ளிட்ட ராஜபக்ஷ குழுவினர் வீட்டுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

ஆனால் இன்றும் நாட்டில் மாற்றமேதும் ஏற்படாதது ராஜபக்சக்களைப் பாதுகாக்கும் ஒரு ராஜபக்ஷ நிழல் அரசு உருவாகியுள்ளதாலேயே. ராஜபக்ஷக்களை ஆட்சிக்குக் கொண்டு வர நாம் ஒருபோதும் செயற்படவில்லை.

இவர்களை ஆட்சிக்குக் கொண்டு வர வேண்டும் என்று வீடு வீடாகச் சென்று பிரசாரம் செய்த சிலர், அவர்களும் ஒன்றே இவர்களும் ஒன்றே எனச் சொல்லி, தாம் நல்ல பிள்ளைகள் போல் காட்டிக்கொள்ள செயற்படுகின்றனர் - என்றார். (அ)

# தேர்தல் நடத்துமாறு வலியுறுத்தி நாளை கொழும்பில் போராட்டம்

## ஐக்கிய மக்கள் சக்தி அழைப்பு

கொழும்பு, பெப். 19

ஐக்கிய மக்கள் சக்தி நாளை திங்கட்கிழமை கொழும்பில் அரசுக்கு எதிராக மாபெரும் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளது.

இதில் அனைத்துத் தரப்பினரையும் பங்கேற்குமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. அழைப்பு விடுத்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தலை ஒத்திவைக்கும் யானை, காகம், மொட்டு மற்றும் திசைகாட்டியின் கூட்டு உபாயங்களை ஜனநாயக ரீதியில் தோற்கடிப்போம்.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை நடத்த எடுக்கும் முயற்சிகளில் தேசிய மக்கள் சக்தி ஏன் ஈடுபடுவதாக இல்லை?பின்வாங்கக் காரணம் யாது?

தேர்தலைப் பிற்போட்டால் சர்வதேச ஆதரவு கிடைக்காது போகும். நாடு மேலும் பாதாளத்திலேயே விழும்-என்றார். (அ)

# கட்டுநாயக்க விமான நிலையத்தை மேம்படுத்தவுள்ளது ஜப்பான் அரசு!

கொழும்பு, பெப். 19

இலங்கையில் கடல் மற்றும் விமான சேவைகள் துறையில் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கு ஜப்பானிய அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்கவுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் இரண்டாவது முனையத்தை அபிவிருத்தி செய்வதற்கு ஜப்பான் நிதியுதவி வழங்கவும் இணக்கம் தெரிவித்துள்ளது.

துறைமுக நடவடிக்கைகளுக்கு தேவையான ரேடார் கருவிகள் உள்ளிட்ட தொழில்நுட்ப கருவிகளும் ஜப்பானில் இருந்து கிடைக்கப் பெறவுள்ளன.

துறைமுகச் செயற்பாடுகளின் வினைத்திறனை அதிகரிக்க இது உதவும் என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிஷிகோஷி ஹிடேகிக்கும் அமைச்சருக்கும் இடையில் கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற சிநேகபூர்வ சந்திப்பில் இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. (அ)

# 6 வாரத்தைத் தாண்டியும் இதுவரை நிரப்பப்படாத தபால்மா அதிபர் பதவி

கொழும்பு, பெப். 19

தபால்மா அதிபர் ஓய்வு பெற்று 6 வாரங்கள் கடந்துள்ள போதிலும், இதுவரை அந்த வெற்றிடத்தை நிரப்ப அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என்று தபால் தொழிற்சங்கங்கள் விசனம் தெரிவிக்கின்றன.

முன்னாள் தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி ஓய்வு பெற்ற நிலையில், புதிய தபால் மா அதிபர் ஒருவர் ஜனவரி 2 ஆம் திகதி நியமிக்கப்படவிருந்தார். ஆனால், இந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு வெகுஜன ஊடக அமைச்சு இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்று தபால் தொழிற்சங்கங்கள் குற்றம் சாட்டியுள்ளன.

தற்போது, வெகுஜன ஊடக அமைச்சின் மேலதிக செயலாளர் ஒருவர் அந்த பதவியில் கடமையாற்றி வருவதுடன், அவர் அமைச்சின் மேலதிக செயலாளர் (நிர்வாகம்) பதவியில் கடமையாற்றுவதுடன், தபால்மா அதிபர் பணிகளையும் மேற்கொண்டு வருகின்றார்.

தபால் திணைக்களம் போன்ற நாடளாவிய ரீதியில் சேவைகளை வழங்கும் பாரிய திணைக்களத்தின் பிரதான பதவி வெற்றிடமாக இருப்பது அல்லது செயற்படும் உத்தியோகத்தர் மேற்படி பணிகளை மேற்கொள்வது நடைமுறைச் சாத்தியமற்றது என்றும் இலங்கை தபால் சேவை ஊழியர் சங்கத்தின் பிரதம செயலாளர் தெரிவித்துள்ளதுடன் அந்தப் பதவிக்கு ஒரு நிரந்தர அதிகாரியை விரைவில் நியமிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

நிர்வாக சேவையில் தகுந்த நபர் இல்லை என்றால் தபால் துறையின் தகுதிக்கு ஏற்ற அதிகாரி ஒருவரை நியமிக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.02.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.